2014, May 01 - 15

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/146/News/2014



# அடுத்த இந்தியப் பிரதமர் யார்?

அரசியல் தீர்வா ஆட்சி மாற்றமா?

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிடம் புதிய சிந்தனை வேண்டும்

விளையாட்டுத்துப்பாக்கி வீரர்களும் முரட்டு அரசியல் கலாசாரமும்

இனப்பிரச்சினையும் அடுத்த இந்திய அரசும்

சதி முயற்சிகள் பற்றி கிளம்பும் ஊகங்கள்

கிரிக்கெட் விளையாட்டும் தேசியவாத உணர்வுகளும்

சோனியா காந்தியின் எதிர்காலம்

| | | |
|---|---|---|
| INDIA...............IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK.............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கான சஞ்சிகை

CHUTTI KESARI

# சுட்டி கேசரி

நாளைய தினம் நம் கையில்


## இப்பொழுது விற்பனையில்

உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்
அருகிலுள்ள பத்திரிகை
முகவர்களை நாடுங்கள்




மாதம் இருமுறை வெளிவரும் சஞ்சிகை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தொடர்ந்து எழுதவிரும்புகின்ற ஒரு மிகச்சிறந்த எழுத்தாளர் புகழுக்கு எதிராக தன்னை ஓயாது பாதுகாத்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

- கபிரியேல் கார்சியா மார்குவெஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு
சமகாலம்
2014, மே 01 - 15
பக்கங்கள் - 68




10 தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கு புதிய சிந்தனை வேண்டும்
13 விளையாட்டுத் துப்பாக்கி வீரர்களும் முரட்டுத்தனமான அரசியல் கலாசாரமும்
16 இனப்பிரச்சினையும் எதிர்வரும் இந்திய அரசும்
20 சதி முயற்சிகள் பற்றிய ஊகங்கள்
23 கிரிக்கெட் விளையாட்டும் தேசியவாத உணர்வுகளும்
26 அரசியல் தீர்வா ஆட்சி மாற்றமா?
31 ஆசிய நாடுகளிடையே வலுவடையும் பிளவுகள்
34 இந்தியாவில் அதிகாரத்துக்கு வரப்போகிறவர் யார்?
40 ஜனநாயகத் திருவிழாவில் மோடி, லேடி, டாடி
46 அமெரிக்கப் படைத்தளம் அவுஸ்திரேலியாவில் வியாபிக்கின்றதா?
58 செக்ஸ் வேண்டாத இளைய தலைமுறை






*Samakalam focuses on issues that affect the lives of people of Sri Lanka, the neighbourhood and the world*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரிடமிருந்து...

# மதப்பிணக்குகளும் விசேட பொலிஸ் பிரிவும்

மதப்பிணக்குகளைக் கையாளுவதற்கு விசேட பொலிஸ் பிரிவொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இலங்கையின் பத்திரிகை ஆசிரியர்கள் மற்றும் இலத்திரனியல் ஊடக நிறுவனங்களின் தலைவர்களுடனான அலரிமாளிகைச் சந்திப்பின்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதுதொடர்பில் அறிவிப்புச் செய்த ஒரு சில தினங்களில் அமைக்கப்பட்டிருக்கும் இப்பிரிவு புத்தசாசன மற்றும் மதவிவகாரங்கள் அமைச்சு அலுவலக வளாகத்திலேயே இயங்கத் தொடங்கியிருக்கிறது.

அண்மைக்காலமாக நாட்டில் சிறுபான்மை மதங்களுக்கு எதிரான சகிப்புத்தன்மையற்ற போக்கு படுமோசமாகத் தீவிரமடைந்திருக்கும் பின்புலத்திலேயே இந்த விசேட பொலிஸ் பிரிவை நோக்கவேண்டியிருக்கிறது. இந்த மதச்சகிப்புத்தன்மையற்ற போக்கில் பிரத்தியேகமாக அவதானிக்கக்கூடியதாக ஒரு அம்சம் இருக்கிறது. குறிப்பிட்ட ஒரு குறுகிய கால கட்டத்திற்குள் சடுதியாக தென்னிலங்கையில் செல்வாக்குப் பெற ஆரம்பித்திருக்கும் பொதுபலசேனா என்ற பௌத்த பிக்குமாரின் அமைப்பு முஸ்லிம்களுக்கு எதிராக அதன் நடவடிக்கைகளை உக்கிரப்படுத்தி வந்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. முஸ்லிம்களின் கலாசார ரீதியான பழக்கவழக்கங்கள், பாரம்பரியங்களை அவமதிப்பதில் தொடங்கி அவர்களின் வணக்கத்தலங்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் மீதான வன்முறைகள் வரை இந்தக் குரோத நடவடிக்கைகளை பெருவாரியாகப் பட்டியலிட முடியும். பொதுபலசேனா பிக்குமார் தொடர்ச்சியாக இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கின்றபோதிலும், சட்டம், ஒழுங்கை நிலைநாட்டும் கடமைப்பொறுப்பைக் கொண்ட பொலிஸார் அவர்களுக்கு எதிராக எந்தவிதமான கடுமையான நடவடிக்கையையும் எடுத்ததாக இல்லை. பொலிஸாரின் இந்த மெத்தனமான போக்கு பொதுபலசேனாவுக்கு அரசியல் அதிகார உயர்மட்டத்தவரில் ஒரு பிரிவினரின் அனுசரணையும் ஒத்துழைப்பும் இருந்து வருகிறது என்று சிறுபான்மை இனத்தவர்கள் மத்தியில் இயல்பாகவே வலுவான சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அண்மையில் கொழும்பில் அமைச்சு அலுவலகம் ஒன்றை முற்றுகையிட்டு பொதுபலசேனா பிக்குமார் செய்த அமளிதுமளி உட்பட அவர்களின் பல நடவடிக்கைகள் மதப்பிணக்குகளுடன் சம்பந்தப்பட்டவை என்பதற்கு அப்பால் சட்டம், ஒழுங்கைச் சீர்குலைப்பவையாகவும் சட்டத்தின் ஆட்சிக்கு சவால் விடுப்பவையாகவும் காணப்படுகின்றன. இத்தகைய செயற்பாடுகளுக்கு எதிராக பொலிஸார் சாதாரண சட்டங்களின் கீழேயே கடுமையான நடவடிக்கைகளை எடுக்க முடியும். பொதுபலசேனாவின் அடாத்தான செயற்பாடுகளை பொலிஸார் கைகட்டிப் பார்த்துக்கொண்டிருப்பதால் அந்தப் பிக்குமார் தாங்கள் சட்டத்தில் இருந்து விடுபாட்டுரிமை பெற்றவர்கள் போன்று தங்களை நினைத்துக்கொள்கிறார்கள். சிறுபான்மை இனத்தவர்களுக்கும் மதத்தலைவர்களுக்கும் எதிராக தாங்கள் எதைச் செய்தாலும் தங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு அரசியல் உயர்மட்டமோ அல்லது பொலிஸாரோ துணிச்சல் கொள்ளப்போவதில்லை என்ற நம்பிக்கையை பிக்குமார் வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெளிவானது.

மதப்பிணக்குகளைக் கையாளுவதற்கெனக் கூறிக்கொண்டு விசேட பொலிஸ் பிரிவை அமைத்திருக்கும் அரசாங்கத்தின் செயல் பொதுபலசேனா போன்ற தீவிரவாதப் போக்குடைய அமைப்புகளுக்கு எதிராக வழமையான பொலிஸாரினால் நடவடிக்கை எடுக்க முடியாது அல்லது அவர்கள் நடவடிக்கை எடுக்கமாட்டார்கள் என்பதை பகிரங்கமாக ஒத்துக்கொள்வதற்குச் சமனானதாகும். சிங்கள அரசியல் சமுதாயம் சிறுபான்மை இனத்தவர்களினதும் மதத்தவர்களினதும் நியாயபூர்வமான அபிலாசைகளுக்கு எதிரான அதன் தவறான கொள்கைகளையும் செயற்பாடுகளையும் தென்னிலங்கை மக்கள் மத்தியில் நியாயப்படுத்துவதற்கு மகாசங்கத்தினரைக் காலங்காலமாகப் பயன்படுத்தி வந்ததன் விளைவே பொதுபலசேனா் போன்ற அமைப்புகளின் தோற்றமும் அடாவடித்தனமான செயற்பாடுகளுமாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடிதங்கள்













## இந்தியாவின் நடுநிலை

சமகாலம் இதழில் (2014, ஏப்ரல் 16- 30) என்.சத்தியமூர்த்தி அவர்கள் ''இந்தியாவின் நடுநிலை கூறும் செய்திமூலம் இந்தியாவின் நிலைப்பாட்டை விளக்கிக் கூறியுள்ளார். இதற்காக நாம் அவருக்கு நன்றி கூற வேண்டும். அதே வேளையில் இந்தியாவின் ''நடு நிலை'' முடிவை யார் எடுத்தது என்ற வினாவுக்கான விடையும் தேடியாக வேண்டும். அதாவது இந்த ''நடு நிலை'' முடிவை எடுத்தது அரசியல் தலைவர்களா அல்லது இந்திய வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்தவர்களா என்பது இன்னும் வெளிச்சத்துக்கு வரவில்லை. எனவேதான் இந்தியாவின் ''நடு நிலை'' முடிவு இன்றும் பெரும் விவாதத்துக்குரியதாக உள்ளது.

கச்சதீவு விடயத்தில் இலங்கையின் நிலைப்பாட்டுடன் உறுதியாக தொடர்ச்சியாக நின்ற காங்கிரஸ் அரசாங்கம் தனது கட்சி ஆட்சியின்போது உருவாகிய ராஜீவ்- ஜே.ஆர். உடன்படிக்கை மூலம் அரை குறையாகப் பிரசவித்த மாகாண சபைகளுக்கான 13ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதில் அதேயளவு அக்கறையையோ அல்லது உறுதிப்பாட்டையோ காட்டவில்லை. ஆனால் அதிகாரப் பரவலாக்கல் குறித்து பல வாக்குறுதிகளை அள்ளித் தந்துள்ளது.

13ஆவது அரசியல் சீர்திருத்தம் அதற்கும் மேல் அதாவது 13+ என்று பல வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் எதையுமே செய்ய முடியவில்லை என்ற உண்மையை நாம் அனைவரும் ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

இவை அனைத்தையும் மறந்து விட வேண்டிய, மறைத்துவிட வேண்டிய காலம் வந்துவிட்டது என்ற ரீதியில் இதை திசை திருப்ப வேண்டிய ஒரு நிலைமையை உருவாக்கியுள்ளனர் என்பது போல் தெரிகின்றது. எனவேதான் சத்தியமூர்த்தி அவர்களின் வாயிலாக ஒரு புது அர்த்தம் கற்பிக்கப்படுகின்றது.

அடுத்ததாக காங்கிரஸின் பதவிக்காலம் முடிவடையவிருக்கும் நிலையில் நரேந்திர மோடி அவர்களிடம் நாட்டைப் பறி கொடுக்க வேண்டிள்ளது. இந்த ஒரு பின்னணியில் நடு நிலை வகிப்பதே சிறந்த உபாயமாகும். அதேவேளையில் நரேந்திர மோடி எந்த முடிவை எடுத்தாலும் உடனே குறை கூறுவதற்கு ஒரு வழியினைக் கண்டு பிடித்தாக வேண்டும். அதற்கான சிறந்த அஸ்திரமாகவும் நடு நிலை பாத்திரம் அமையும். எமது இலங்கைத் தமிழ்த் தலைவர்கள் ஒரு விடயத்தை உணர வேண்டும்.

அதாவது இந்திய வெளிவிவகார அமைச்சில் இருப்பவர்கள் தமிழ் இனத்தைச் சார்ந்தவர்கள் அல்லர். அவர்களுக்கு இங்குள்ள மக்கள் மீது அக்கறையும் இல்லை. இந்த ஒரு நிலையில் நாம் தொடர்ந்தும்

## கிராமங்களின் பிரச்சினை

அனலைதீவு, கடலின் மத்தியில் ஓர் கிராமம் ஆய்வுக் கட்டுரை ஒரு வித்தியாசமான முயற்சி, பாராட்டுக்கள், தமிழர் தாயகப்பரப்பில் இவ்வாறான பல கிராமங்கள் பல்வேறுபட்ட சவால்களுக்கு முகம் கொடுத்துள்ளன. அவற்றையும் தேடிக் கண்டுபிடித்து சம்பந்தப்பட்டவர்களின் கவனத்துக்கு சமகாலம் கொண்டு வரவேண்டும்.

தம்பிமுத்து குருபரன்,
மாத்தளை.

விளம்பரங்களுக்கு : தொலைபேசி; 011-7767702, 011-7767703, 011-7322736

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டை நம்பி இருப்பதை விடுத்து பிற இந்திய மாநிலங்களுடனான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எமது தலைவர்களும் தமிழ்நாடு தவிர்ந்த பிற மாநிலங்களுடனான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது காலத்தின் தேவையாகும். புத்த காயா பயணங்கள் போன்று நாமும் அயோத்தி, அமரநாத், வாரணாசிக்கான பயணங்களைப் மேற்கொள்வது அவசியமாகும்.

வாரணாசியுடனான எமது தொடர்பு பல்லாயிரம் வருடங்களையுடையது. அந்தத் தொடர்பை பல்லாண்டு கால பிணைப்பை புதுப்பித்துக் கொள்வது தமிழ் மக்களினதும் தமிழ்த் தலைவர்களினதும் முன்னுள்ள முக்கிய பணியாகும்.

பொன்னம்பலம் இராமேஸ்வரன், கொழும்பு -6.

## வித்தியாதரனின் சரியான மதிப்பீடு

ராஜபக்ஷவுக்கு மன்மோகன்சிங்கின் கடைசிக் காணிக்கை என்ற டில்லிடயறி கட்டுரை மிகச் சிறப்பாகவிருந்தது. ஜெனீவா பிரேரணை மீதான இந்தியாவின் நடுநிலை தொடர்பாக பல கட்டுரையாளர்கள் பல விதமான கருத்துகளை வெளியிட்டிருந்தாலும் வித்தியாதரன் முன்வைத்த காரணங்களே உண்மையானவை. 'உள்நாட்டு அரசியலின் நெருக்குவாரங்கள் இல்லாமல் தன்னால் சுதந்திரமாக செயற்பட முடியுமாகவிருந்தால் எப்போதுமே இலங்கை ஜனாதிபதியை தன்னால் ஆதரிக்க முடியுமென்பதைக் காண்பிப்பதற்கு இச்சந்தப்பத்தை மன்மோகன்சிங் முழுமையாகப் பயன்படுத்தியிருக்கின்றார்' என்ற ஒரு சிறு பந்தியே போதும் இந்தியாவின் நடுநிலையின் சூட்சுமத்தைப் புரிந்துகொள்ள.

சரவணபவன் குந்தவை, வல்வெட்டித்துறை.

## குருட்டுத்தனமான முட்டாள்தனம்

சமகாலம் சஞ்சிகையின் கடந்த இதழின் வாக்குமூலம் பகுதியில் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் கூற்றொன்று பதிவாகியிருந்தது. ''வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் என்னை விட வயதில் மூத்தவர். அந்த அர்த்தத்தில் அவர் எனக்கு மூத்த சகோதரர். ஆனால், ஒரு முதலமைச்சர் என்ற வகையில் அவர் எனக்கு இளையவர்தான். நான் இதை அகங்காரத்துடன் கூறவில்லை'' என்று அவர் தெரிவித்திருக்கிறார். ஆனால், இவ்வாறெல்லாம் பேசுவதற்கு ''சூதுகவ்வும்'' படத்தில் விஜய் சேதுபதி சொல்வது போல இதுக்கு ஒரு குருட்டுத்தனமான முட்டாள்தனம் வேணும், ஒரு முரட்டுத்தனமான புத்திசாலித்தனம் வேணும்.

பொன்னுத்துரை ராகவன், கினிகத்தேனை.




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 02 இதழ் 21
2014, மே 01-15

A Fortnigtly Tamil News Magazine

**எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
**தொலைபேசி : +94 11 7322700**
**ஈ-மெயில்:** samakalam@expressnewspapers.lk

**ஆசிரியர்**
வீரகத்தி தனபாலசிங்கம்
(e-mail : suabith@gmail.com)

**உதவி ஆசிரியர்**
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

**பக்க வடிவமைப்பு**
எம்.ஸ்ரீதரகுமார்

**ஒப்பு நோக்கல்**
என்.லெப்ரின் ராஜ்



உண்மையில் நேர்மையானவர்கள் தங்களது செயல்களை மறைப்பதில்லை.
- எமிலி புரொன்ற

வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
**சமகாலம்**
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk

பெக்ஸ்; 011 7778752, 011-7767704, 011-2327827,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குமூலம்....


போதைப் பொருள் ஆபத்து மீண்டும் தலைகாட்ட ஆரம்பித்திருக்கிறது. இந்த ஆபத்தை அரசாங்கத்தினால் மாத்திரம் கட்டுப்படுத்துவது சிரமமான காரியம் என்பதால் பௌத்த குருமாரின் ஆதரவையும் ஆலோசனையையும் நான் வேண்டி நிற்கிறேன்.




தாங்கள் அதிகாரத்துக்கு வந்தால் மகம்புற மகிந்த ராஜபக்ஷ துறைமுகத்தை நீச்சல் தடாகமாகவும் மத்தல ராஜபக்ஷ விமான நிலையத்தை நூதன சாலையாகவும் மாற்றப்போவதாக எதிர்க்கட்சியினர் கூறுகிறார்கள். தேசபக்தர்களான மக்கள் இதற்கு ஒருபோதுமே அனுமதிக்கமாட்டார்கள்.

**ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ**

ராகுல்காந்தி வறிய மக்களின் வீடுகளுக்கும் தலித் மக்களின் வீடுகளுக்கும் செல்வது வறியவர்கள் எப்படியான தோற்றத்தில் இருப்பார்கள் என்பதைப் பார்க்கத்தான். அவருக்கு வறுமை என்றால் என்னவென்று தெரியாது. தாஜ்மகாலைக் கண்டிராதவர் ஆக்ராவுக்கு செல்வதைப் போலவே ராகுல்காந்தி வறியவர்களின் வீடுகளைத் தேடிச் செல்கிறார்.



**நரேந்திரமோடி**



புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்ட சில விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் தங்கள் இயக்கத்துக்கு புத்துயிரளிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டிருப்பதாக நாம் கேள்விப்படுகிறோம். அவ்வாறு அவர்கள் ஈடுபடுவதற்கு காரணம் சரியான புனர்வாழ்வுத் திட்டங்கள் இல்லாதமையேயாகும்.


ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினாலும் அவரது குடும்பத்தினராலும் இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான எந்தவொரு சர்வதேச விசாரணையிலும் சாட்சியமளிக்க நான் தயாராயிருக்கிறேன். போரில் ஈடுபட்ட பாதுகாப்புப் படைகளை நான் பாதுகாப்பேன். ஆனால், நாட்டின் முதல் குடும்பத்துக்கு எதிராக மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சாட்சியம் அளிப்பேன்.

**ஜனநாயகக்கட்சித்தலைவர் சரத் பொன்சேகா**

அம்பாந்தோட்டையில் ஐக்கியதேசியக் கட்சி எம்.பி.க்கள் குண்டர்களினால் தாக்கப்பட்ட சம்பவத்தை அப்பகுதி மக்களின் பிரதிபலிப்பு என்று ஜனாதிபதி ராஜபக்ஷ வர்ணித்திருக்கிறார். ஜனாதிபதியே அரசின் தலைவர். பாதுகாப்பு அமைச்சரும் அவரே. குண்டர்களின் அடாவடித்தனத்தை நியாயப்படுத்தும் ஜனாதிபதியின் போக்கு அவரே இன்றைய குண்டர் கலாசாரத்தின் ஞானத்தந்தை என்பதை வெளிக்காட்டுகிறது.



**ஐ.தே.க.எம்.பி. மங்களசமரவீர**



அரசாங்கத்துக்கு முதுகெலும்பு இருக்குமானால், அதன் மனச்சாட்சி தெளிவானதாக இருக்குமானால், விடுதலைப்புலிகளினால் இழைக்கப்பட்ட கொடூரங்களுக்காக மன்னார் ஆயரைத் தயக்கமேதுமின்றிக் கைது செய்யவேண்டும்.

**பொதுபலசேனா பொதுச்செயலாளர் கலகொட அத்தஞானசார தேரர்**

சிறியளவில் அதன் செயற்பாடுகளைத் தொடங்கிய பொதுபலசேனா இன்று நாட்டுக்கு பாரிய ஒரு அச்சுறுத்தலாக வளர்ந்துவிட்டது. விடுதலைப் புலிகள் தோற்றுவித்த அச்சுறுத்தலைவிடவும் ஆபத்தானதாக இருக்கிறது பொதுபலசேனாவின் அச்சுறுத்தல்.



**கைத்தொழில், வர்த்தக அமைச்சர் ரிஷாத் பதியுதீன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி ஆய்வு

# சரியான தருணத்தில் கொடுத்த விருது

பொதுச் சேவைக்கான இவ்வருடத்தைய புலிட்சர் விருது கார்டியன் பத்திரிகைக்கும் வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகைக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு நிறுவனம் (US National Security Agency) சட்டவிரோதமான முறையில் மேற்கொண்ட உளவு நடவடிக்கைகளை அம்பலப்படுத்தியமைக்காகவே இரு பத்திரிகைகளும் இவ்விருதைப் பெற்றிருக்கின்றன. நியூயோர்க் நகரில் அமைந்திருக்கும் கொலம்பிய பல்கலைக்கழகத்தினால் நிருவகிக்கப்படும் புலிட்சர் விருதே அமெரிக்காவில் பத்திரிகைத்துறைச் சாதனைக்காக வருடாந்தம் வழங்கப்பட்டு வருகின்ற உயரிய விருதாகும். கார்டியனுக்கும் வாஷிங்டன் போஸ்டுக்கும் இதை வழங்கியமை மிகவும் சாலப் பொருத்தமான ஒரு செயலாகும்.

அமெரிக்க மத்திய புலனாய்வு நிறுவனத்தில் (சி.ஐ.ஏ.) தொழில்நுட்ப உதவியாளராகப் பணியாற்றிய எட்வேர்ட் சினோடன் சி.ஐ.ஏ.உட்பட அமெரிக்காவின் புலனாய்வு, விசாரணை அமைப்புகள் மேற்கொண்டு வரும் சட்டவிரோதமான இரகசிய நடவடிக்கைகளை கடந்த வருட நடுப்பகுதியில் அம்பலப்படுத்தியிருந்தார் அல்லவா? அவர் அம்பலப்படுத்திய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கார்டியனும் வாஷிங்டன் போஸ்டும் தொடர்ச்சியாக பல செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருந்தன. இச்செயல் நவீன உலகில் அரசாங்க அதிகாரத்துக்கும் தனி நபர்களின் உரிமைகளுக்கும் இடையில் அதிகரித்து வருகின்ற முரண்நிலையின் மீது கவனத்தை ஈர்க்கக்கூடியதாக உலகளாவிய மட்டத்தில் கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய மிகவும் குறிப்பிடத்தக்க துணிச்சலான ஊடகத்துறை நடவடிக்கையாகும். பத்திரிகைத்துறையில் நிகழ்த்தப்படுகின்ற சாதனைகளை மதிப்பிடுவதற்கான ஒரு உலகளாவிய அளவு கோலாகவும் புலிட்சர் விருது மதிக்கப்படுகிறது. கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் உறுதியாக நிலை நிறுத்தப்பட்டிருக்கிற சமுதாயங்களிலே இப்பத்திரிகைகள் இயங்குகின்ற போதிலும் கூட, சினோடனின் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு செய்தியறிக்கைகளை வெளியிடுவதில் அவை பெரும் முட்டுக்கட்டைகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. ஆனால், அந்த முட்டுக்கட்டைகளைக் கண்டு அவை தங்கள் பணிகளில் துவண்டு விடவில்லை.

the guardian

The Washington Post

அமெரிக்க தேசிய பாதுகாப்பு நிறுவனம் ஏனைய நாடுகளின் கொள்கைகளில், அவற்றின் தலைவர்களின் நடவடிக்கைகளில் மற்றும் தனிப்பட்ட பிரஜைகளின் வாழ்வில் முன்னென்றுமே கற்பனை கூட செய்துபார்த்திருக்க முடியாத அளவுக்கு தகாத முறையில் உளவு பார்த்துக் கொண்டிருந்ததை சினோடன் அம்பலப்படுத்திய தகவல்கள் மூலம் அறியக்கூடியதாக இருந்தது. அமெரிக்கர்களினதும் ஏனைய நாடுகளின் பிரஜைகளினதும் வாழ்க்கையில் செய்யப்பட்டிருக்கக்கூடிய பரந்தளவிலான இத்தகைய ஊடுருவலின் விளைவாகக் கிளம்பிய பிரச்சினைகள் இன்னமும் கூட பொது அரங்கில் விவாதத்துக்குரிய விடயங்களாகவே இருக்கின்றன.

தேசிய பாதுகாப்பு நலன்களைக் காரணம் காட்டுவதன் மூலமாக இத்தகைய உளவு வேலைகளின் நெறிமுறையற்ற தன்மையையும் சட்டவிரோத தன்மையையும் ஒருபோதுமே நியாயப்படுத்திவிட முடியாது. இந்த விவகாரம் தொடர்பில் அமெரிக்க சமுதாயம் பிளவுபட்டிருக்கிறது. ஆனால், புலிட்சர் விருதை அரச அதிகாரத்துக்கும் தனிநபர்களின் உரிமைகளுக்கும் இடையே தெளிவான பிரிக்கும் கோடுகள் இருக்க வேண்டும் என்ற கருத்தின் ஒரு வெளிப்பாடாகக் கூட கருத முடியும்.

அம்பலப்படுத்தப்பட்ட விடயங்கள் இந்த விவகாரம் தொடர்பில் கூடுதலான அளவுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு உதவியிருப்பதுடன், அமெரிக்க தேசிய பாதுகாப்பு நிறுவனத்தினதும் தனிப்பட்ட தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் சில பிரதான தொழில்நுட்பக் கம்பனிகளினதும் பணிகளை நுண்ணாய்வுக்கு உட்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் வழிவகுத்தன. அரச அதிகாரம் அதிகரிக்கும் போக்கையும் தனிப்பட்டவர்களின் விவகாரங்களில் அரச அதிகாரத்தின் ஊடுருவல் தீவிரமடையும் போக்கையும் எங்குமே இன்று காணக்கூடியதாக இருப்பதால், இந்த விவகாரம் அமெரிக்காவுக்கு மாத்திரமல்ல, உலக நாடுகள் சகலவற்றுக்குமே பொருத்தமான ஒன்றாகும். இதற்கு முக்கியத்துவம் கொடுப்பது பிரதானமான ஒரு பொதுச் சேவையாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்



# தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் புதிய சிந்தனை வேண்டும்

**அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் வட மாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களுக்கு கூட்டாக தலைமைதாங்கினார்கள். யார் எதற்காக விட்டுக்கொடுப்புகளைச் செய்தார்கள்?**



குசல் பெரேரா

வடமாகாணசபை தெரிவுசெய்யப்பட்டு 7 மாதங்கள் கடந்துவிட்டன. பதவிப் பிரமாணங்கள் இடம்பெற்று மாகாணசபை அரசியலமைப்பு ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டதைத் தவிர, தங்களுக்கென அரசியல் அதிகார அலகொன்றை ஏற்படுத்திக்கொள்வதற்காக ஆபத்துக்களையும் பொருட்படுத்தாமல் அமோகமாக வாக்களித்த வடமாகாண மக்கள் பிரதிபலனாக எதையும் பெறவில்லை. மாகாண சபையின் உயர் மட்டம் அதிகாரப்பரவலாக்கம் தொடர்பாக சட்டநுணுக்கச் சர்ச்சைகளில் ஈடுபட்டிருக்கின்ற அதே வேளை, வடமாகாணம் முழுவதும் மீண்டும் மிலேச்சத்தன மான அடக்குமுறைக்குள்ளாகிக் கொண்டிருக்கிறது. கொழும்பு அர சாங்கம் மீண்டும் வலுவான இராணுவத் தலையீட்டுக்குத் தயாராகிக்கொண்டிருக்கிறது.

ஏழுமாதங்கள் கடந்துவிட்டபோதிலும் கூட, வடமாகாணசபை இன்னமும் மக்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்வதற்கு உகந்த ஆளுகையை ஆரம்பிக்கவில்லை. சிங்கள-தமிழ் புத்தாண்டுக் கொண்டாட்டங்களுக்குப் பிறகு ஒருவாரம் கழித்து யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழுக்களின் கூட்டங்கள் நடைபெற்றன. இவற்றுக்கு முதற்தடவையாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி)யின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தாவும் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் கூட்டாகத் தலைமை தாங்கினார்கள். இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களுக்கான கூட்டுத் தலைமை உண்மையில் முரண்பாடு கொண்டதும் எதிரெதிர் துருவமயப்பட்டதுமாகும். யார் எதற்காக விட்டுக்கொடுப்புகளைச் செய்தார்கள் என்பது அரசியல் ரீதியில் மிகவும் முக்கியமானதாகும்.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் கலந்துகொண்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் தசாப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்களாக இடம்பெயர்ந்துவாழும் மக்களுக்குச் சொந்தமான இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்கள் விடுவிக்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தினார்கள். புகழ்பெற்ற பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையை பழைய இடத்திலேயே இயங்கவைக்க வேண்டுமென்றும் அவர்கள் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டார்கள். ஆரம்பத்தில் வேறுபாடுகள் இருந்தபோதிலும் பிறகு ஈ.பி.டி.பி. யும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் தயக்கத்துடன் இணக்கத்துக்கு வந்தன. இந்த இணக்கப்பாடு கடந்த காலத்தைக் கிளறுவதற்காக அன்றி எதிர்காலத்தில் 'எமது மக்களுக்கு' உதவுவதற்கான பேச்சுவார்த்தைகளுக்கானதாக இருக்க வேண்டுமென்பதே டக்ளஸ் தேவானந்தாவின் வியாக்கியானமாக இருந்தது.

வன்னியிலும் மேலும் கூடுதலாக யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் கடந்த காலத்தை மோந்துபார்க்க எவரையும் அனுமதிக்க தேவானந்தாவினால் முடியாது. இது விளங்கிக்கொள்ளக் கூடியதே. அவரது ஆயுதப்பிரிவு (அது ஆயுதங்களைக் கையளித்ததாக ஒருபோதும் நாம் கேள்விப்படவில்லை) சட்டவிரோதமானது என்று கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் வர்ணிக்கப்பட்டிருந்தது. ஆட்கள் காணாமல் போதல், நீதி விசாரணைக்குப் புறம்பான கொலைகள், ஆட்கடத்தல்கள், பணப்பறிப்பு சம்பவங்களுக்கு அந்த ஆயுதப்பிரிவு பொறுப்பாக இருந்ததாக இருதடவைகள் குற்றஞ்சாட்டப்பட்டது. முதற்தடவையாக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் ஆணைக்குழுவினாலும் அடுத்து ஆட்கள் காணாமல் போன சம்பவங்கள் தொடர்பாக விசாரிக்க ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட குழுவினாலும் இக்குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. ஆணைக்குழுவுக்கு எதிராக மானநஷ்ட வழக்குத் தொடரப்போவதாக தேவானந்தா அச்சுறுத்தினார். எனினும் ஒருபோதுமே அதைச் செயலில் காட்டவில்லை.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரைப் பொறுத்தவரை, போருக்குப் பிறகு உயிர்தப்பிவாழும் தமிழர்களினால் எதிர்நோக்கப்படுகின்ற பிரச்சினைகளைப் பற்றிப் பேசாவிட்டால் அவர்களால் அரசியல் ரீதியில் ஒரு போதுமே உயிர்வாழ முடியாது. போரில் பொறுப்புக்கூறலுடன் சம்பந்தப்பட்ட முழு விவகாரமுமே கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் பற்றியது. வடக்கில் ராஜபக்ஷ ஆட்சியின் முன்னரங்க அமைப்பாகச் செயற்படுகின்ற தேவானந்தாவின் கட்சியைப் பொறுத்தவரை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் ஆரம்பிக்கப்படக்கூடிய எந்தவிசாரணைக்கும் ஒத்துழைப்பதில்லை என்ற அரசாங்கத்தின் தீர்மானத்துடன் ஒத்துப்போக வேண்டியிருக்கிறது. ஜெனீவாவில் இறுதியாக நடைபெற்ற மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட மூன்றாவது தீர்மானம் அதிகாரப் பரவலாக்கத்தையும் பற்றியது. அதனால், வடக்கு அரசியலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் தேவானந்தாவும் ஒருவரை மற்றவர் விஞ்சுவதற்கு எப்போதும் முயற்சிக்கும் முரண்பட்ட பங்காளிகளாகவே வாழ வேண்டியிருக்கும்.

**வட பகுதி மக்கள் தங்கள் சொந்தத்தில் மாகாண ஆட்சியொன்றைத் தெரிவு செய்வதற்கு அனுமதிக்கப்பட்டது என்று அரசாங்கம் உலகிற்குக் காட்டுவதற்கான ஒரு காட்சிப்பொருளாக மாத்திரமே வட மாகாண சபை இருக்கும் என்றே தோன்றுகிறது.**

ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் நில விவகாரம் தொடர்பில் காணப்பட்ட இணக்கப்பாடுகள் ஜெனீவாத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்ட விவகாரங்களுடன் தொடர்புபட்டதாக இருக்கின்றன. இது தேவானந்தாவைப் பொறுத்தவரை அரசியல் ரீதியில் இரண்டும் கெட்டான் நிலையாகும். இந்த நிலையைத் தடுத்து நிறுத்த வடக்கு பாதுகாப்பு கட்டளைப்பீடம் அடுத்து நடவடிக்கையில் இறங்கும். வலிகாமத்தில் நிலங்களை விடுவிப்பதென்பது ஒருங்கிணைப்புக் குழுக்களின் ஒரு யோசனையாகவே தொடர்ந்து இருக்கும், வடமாகாணசபைக்கான அதிகாரங்கள் தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கும் பாதுகாப்புப் படைகளின் தலைமைக்கும் இடையிலான முஷ்டிச் சண்டையும் அதேபோன்றே தொடரும். அரசியலமைப்பு உத்தரவாதங்கள் வடமாகாண ஆளுநருக்கு அனுகூலமாக இருப்பதால், அவரின் கட்டுப்பாட்டிலேயே நிலைவரம் இருக்கும். எனவே, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அடுத்த நடிவடிக்கை என்னவாக இருக்கும்?

வடக்கில் முதலமைச்சராக விக்னேஸ்வரன் தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் பெற்ற மகத்தான வெற்றியை அடுத்த ஆரம்ப மாதங்களில் வடக்கில் தமிழ் அரசியல் சமுதாயத்தின் மத்தியிலும் தெற்கில் அதிகாரப் பரவலாக்கலுக்கு ஆதரவானவர்கள் மத்தியிலும் ஒரு வித நம்பிக்கை ஏற்பட்டது. பேர்பெற்ற முன்னாள் உச்சநீதிமன்ற நீதியரசர் என்ற வகையில் கனதியானவரான விக்னேஸ்வரனை அரசாங்கத்தினால் பெருமளவுக்கு ஏய்ப்புச் செய்ய முடியாமல்போகும் என்று கருதப்பட்டது. ஆனாலும், சட்டத்தை வியாக்கியானம் செய்வதில் அவருக்கு இருக்கின்ற துணிவினாலும் ஆற்றலினாலும் அதிகாரப்பகிர்வு தொடர்பில் எந்தவொரு பேச்சுவார்த்தையையும் நோக்கி இந்த அரசாங்கத்தை நகரச் செய்ய முடியவில்லை. உண்மையில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தின் மூலமாக மாகாண சபைகளுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கின்றதை விடவும் வேறு எதையும் பற்றி அரசாங்கம் பேசப்போவதில்லை என்பது இப்போது தெளிவாக விளங்குகிறது. முதலமைச்சருடன் ஆலோசனை கலந்து புதிய பிரதம செயலாளரை வடமாகாணசபைக்கு நியமிப்பதாக அளித்த உறுதிமொழியை அரசாங்கம் காப்பாற்றத் தவறிவிட்டது. முன்னாள் இராணுவ அதிகாரியே மாகாண நிருவாகத்தைக்கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு ஆளுநராக தொடர்ந்தும் இருக்கப்போகிறார்.

வடபகுதி மக்கள் தங்கள் சொந்தத்தில் மாகாண ஆட்சியொன்றைத் தெரிவுசெய்வதற்கு அனுமதிக்கப்பட்டது என்று அரசாங்கம் உலகிற்குக் காட்டுவதற்கான ஒரு 'காட்சிப் பொருளாக' மாத்திரமே வடமாகாண சபை இயங்கும் என்றே இப்போது தோன்றுகிறது. அதிகாரப்பகிர்வு தொடர்பில் முன்னர் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்ட முட்டுக்கட்டை நிலையை தகர்க்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் இயலாமல் இருக்கும் நிலையில், வடக்கு மக்களிடமிருந்து என்னதான் அமோகமான ஆணையைப் பெற்றிருந்த போதிலும் கூட, வடமாகாணசபை ஒரு உருவப்பொம்மையாகவே இருக்கிறது. பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் முன்வைக்கப்போவது என்ன என்பதையும் இந்த அரசாங்கம் சொல்லப்போவதில்லை என்பதும் சந்தேகத்திற்கு இடமின்றி இப்போது தெளிவாகத் தெரிகிறது.

எனவே, வடமாகாணசபைத் தேர்தலுக்குப் பின்னரான 7 மாதங்களில் தங்களால் சாதிக்க முடியாமற் போனவற்றைச் சாதிப்பதற்கு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவர்கள் இப்போது தங்களது அரசியல் தந்திரோபாயத்தை மறுசீரமைக்க வேண்டியிருக்கிறது. போருக்குப் பின்னரான வாழ்வில் தாங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதற்காக வாக்களித்த மக்களுக்கு உருப்படியான பணிகளைச் செய்யக் கூடிய செயற்திறன்மிக்க அதிகார அலகே உடன் தேவையாகும். போரில் இருந்து தப்பிவந்தவர்கள், இடம் பெயர்ந்தவர்களுக்கான முகாம்களில் அடைக்கப்பட்ட காரணத்தால், கடந்த ஐந்து வருடங்களாக அவர்கள் நரக வாழ்க்கையே வாழ்ந்துவருகிறார்கள்.

> விட்டுக்கொடுப்பைச் செய்யக்கூடியதாகஇந்தஆட்சிக்குநெருக்குதலைக் கொடுப்பதில் உள்ள மிகப்பெரிய குறைபாடு தங்களின் அரசியல் நடவடிக்கைகளில் வடக்கு, கிழக்கு மக்களைப் பங்கேற்கச் செய்வது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினருக்கு இருக்கின்ற இயலாமையேயாகும்

விட்டுக் கொடுப்பைச் செய்யக் கூடியதாக இந்த ஆட்சிக்கு நெருக்கு தலைக் கொடுப்பதில் உள்ள மிகப் பெரிய குறைபாடு தங்களது அரசியல் நடவடிக்கைகளில் வடக்கு-கிழக்கு மக்களைப் பங்கேற்கச் செய்வதில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருக்கு இருக் கின்ற இயலாமையேயாகும். போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்றிருக்கக்கூடிய மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கத்திடம் பொறுப்புடைமையைக் கோரி நடத்தப்படுகின்ற அரசியல் செயற்பாடுகளில் என்றாலென்ன, போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார வசதிகளுடன் கூடிய மீள்குடியேற்ற ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்று விடுக்கப்படுகின்ற கோரிக்கையில் என்றாலென்ன, பயனுறுதியுடைய நல்லிணக்கம் மற்றும் மாகாண சபை க்குப் போதுமான அதிகாரப் பரவலாக்கத்துடன் கூடிய மாகாண ஆட்சிக்கான உரிமையைக் கோருவதிலென்றாலென்ன, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரின் செயற்பாடுகள் எல்லாம் அவர்களின் சொந்த வாக்குத் தளத்தின் எல்லைக்கு வெளியேயே இடம்பெறுகின்றன. கூட்டமைப்பினர் தங்களது சொந்த மக்களை அணிதிரட்டுவதில் அக்கறைகாட்டுவதை விடவும் வெளிநாட்டு அரசாங்கங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகள் மத்தியில் பிரசாரங்களைச் செய்வதிலேயே கூடுதல் நேரத்தைச் செலவிட்டிருக்கிறார்கள். அதற்கு ஒரு காரணம் தற்போதைய அரசியல் தலைமைத்துவம் வளர்ந்த அரசியல் கலாசாரமாக இருக்கக்கூடும். சகல சிவில் சமூக கட்டமைப்புகளும் நிர்மூலம் செய்யப்பட்டு அதற்குப் பதிலாக எதிர்ப்புணர்வை அனுமதிக்காத விடுதலைப் புலிகளின் கீழான ஒற்றைத் தன்மையான இரக்கமற்ற அரசியல் கலாசாரமே அதுவாகும். அதனால், இவர்களில் பலர் வெகுஜனங்கள் பங்கேற்கும் அரசியல் என்பது என்ன என்பதை அறிவதற்கான சந்தர்ப்பம் கிடைக்காதவர்கள். ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றனவென்றால் அவை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டவையாக அல்லாமல், 'உரிமைகளுக்கான' பிரசார இயக்கங்களில் சம்பந்தப்பட்ட ஒரு சில சமூக ஆர்வலர்களினால் ஏற்பாடு செய்யப்படுபவையாகவே இருக்கின்றன.

ஆட்கள் காணாமல்போன சம்பவங்கள் தொடர்பில் முன்னெடுக்கப்படும் அத்தகைய மட்டுப்படுத்தப்பட்ட போராட்ட இயக்கங்களை விடுதலைப் புலிகளுக்கு சார்பானவர்களின் தூண்டுதலுடன் வடக்கில் ஏற்பாடு செய்யப்படுகின்ற ஆர்ப்பாட்டங்கள் என்று அரசாங்கம் நாமகரணம் சூட்டக்கூடியதாக இருக்கிறது.

(33ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்



கிஷாலி பின்ரோ
ஜெயவர்தன

# விளையாட்டுத்துப்பாக்கி வீரர்களும் முரட்டுத்தனமான அரசியல் கலாசாரமும்







தென்னிலங்கை அரசியல் கலாசாரத்தில் தலைவிரித்தாடுகிற படுமோசமான கோமாளித்தனத்தையும் முரட்டுத்தனத்தையும் சித்திரைப் புத்தாண்டு கொண்டாட்ட நாட்களில் இடம்பெற்ற இரு சம்பவங்கள் தெளிவாக வெளிக்காட்டின. போரின் முடிவுக்குப் பின்னரான காலகட்டத்தில் அபிவிருத்திப் பணிகள் மற்றும் வீதிகள், நகரங்கள் அழகுபடுத்தப்பட்ட செயற்பாடுகளுக்கு மத்தியிலும் அரசியல் யதார்த்த நிலை எந்தளவுக்கு சீரழிந்ததாகவும் ஊழல் தனமானதாகவும் இருக்கிறது என்பதை இரு சம்பவங்களும் பிரகாசமாக அம்பலப்படுத்தி நிற்கின்றன.


பொதுபலசேனாவைச் சேர்ந்த பிக்குகள் தங்களின் நடவடிக்கைகளைக் கண்டனம் செய்கின்ற மகியங்கனை பிக்குவான வண.வட்டரேக விஜித தேரரால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் மகாநாட்டை முற்றுகையிட்ட சம்பவம் முதலாவதாகும். பொதுபலசேனா பிக்குமார் முஷ்டிகளை உயர்த்தியபடி எவ்வாறு அட்டகாசமாக நடந்து கொண்டார்கள். தொலைக்காட்சிகளில் நாட்டு மக்களினால் பார்க்கக்கூடியதாக இருந்தது. வில்பத்து தேசிய பூங்காவிற்குள் வடபகுதி முஸ்லிம்கள் மீள் குடியேற்றப்படுவதாக பொதுபல சேனாவினால் தெரிவிக்கப்படுகின்ற குற்றச்சாட்டுத் தொடர்பில் விளக்கமளிப்பதற்காகவே அந்தச் செய்தியாளர் மகாநாடு கூட்டப்பட்டது.


வில்பத்துவுக்குள் எந்தவிதமான சட்டவிரோத நிர்மாண நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆனால், இடம்பெயர்ந்த சில குடும்பங்கள் பூங்காவின் எல்லையோரமாகவிருக்கும் சரணாலயத்திற்குள் தற்கால குடியிருப்புகளை அமைத்திருந்தன என்று வனவிலங்கு திணைக்களம் சில தினங்களுக்கு முன்னர் தெளிவுபடுத்தியிருந்தது. பொதுபலசேனா பிக்குகள் செய்த அட்டகாசத்தினாலும் அவதூறுகளினாலும் பாதிக்கப்பட்ட பிக்குவும் ஏனையோரும் செய்த முறைப்பாட்டையடுத்து இச்சம்பவம் தொடர்பில் மாஜிஸ்திரேட் விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இனங்கள் மற்றும் மதங்களுக்கிடையி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இன்று இடம்பெறுகின்ற சம்பவங்களின் சாட்சிகளும் கொடூரங்களும் உள்நாட்டுப் போரின் முடிவுக்குப்பிறகு இலங்கை எந்த இலட்சணத்தில் இருக்கிறது என்பதை உலகுக்கு அம்பலப்படுத்துகின்றன.**







லான சௌஜன்யம் பாதிக்கப்பட்டுவிடக்கூடும் என்ற அக்கறை காரணமாகவே பொதுபல சேனா பிக்குமாரைத் தாங்கள் கைதுசெய்ய வில்லை என்று பொலிஸார் கூறினார்கள். என்ன வேடிக்கை பாருங்கள். பொதுபலசேனா வினரின் குரோத உணர்வு நிறைந்த பேச்சுகளி னால் இனங்களுக்கும் மதங்களுக்கும் இடையி லான சௌஜன்யம் பாதிக்கப்படமாட்டாது என்று கூறமுடியுமா என்ற கேள்வி இங்கு எழு கிறது. பொதுபலசேனாவைச் சேர்ந்தவர்கள் சட் டத்துக்கு அப்பாற்பட்டவர்களாகச் செயற்படுவ தற்குவசதியாக அவர்களது நடவடிக்கைகளுக்கு மேலாக போடப்பட்டிருக்கின்ற புனிதமான திரைதான் என்ன? அரசியல் உயர்மட்டத்தில் உள்ள வலிமைமிக்க நபர்களினால் பொதுபல சேனாவுக்கு வழங்கப்படுகின்ற அரசியல் அனு சரணை முற்றுமுழுதாக அம்பலப்படுத்தப்பட்டு நிற்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, இத்த கைய சம்பவங்களின் போது பொலிஸாரின் செயற்பாடுகளில் காணப்படுகின்ற முற்று முழுதான அரசியல் மயமாக்கல் குறித்து ஓய்வு பெற்ற கௌரவமான பொலிஸ் அதிகாரிகளைக் கொண்டு விசாரணை நடத்தப்பட வேண்டும்.

பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் கலகொட ஞானசார தேரர் தனது செயலாளரு டன் ஆராய்ச்சிப் பிரிவின் தலைவருடனும் சேர்ந்து பல செய்தியாளர் மகாநாடுகளை நடத் துகிறார். பொதுபலசேனா 'ஆட்களை வழிக்குக் கொண்டு வருவதற்காக கடுமையான தொனி யில் பேசுகின்ற' நடுப்பாதையைப் பின்பற்றுவ தாக அச்செய்தியாளர் மகாநாடுகளில் பிரக டனம் செய்யப்படுகிறது. சிறுபான்மை இனங் களுக்கு எதிராக பொதுபலசேனா செய்கின்ற பழிதூற்றலையும் குரோதப்பிரசாரங்களையும் கேட்கிற வாய்ப்புக் கிடைக்கும் எவராவது இரண்டகத்தனமான இந்த விளக்கத்தைக் கேட்டு 'கடுமையான தொனியென்பதன், நடுப் பாதையென்பதன் அர்த்தம் இதுதானா' என்று விழுந்துவிழுந்து சிரித்தால் அவரைக் குறைகூற முடியாது. உண்மையிலேயே, பொதுபலசேனா வின் ஆராய்ச்சிப் பிரிவின் தலைவர் என்று சொல்லப்படுகிறவரின் பணிகள் தான் என்ன என்று கேட்கத் தோன்றுகிறது. பொருத்தமான சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்கு குரோதப் பேச்சுவகைகளைச் சேகரித்து தொகுத்து வைத் திருப்பதுதான் அவரின் பணி என்று யாரும் நினைத்தால் அதில் தவறு கண்டுபிடிக்க முடியாது.

ரிஷாத் பதியுதீன் போன்ற அமைச்சர்களின் செயற்பாடுகள் ஆத்திரமூட்டும் தன்மையான வையாக இல்லை என்று இங்கு நான் கூறமுன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதாக யாரும் நினைக்கவேண்டி
யதில்லை. சில மாதங்களுக்கு
முன்னதாக மன்னார் மாஜிஸ்திரேட் நீ
தி
மன்றத்தின் மீது குண்டர்கள் மேற்
கொண்ட தாக்குதல் சம்பவத்தை மக்
கள் மறந்திருக்கமாட்டார்கள். எது
எவ்வாறிருப்பினும் சட்டவிரோத
குடியேற்றங்கள் இடம்பெற்றிருந்
தால், சட்டரீதியாக நடவடிக்கைகளை
எடுப்பதற்கு வழிவகைகள் இருக்
கின்றன. பிக்குமாரின் ஆத்திர மூட்
டும் வகையிலான இனவெறிப் பேச்சு
களில் இந்தப் பிரச்சினைக்குரிய தீர்வு
தங்கியிருக்கவில்லை.

பிரதான பௌத்த மத பீடங்களின்
மகாநாயக்கர்கள் ஏன் இந்த விடயங்
களில் மௌனம் சாதிக்கிறார்கள்?
குறைந்தபட்சம் அவர்கள் தங்கள்
கண்டனத்தைக் கூடத்தெரிவிக்க
முன்வருகிறார்கள் இல்லை. 2014
ஜெனீவா தீர்மானம் தொடக்கம்
இலங்கை சட்டக்கல்லூரியின் செயற்
பாடுகள் வரை பெருவாரியான விவ
காரங்கள் தொடர்பில் மகாநாயக்கர்
கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்து
அறிக்கைகளை விடுக்கிறார்கள்.
அவர்களிடம் ஆலோசனையும் கேட்
கப்படுகிறது. ஆனால், பொதுபலசே
னாவின் செயற்பாடுகள் தொடர்பில்
ஏன் மகாநாயக்கர்கள் தரப்பில் இந்த
இனம்புரியாத அமைதி, மௌனம்?

இரண்டாவது சம்பவம் அம்பாந்
தோட்டை துறைமுகத்தையும் மத்தல
சர்வதேச விமானநிலையத்தையும்
நேரில் பார்த்து நிலைவரங்களை
அறிந்துகொள்வதற்காக பிரதான
எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்
சியின் எம்.பிக்கள் சென்றபோது
இடம்பெற்றது. அரசாங்க ஆதரவு
அரசியல் குண்டர்கள் சாரங்களையும்
தூக்கிப் பிடித்துக்கொண்டு இந்த
எம்.பிக்கள் மீது முட்டைகளையும்
கற்களையும் வீசியதுடன் அவர்க
ளின் வாகனங்களையும் சேதப்படுத்
தினார்கள். முற்றுகைக்குள்ளான
ஐ.தே.க.எம்.பிக்களைப் பாதுகாக்
கவே தான் அங்கு சென்றதாகவும்
தனது கையில் இருந்தது உண்மை
யான பிஸ்டல் அல்ல, விளையாட்
டுத் துப்பாக்கி என்றும் அம்பாந்



தோட்டை மேயர் கூறியதாக ஊட
கங்களில் செய்தி வெளியாகியிருந்
தது. எவ்வளவு கேலிக்கிடமான விட
யம் பாருங்கள். ஐக்கிய தேசியக்கட்சி
என்னதான் உருப்படியான எதிர்க்கட்
சியாகச் செயற்படாமல் இருப்பதென்
பது வேறுவிடயம். ஆனால், அம்
பாந்தோட்டைச் சம்பவம் எமது
அரசியல் கலாசாரம் எந்தளவுக்கு கவ
லைக்குரியதாக மாறிவிட்டது என்ப
தன் தெளிவான வெளிப்பாடாகும்.

அரசாங்க ஆதரவு குண்டர்கள்
ஐ.தே.க.எம்.பிக்கள் மீது தாக்குதல்
நடத்தியபோது நடவடிக்கை எடுக்கா
மல் பொலிஸார் பார்த்துக்கொண்டி
ருந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுத்
தொடர்பில் விசாரணை நடத்தப்படும்
என்று பொலிஸ் பேச்சாளர் உறுதிய
ளித்தார். அத்தகைய விசாரணை
களின் விளைவு என்னவாக அமை
யும் என்பதைப் பொறுத்திருந்துதான்
பார்ப்போமே. இங்கு முக்கியமாக
அவதானிக்க வேண்டிய ஒரு அம்சம்
இருக்கிறது. ஏன் பொலிஸாருக்கு
எதிராக மாத்திரம் விசாரணை? பிஸ்
டலைக் கையில் ஏந்திய வண்ணம்
அடாவடித்தனத்தில் ஈடுபட்ட அம்
பாந்தோட்டை மேயரை என்ன செய்
யப்போகிறார்கள்? அவரும் பொதுப
லசேனாவில் பிக்குமாரைப் போன்று
மந்திரமான ஒரு திரையினால் பாது
காக்கப்படுகிறாரா?

முன்னய ஜனாதிபதிகளின் கீழும்
அடாவடித்தனமான பிக்குமாரும்
அரசியல் குண்டர்களும் செயற்பட்
டார்கள் என்பது உண்மைதான்.
ஆனால், அப்போதெல்லாம், இன்று
நிகழ்கின்ற அளவுக்கு மக்களின் உரி
மைகள் கீழ்த்தனமாகவும் மிலேச்சத்
தனமாகவும் துவம்சம் செய்யப்பட
வில்லை. சட்டம் முற்றுமுழுதாக
செயலிழந்ததாக நிரூபிக்கப்பட்ட
தில்லை. அடாவடித்தனங்கள் இடம்
பெற்றுக்கொண்டிருந்தபோது தாங்
கள் கைகட்டிப் பார்த்துக்கொண்டிரு
ந்ததை தொலைக்காட்சி கமராக்கள்
படம் பிடிக்கக்கூடிய அளவுக்கு
நிலைவரம் கேவலமானதாகிப்போன
தற்கு பொலிஸார் அனுமதிக்க
வில்லை. வன்முறையில் ஈடுபட்ட
வர்களுக்கு இன்றுள்ளதைப் போன்று
முழுக்க முழுக்க வெளிப்படையான
அரசியல் அனுசரணை வழங்கப்
பட்டதில்லை. அன்றைக்கும் இன்றை
க்கும் இடையே உள்ள முக்கியமான
வேறுபாடுகள் இவை.

எம்மைச் சுற்றிவர இருக்கின்ற
நிலைவரத்தின் பாரதூரத்தன்மையை,
படுபயங்கரத்தை விளங்கிக் கொண்டு
விழித்தெழ எம்மில் பலர் தயங்குகின்
றோம். இன்றைய நிலைவரத்தை
அலட்சியம் செய்வதென்பது எமக்கு
நாமே ஆபத்தை ஏற்படுத்திக் கொள்
வதற்கு ஒப்பானதாகும். இன்று இடம்
பெறுகின்ற சம்பவங்களின் கொடூரங்
களும் காட்சிகளும் உள்நாட்டுப்
போரின் முடிவுக்குப் பின்னரான
இலங்கை எந்த இலட்சணத்தில் இருக்
கிறது என்பதை உலகிற்கு அம்பலப்ப
டுத்துகின்றன. உலகம் எம்மை விச
னத்துடன் நோக்குகிறது.

அரசியல் வாழ்வில் பெரும்பா
லான அடிப்படைப் பண்பும் பழக்கவ
ழக்கங்களும் அலட்சியம் செய்யப்
படும் போது இனங்களுக்கிடை
யிலான அமைதி, சமூகங்களுக்கிடை
யிலான சமத்துவம், மற்றும் நீதி ஆகி
யவற்றை சாதிப்பதென்பது எவ்
வளவு சிக்கலானதாக இருக்கப்போகி
றது என்று இந்த சம்பவங்களைச் சுட்
டிக் காட்டி விமர்சகர்களும் அவதானி
களும் கேட்கிறார்கள். அவர்களுக்கு
எழுந்துள்ள சந்தேகம் சரியானதே. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

# இனப்பிரச்சினையும் எதிர்வரும் இந்திய அரசும்





என்.சத்தியமூர்த்தி

இந்தியாவில் தற்போது அரங்கேறிவரும் பாராளுமன்றத் தேர்தல் முடிவில் பதவியேற்கவிருக்கும் மத்திய அரசு, இலங்கை இனப்பிரச்சினையை எவ்வாறு கையாளும் என்ற எண்ணவோட்டம், இந்த இரு நாடுகளில் மட்டுமல்ல, சர்வதேச அரங்கிலும் மிகக் கூர்மையாகப் பார்க்கப்படும். காரணம், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள், புதிய இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கையின் ஒரு பாகமாகவே இலங்கைப் பிரச்சினையை நோக்கும். அந்த விதத்தில், ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்கா முன்வைத்த தீர்மானத்தின் மீதான வாக்களிப்பை தற்போதைய மன்மோகன் சிங் அரசு புறக்கணித்தது வெறும் கண்துடைப்பா, அல்லது வெளியுறவுக் கொள்கை குறித்து உள்நாட்டு அரசியலுக்கு அப்பால் இந்திய ஆளுமை மற்றும் 'ஐயம் தெளிந்த தேசிய நலன்' ('enlightened selfinterest') குறித்த வெளிப்பாடா என்பது அப்போதே தெளிவு பெறும்.

அரசியல் ரீதியாக, இந்தியத் தேர்தலின் முடிவுகள் மூன்று அல்லது நான்கு விதங்களில் ஒன்றாகவே இருக்கும். தற்போதைய வாக்குக் கணிப்புகளின் அடிப்படையில், பாரதீய ஜனதாக் கட்சி (பா.ஜ.க) பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி தலைமையில் அந்தக் கட்சியோ அல்லது தேசிய ஜனநாயகக் கூட்டணியோ (தே.ஜ.கூ) பதவியில் அமரலாம். அல்லது தற்போது ஆளும் காங்கிரஸ் கட்சியே புதிய பிரதமரின் கீழ் ஆட்சி அமைக்கலாம். அல்லது, இந்த இரு தேசிய கட்சிகளின் ஆதரவுடன் மூன்றாவது அணி பிரதமர் ஒருவர் பதவி ஏற்கலாம். அவ்வாறாயின், தேசிய அளவில் தேய்ந்து போன இடதுசாரிகளின் ஆதரவு அந்த அரசிற்கு இருக்குமா என்பதும் மூன்றாம் அணியின் எண்ணிக்கையைப் பொறுத்தே இருக்கும்.

இது எப்படி இருந்தாலும், ஜெனீவா



பாரதிய ஜனதாவின் தேசியத்தலைமையின் இலங்கை இனப்பிரச்சினை குறித்த கருத்துக்கள் தற்போதைய மத்திய அரசின் கருத்துக்களை ஒத்தவையாகவே இருக்கின்றன. தேசிய அளவில் அந்தக் கட்சியின் ஒரு தலைவர் என்ற முறையில் சுப்பிரமணிய சுவாமி மட்டுமே ஜெனீவா வாக்கெடுப்பில் இந்தியாவின் நடுநிலை குறித்து கருத்து தெரிவித்தார். அந்தக்கருத்தும் இலங்கை அரசுக்கு ஆதரவான நிலைப்பாட்டையே பிரதிபலித்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்கு புறக்கணிப்பிற்குப் பின்னர் இந்திய அரசின் இலங்கை குறித்த கொள்கை முடிவுகளை வரன்முறை செய்வதில் உள்ள முக்கிய பங்கு, அரசியல் தலைமையில் இருந்து வெளியுறவுத் துறை அமைச்சகத்திற்கு மீண்டும் மாறிவிட்டது என்பது தெளிவாகியுள்ளது. தேர்தல் கால பிரசாரத்தின் அடிப்படையில், பா.ஜ.க, காங்கிரஸ் மற்றும் இருவேறு கம்யூனிஸ்ட் கட்சிகளின் தலைமைகள் இந்த அதிகாரபூர்வ முடிவிற்கு எதிர்க் கருத்துச் சொல்லவே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இன்னமும் சொல்லப்போனால், நரேந்திர மோடி உட்பட்ட பா.ஜ.க. தேசிய தலைவர்கள் எவருமே இலங்கைக் கொள்கை குறித்து மட்டும் மத்திய அரசைக் குறைகூறவில்லை என்பதே உண்மை. தேர்தல் பிரசாரம் சூடுபிடிப்பதற்கு முன்னர் இரண்டு முறை தமிழ்நாட்டிற்கு விஜயம் மேற்கொண்ட நரேந்திர மோடி, இனப்பிரச்சினையைத் தீர்ப்பது குறித்து பொத்தம் பொதுவாக சில கருத்துகளை முன்வைத்தார். இவை அரசியல்வாதிகளின் கருத்தாக காட்சியளிக்கவில்லை. மாறாக, இலங்கைத் தமிழர் கருத்தைப் பிரதிபலிக்கும் அறிவுஜீவிகளின் மனநிலையையே வெளிப்படுத்தியது. அதாவது, கள நிலைக்கு ஏற்ப, இலங்கையில் அனைத்து சாராருக்கும் ஏற்புடைய ஒரு கருத்தாக அதனைக் கருத முடியவில்லை.

பா.ஜ.க. தேசிய தலைமையின் இனப்பிரச்சினை குறித்த கருத்துகளும் தற்போதைய மத்திய அரசின் கருத்தை ஒத்தே உள்ளன என்பதே உண்மை. தேசிய அளவில் அந்தக் கட்சியின் தலைவர் என்ற முறையில் கலாநிதி சுப்பிரமணிய சுவாமி மட்டுமே ஜெனீவா வாக்கெடுப்பு புறக்கணிப்பு குறித்து கருத்துத் தெரிவித்தார். அந்தக் கருத்தும், எதிர்பார்த்தது போல், இலங்கை அரசு ஆதரவு நிலையையே பிரதிபலித்தது. அதன் பின்னர், தமிழ் நாட்டில் குறிப்பாக தேர்தல் பிரசாரம் செய்த நரேந்திர மோடி உட்பட்ட பா.ஜ.க. தலைவர்கள் எவருமே, இந்தக் கருத்துக்கு ஆதரவு தெரிவிக்கவில்லை என்றாலும், அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இன்னும் சொல்லப்போனால், தமிழ் நாட்டின் திராவிடக் கட்சிகளின் அரசியலை ஒத்து, ஜெனீவாப் புறக்கணிப்பைக் கண்டனம் செய்த தமிழ் நாடு பா.ஜ.க தலைவர் பொன். ராதா கிருஷ்ணனும் பின்னர் வாய்மூடி




**2012-13 ஜெனீவாவில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்திற்கு இந்தியா அளித்த ஆதரவு வாக்கு, பிரதமர் மன்மோகன் சிங்கின் கொழும்பு பொது நலவாய மகாநாட்டு பகிஷ்கரிப்பு எல்லாம் சிதம்பரத்தின் தனிமனித முயற்சியால் மட்டுமே நடந்தேறியவை**

மௌனி ஆகிவிட்டார். இடைப்பட்ட காலத்தில், அவர் உதிர்த்த சில 'பொன்-மொழிகளை' சமன் செய்வது போல், தேசியத் தலைவர்களில் ஒருவரான வெங்கையா நாயுடு, இனப்பிரச்சினைக்கு 'ஒருங்கிணைந்த இலங்கை' என்ற தத்துவத்தின் அடிப்படையிலேயே முடிவு காணப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

இது, பா.ஜ.க-வில் தேசிய மற்றும் மாநில அளவுகளில் உள்ள கொள்கைத் தெளிவின்மையை மட்டும் காட்டவில்லை. கட்சியின் மாநிலத் தலைமைக்கு தேசிய அளவிலான கொள்கை முடிவுகள் எடுப்பதில் உள்ள தெளிவின்மையையும், அதனைச் சரிசெய்யும் கடமை தேசிய தலைமைக்கு உள்ளதையுமே வெளிக்கொணர்ந்தது. இந்த நிலைமையே தற்போது, மற்ற தேசியக் கட்சிகளான காங்கிரஸ் மற்றும் கம்யூனிஸ்ட் தலைமைகளிலும் காணப்படுகிறது என்பதே உண்மை.

### 'சிதம்பர ரகசியம்'

மத்திய அரசின் தற்போதைய நிலை அரசியல்வாதிகளின் தலையீட்டை அனுமதிக்காத கொள்கை முடிவுகளின் வெளிப்பாடே. இனப்பிரச்சினை குறித்து, கடந்த பத்து ஆண்டுகளில் தி.மு.க, அ.இ.அ.தி.மு.க என்ற இரு பெரும் திராவிடக் கட்சிகளும் வைகோ, ராமதாஸ், விஜய்காந்த், திருமாவளவன், நெடுமாறன், சீமான் ஆகியோர் அதீதமாக குரல் எழுப்பினாலும் உண்மையில் உருப்படியாக ஏதாவது 'சாதித்தவர்' (?) என்று கூற வேண்டுமானால், அந்த 'பெருமை'(!) மத்திய அமைச்சர் ப. சிதம்பரத்தையே சாரும். மே 2009-இல் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் கோரிய 'போர் நிறுத்தம்' ஆகட்டும், பின்னர் 2012-13 ஜெனீவா வாக்கெடுப்புகள் ஆகட்டும், பிரதமர் மன்மோகன் சிங் பொதுநலவாய மகாநாட்டைப் புறக்கணித்தது ஆகட்டும். இவை அனைத்தும் சிதம்பரத்தின் தனி மனித முயற்சியால் மட்டுமே நடந்தது என்பதே உண்மை. 'இவை அனைத்துமே இந்தியாவின் நலம் கருதி செய்யப்பட்டதா?' என்று கேட்டால், 'இல்லை' என்ற பதிலே கிடைக்கும். அதுவே சரியான கணிப்பாகவும் இருந்திருக்கும். இன்னும் சொல்லப்போனால், கடந்த 1986-ஆம் ஆண்டே, அப்போதைய பிரதமர் ராஜீவ் காந்தி அமைச்சரவையில் அங்கம் வகித்த சிதம்பரம் முன்வைத்த சில கருத்துகளே பின்னர் இந்திய-இலங்கை ஒப்பந்தமாக உருவெடுத்தது எனலாம். பின்னர், ஜனாதிபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மஹிந்த ராஜபக்ஷவின் இந்தியப் பயணங்களின் போதும், அவர் அதிரடியாகத் தலையிட்டு இலங்கைத் தமிழ் மக்களுக்காக சிலபல கருத்துகளை முன்வைத்து, அதனைச் செயற்படுத்தவும் முயற்சியெடுத்து அதில் வெற்றியும் கண்டார்.

ஆனால், சிதம்பரத்தின் இன்றைய அரசியல் நிலைமை என்ன? இனப்பிரச்சினையில் தமிழர்களின் எதிரி என்று புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களால் முத்திரை குத்தப்பட்டு, தமிழ் நாட்டில் உள்ள அவர்களது கைபாவைகளின் அர்த்தமற்ற கூக்குரல்களால் அரசியலில் இருந்தே ஓரம் கட்டப்படும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளார். 'அடுத்த இந்தியப் பிரதமர்?' என்று மேலை நாட்டு பத்திரிகைகளால் முன்னிறுத்தப்பட்ட அவர், தற்போது தேர்தல் அரசியலில் இருந்தே ஒதுங்கிவிட்டார். கடந்த காலங்களில், வேறு சில காரணங்களுக்காக அரசியலில் இருந்து ஒதுங்கிய நரசிம்ம ராவ் பின்னர் நாட்டின் பிரதமர் ஆனார் என்பது வேறு விடயம். அதற்கு, விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டது வழி வகுத்தது என்பதும் வேறு விடயம்.

இந்திய இறையாண்மை, இந்தியாவின் நன்மை ஆகியவற்றை மனதில் நிறுத்திப் பார்த்தால், அமைச்சர் சிதம்பரம் எடுத்த முயற்சிகள் தவறானவை. சில சமயங்களில் மன்னிக்க முடியாததும் கூட. ஆனால், அவரை உரிய வழியில் பயன்படுத்திக் கொள்ளாத, பயன்படுத்திக் கொள்ளத் தெரியாத புலம்பெயர்ந்தோரின் அறிவின்மையை நம்பி, இலங்கை வாழ் தமிழ்த் தலைமை தங்கள் மக்களின் எதிர்காலத்தோடு விளையாடுவது வருந்தத்தக்க விடயம். அதை விடக் கொடுமை, தங்களது அறிவின்மையின் காரணமாக, இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக இருந்த, தமிழ் நாட்டில் இருந்து சென்ற ஒரே மூத்த தலைவரை எதிர்த்து தேர்தல் அரசியல் செய்தது, புலம்பெயர்ந்தோரின் இமாலய தவறு. இன்னும் சொல்லப் போனால், இலங்கைத் தமிழ் இனத்திற்கே செய்த மிகப்பெரும் துரோகம் என்று கூடச் சொல்லலாம்.

## கம்யூனிஸ்டுகளின் கண்துடைப்பு அரசியல்

அந்த வகையில், தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சிகளில், வலது கம்யூனிஸ்ட் தலைவர்களான டி.ராஜா மற்றும் தா.பாண்டியன், அதிரடியாக இலங்கைத் தமிழர்கள் ஏன், விடுதலைப்புலிகள் இயக்கத்தின் ஆதரவு நிலைப்பாட்டைக் கூட எடுத்தார்கள். கடந்த 2009-ஆம் ஆண்டு இந்தியப் பாராளுமன்றத் தேர்தல் சமயத்தில், அவர்கள் அளித்த நம்பிக்கையை நம்பிய விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் காணாமலே போனார்கள் என்பது வருத்தப்பட வேண்டிய உண்மை. தற்போதைய தேர்தலில் அவர்கள் போன்றோரின் வாக்குறுதியை நம்பி முதலமைச்சர் ஜெயலலிதாவின் அ.இ.அ.தி.மு.க கட்சியுடன் கூட்டணி அமைத்த இரு கம்யூனிஸ்டுகளின் தேசிய தலைமைகளும் மூக்கறுபட்டுள்ளன என்பதே உண்மை.

தா.பாண்டியன் போன்ற தமிழ்நாடு கம்யூனிஸ்டுகளின் கண்துடைப்பு அரசியல் காரணமாக, இனி அவர்களது அறிவுரையை ஏற்று, அந்தக் கட்சிகளின் மத்திய தலைமைகள் செயற்படும் என்று எதிர்பார்க்க முடியாது. அதுபோன்றே தேர்தல் பங்காளியான வைகோவை நம்பியோ, அல்லது முதல்வர் ஜெயலலிதாவின் கூற்றுப்படியோ அல்லது தி.மு.க தலைவர் கருணாநிதியின் கருத்துக்கு மதிப்புக் கொடுத்தோ இந்திய அரசின் இலங்கை சார்ந்த கொள்கைகள் வகுக்கப்படமாட்டாது என்பதே உண்மை.

இவர்கள் எல்லோரும் இவ்வாறானால், நாட்டின் பிற பகுதிகளில் உள்ள மாநிலக் கட்சிகளின் இனப்பிரச்சினை குறித்த நிலைப்பாட்டையும் இலங்கைத் தமிழ் அரசியல் மற்றும் சமுதாயத் தலைமைகள் உணர்ந்து செயற்பட வேண்டிய கட்டாயம், இரு நாடுகளிலும் தோன்றியுள்ளது. கடந்த 2013-ஆம் ஆண்டு ஜெனீவா வாக்களிப்பு மத்தியில், அன்று ஆளும் காங்கிரஸ் கூட்டணியில் அங்கம் வகித்த தி.மு.க.வின் நிர்ப்பந்தத்தாலும், அமைச்சர் சிதம்பரத்தின் பின்பலத்துடனும் முன்வைக்கப்பட்ட பாராளுமன்றத் தீர்மானம் என்ற கருத்தையே வடநாட்டு மாநிலக் கட்சிகள் முழுவதுமாக ஓரம் கட்டின.

அந்தக் கட்சிகள் அனைத்தையும் பொறுத்தவரையில், தமிழ்நாடு கட்சிகளின் 'இனப்பிரச்சினை' அரசியலை விட, நாட்டின் பாதுகாப்பும், இறையாண்மையும், இலங்கை அரசுடனான நல்லுறவுமே முக்கியம் என்ற நிலைப்பாட்டை எடுத்தன. இதில், பா.ஜ.க.வும் முக்கிய பங்கு வகித்தது. அன்று தொடங்கி இன்று வரை அவர்களுடைய நிலைமை மாறும் வகையில் களநிலை அமையவில்லை என்பதே உண்மை. மாறாக, இலங்கையில் இருந்து வரும் விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் புத்துயிர் பெறுகிறது என்பது போன்ற செய்திகள், அவர்களைக் கலக்கத்தில் ஆழ்த்தும் என்பதே உண்மை.

## அமெரிக்காவின் 'சுய ரூபம்'

இந்திய அரசியல் நிலைமை இவ்வாறானால், ஜெனீவாவில் இலங்கை அரசு எதிர்ப்புத் தீர்மானத்திற்கு முன்னிலை வகித்துவரும் அமெரிக்காவும், 'பொறுப்புக் கூறல்' பிரச்சினையில் தனது 'சுய ரூபத்தை' காட்டத் தொடங்கியுள்ளதோ என்ற எண்ணம் தோன்றியுள்ளது. இது குறித்து அண்மையில் கருத்துத் தெரிவித்த அமெரிக்க இராஜாங்க அமைச்சகத்தின் உயர் அதிகாரி நிஷா பிஸ்வால், 'பொறுப்புக் கூறல்' மற்றும் அரசியல் தீர்வு குறித்த பிரச்சினைகளில் இலங்கை அரசு முன்னேற்றம் காண்பித்தால், இரு நாடுகளிடையே இராணுவ உறவுகள் மீண்டும் துவங்கப்படும் என்று கூறியுள்ளார்.

இது இலங்கை அரசுக்கு சிறிது ஆறுதலை அளிக்கும் விடயம். காரணம், ஜெனீவாத் தீர்மானம் முன்வைக்கப்பட்ட 2012-ஆம் ஆண்டு தொடக்கம், இலங்கை அரசு தரப்பினருக்கு, அமெரிக்காவின் தமிழர் பிரச்சினை மீதான அபரிமிதமான ஆர்வம் அல்லது ஆர்வக்கோளாறு - உண்மை இல்லை என்ற எண்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து வந்துள்ளது. ஆனால், அதற்கான உண்மையான காரணம் என்னவென்று புரியாமலே இருந்தது என்று செய்திகள் குறியிட்டுக் காட்டின. இப்போது நிஷா பிஸ்வால் கூற்றிலிருந்து, இலங்கை அதிகாரவர்க்கம் நிம்மதிப்பெருமூச்சு விட்டுக்கொள்ளலாம். தங்களது பிடிவாதத்தின் காரணமாக அமெரிக்கப் பூனை தனது தலையை வெளியே காட்டிவிட்டது என்று பெருமிதம் கூட அடையலாம்.


நிஷா பிஸ்வாலின் பேச்சின் தன்மையை வைத்து, இந்தியாவின் ஜெனீவா வாக்கு பகிஷ்கரிப்பு, அமெரிக்காவை எந்த அளவிற்குப் பாதித்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. எங்கே இலங்கை அரசை, இறையாண்மை கொள்கை அடிப்படையில் இந்தியா ஆதரிக்கத் தொடங்கி விட்டால், ஜெனீவாவில் அமெரிக்க பருப்பு வேகாதோ என்ற கவலை அந்த நாட்டிற்குத் தோன்றியுள்ளது என்றே இதனைக் கொள்ள வேண்டும்.

இலங்கையை மிரட்டி, இராணுவ உறவுகளை தனது போக்கிற்கு அமைத்துக் கொள்ளலாம் என்று கருதி வந்திருந்த அமெரிக்கா, இன்று தானாகவே முன்வந்து, தனது எதிர்பார்ப்பை பொது மேடையில் அரங்கேற்றியுள்ளது என்றே இதனைக் கொள்ள வேண்டும். அதாவது இலங்கையுடனான அரசு ரீதியான உறவுகள் சாதாரணமாக இல்லாத நிலையில், தனது எதிர்பார்ப்பை பொது மேடையில் கோடிட்டுக் காட்டியதன் மூலம், அது குறித்த இலங்கை அரசின் பதிலை அமெரிக்கா எதிர்பார்க்கிறது என்றே இதனைக் கொள்ள வேண்டும். இலங்கை அரசும் வரவேற்கத்தக்க விதத்தில் பதில் அளித்தால், அமெரிக்காவைப் பொறுத்தவரையில், 'பொறுப்புக் கூறல்' பிரச்சினை கூட பின்னுக்குத் தள்ளப்படும் வாய்ப்புள்ளது.

தற்போது அமெரிக்க இராஜாங்க அமைச்சராக இருக்கும் ஜோன் கெரி, இந்த ஆண்டு, ஜெனீவா வாக்கெடுப்பின் முன்னாலும் பின்னாலும், இலங்கை அரசு 'பொறுப்புக் கூறல்' விடயத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று அழுத்தம் கொடுத்து வந்துள்ளார். ஆனால், 2009-ஆம் ஆண்டு 'இனப்போர்' முடிவிற்கு வந்த பின்னர், 'பொறுப்புக் கூறல்' பிரச்சினையில் அமெரிக்காவின் நிலைமை குறித்து அந்த நாட்டின் செனட் சபையின் வெளியுறவுக் கொள்கை குழுவின் தலைவராக இருந்த ஜோன் கெரி தலைமையிலான துணைக் குழு, இந்த விடயத்தில் அமெரிக்காவின் பாதுகாப்புக் கொள்கைகளில் இலங்கையின் பங்களிப்பைப் புறக்கணித்துவிடக்கூடாது என்று கோடிட்டுக் காட்டியிருந்தது.

அந்த வகையில், செனட் பதவியில் இருந்து, இராஜாங்க அமைச்சராக பதவியேற்ற ஜோன் கெரி, அமெரிக்காவின் பாதுகாப்புக் கொள்கை விடயத்தில் இலங்கையை ஆட் வைப்பதற்கு மட்டுமே ஜெனீவாவையும், 'பொறுப்புக் கூறல்' பிரச்சினையையும், தமிழ் மக்களையும் பகடைக்காயாக மட்டுமே பயன்படுத்தியதோ என்றே எண்ணத்தோன்றுகிறது.

இதுவும், புலம்பெயர்ந்தோர் உட்பட்ட இலங்கைத் தமிழர் தலைமைகளுக்கு அடிக்கப்பட்டுள்ள எச்சரிக்கை மணி! ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

கலாநிதி ஜெஹான் பெரேரா



# அரசியல் பேச்சுவார்த்தை இல்லாத சூழ்நிலையில் கிளம்பும் சதி முயற்சிகள் பற்றிய ஊகங்கள்

**பொதுநலவாய செயலகத்திற்கு வழங்கப்படுகின்ற நிதி உதவிகளை அரசியல் கருவியாகப் பயன்படுத்தி அதன் மூலமாக உறுப்பு நாடுகளை பணயம் வைக்கும் கைங்கரியத்தில் கனடா ஈடுபட்டிருப்பதாக இலங்கை அரசாங்கம் குற்றம் சாட்டுகிறது. புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தை திருப்திப் படுத்துவதற்கு முயற்சிக்கிறது என்பதே இக்குற்றச்சாட்டின் அர்த்தம்**

சர்வதேச சதி முயற்சிகள் பற்றிய ஊகங்கள் அரசாங்கத்திற்குள் வலுப்பெற்றுக்கொண்டு வருகின்றன. பொதுநலவாய அமைப்பின் தலைவராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவியில் இருக்கும் காலகட்டத்துக்கு அதற்கான நிதியுதவியை நிறுத்துவதற்கு கனடிய அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானத்துக்கு அரசாங்க ஊடகங்கள் கணிசமான முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. இலங்கையில் நடத்தப்பட்டது என்ற காரணத்துக்காக 2013 நவம்பர் பொதுநலவாய நாடுகளின் உச்சிமகாநாட்டை உத்தியோகபூர்வமாக பகிஷ்கரித்த இரு நாடுகளில் கனடா ஒன்று. உச்சிமகாநாட்டை நடத்திய நாடு என்ற வகையிலும் தற்போது பொதுநலவாய நாடுகள் அமைப்பின் தலைமைப் பொறுப்பைத் தன்வசம் வைத்திருக்கும் நாடு என்ற வகையிலும்,



மனித உரிமைகள், அரசியல் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலுடன் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் அர்த்தபுஷ்டியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய கடப்பாடு இலங்கைக்கு இருக்கிறது என்பதே கனடாவின் நிலைப்பாடாகும். ஆனால், இந்த விவகாரங்களில் எந்தவொன்றிலுமே முன்னேற்றத்தைக் காண்பதற்கு இலங்கை தவறிவிட்டது.

பொதுநலவாய செயலகத்துக்கு சுயாதீனமாகச் செய்யப்பட்டு வருகின்ற நிதியுதவி பங்களிப்பை தேர்தல் நிர்ப்பந்தங்களின் விளைவான தூண்டுதல்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு அரசியல் கருவியாகப் பயன்படுத்தி அதன் மூலமாக பொது நலவாய அமைப்பின் உறுப்பு நாடுகளை பணயம் வைக்கும் ஒரு கைங்கரியத்தில் கனடா ஈடுபட்டிருப்பதாக இலங்கை அரசாங்கம் குற்றஞ்சாட்டியிருக்கிறது. இலங்கைக்கு விரோதமான பிரிவினைவாத நிகழ்ச்சித் திட்டமொன்றினால் தூண்டப்பெற்ற புலம்பெயர் இலங்கைத் தமிழர் சமூகத்தை (இவர்களில் பெரும் எண்ணிக்கையானவர்கள் கனடாவில் வாழ்கிறார்கள்.) திருப்திப்படுத்துவதற்கு கனடா முயற்சிக்கின்றது என்பதே இலங்கையின் குற்றச்சாட்டின் அர்த்தமாகும். உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்றிருப்பதாகக் கூறப்படுகின்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பாக விசாரிக்க சர்வதேச விசாரணைக் கட்டமைப்பு ஒன்றை அமைக்க வேண்டுமென்று நெருக்குதல்களைக் கொடுப்பதில் புலம்பெயர் தமிழர் சமூகமே முன்னணியில் நின்று செயற்படுகிறது. புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் செயற்படுகின்ற 16 அமைப்புகளை பயங்கரவாதத்துக்கு ஆதரவானவை என்று கூறி தடை செய்த தனது செயலை இலங்கை அரசாங்கம் நியாயப்படுத்தவும் இதுவே உதவுகிறது.

விடுதலைப் புலிகள் இயக்கத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துக்கு மீண்டும் புத்துயிரளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறுவதன் மூலமாகவும் அரசாங்கம் புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மீதான தனது தடையை மேலும் நியாயப்படுத்துவதில் நாட்டம் கொண்டிருக்கிறது. 2009 மேயில் போர்க்களத்தில் விடுதலைப் புலிகளின் இராணுவ இயந்திரம் நிர்மூலம் செய்யப்பட்டு விட்டபோதிலும், அந்த இயக்கத்தை நிலைநிறுத்தி வைத்திருந்த கோட்பாடு இன்னமும் தொடரவே செய்கிறது. உண்மையிலேயே, இந்தப் பிரிவினை வாதக் கோட்பாடும் தமிழ் ஈழமும் விடுதலைப் புலிகளுக்கு முன்னதாகவே வந்தவையாகும். ஜனநாயக தமிழ் அரசியலில் தான் அவை பிறந்தன. விடுதலைப் புலிகளுக்குப் பிறகும் அவை தொடருகின்றன. தற்போது இலங்கைக்கு வெளியில் உள்ளவர்கள் மாத்திரமே இந்தக் கோட்பாட்டுக்கு ஆதரவாகப் பகிரங்கமாக குரல் கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. ஆனால், அதன் விதைகள் உள்நாட்டிலும் தொடர்ந்து இருக்கவே செய்கின்றன. பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வொன்று காணப்படும்வரை அந்த விதைகள் நிலைக்கவே செய்யும். ஆனால், பிரிவினைவாதத்தின் விதைகள் பற்றி அரசாங்கம் கவலை கொண்டுள்ள அதேவேளை, அரசியல் தீர்வொன்றின் ஊடாக பிரச்சினையின் அடிப்படைக்காரணிகளை இல்லாமற் செய்வதில் அது அக்கறைகாட்டுவதாக இல்லை.

விடுதலைப் புலிகள் இயக்கத்தை மீள்விப்பதற்கான சாத்தியப்பாடு பற்றி அரசாங்கத்திற்குள்ளும் புலனாய்வு சேவைகள் மத்தியிலும் வலுவான கவலை காணப்படுகிறது. விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று சந்தேகிக்கப்படுபவரால் பொலிஸ்காரர் ஒருவர் சுடப்பட்ட சம்பவம், அதையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு மற்றும் தேடுதல்களில் அறுபதுக்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டமை, அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் துப்பாக்கிச் சமரில் மூன்று புலிகள் இயக்க உறுப்பினர்கள் கொல்லப்பட்ட சம்பவம் ஆகியவை விடுதலைப் புலிகளை மீள்விக்க புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் ஈடுபாட்டுடனும் நிதியுதவியுடனும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகக் குற்றச்சாட்டு தெரிவிக்கப்படும் பின்புலத்தில் நடந்தேறியுள்ளன. கொல்லப்பட்டவர்கள் புலம்பெயர் தமிழ்ச் சமூகத்துடன் தொடர்பைக் கொண்டிருந்ததாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. ஆனால், இந்த முழுச்சம்பவங்களும் தொடர்பில் நிலவக்கூடிய இருளார்ந்த தன்மை வடக்கில் பீதியும் நிச்சயமற்ற நிலையும் கொண்ட ஒரு சூழலைத் தோற்றுவித்திருக்கின்றன. இறுதியில் என்னவென்றால், போர் முடிவுக்கு வந்து ஐந்து வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னதாகவே நல்லிணக்கத்துக்கும் நிலையான பாதுகாப்புச் சூழலுக்குமான வாய்ப்புகள் அருகிக்கொண்டு போவதையே காணக்கூடியதாக இருக்கிறது.

இனநெருக்கடிகளைத் தீர்த்துவைப்பதென்பது சிரமமான காரியம் என்பதை அரசியல் விஞ்ஞானிகள் நீண்டகாலமாகவே நிரூபிக்கக்கூடியதாக இருந்திருக்கிறது. ஆனால், ஒரு தரப்பை மற்றைய தரப்பு முற்றுமுழுதாக இராணுவ ரீதியாக வெற்றி கொள்ளக் கூடியதாக இருந்த வெகு சில நெருக்கடிகளைப் பொறுத்தவரை (பேச்சுவார்த்தை மூலம் இணக்கத் தீர்வு காணப்பட்ட பிரச்சினைகளை விடவும்) நிலைவரம் கூடுதலான அளவுக்கு பொதுவில் உறுதியானதாகவே இருக்கிறது. விடுதலைப் புலிகளைத் தோற்கடித்ததன் மூலமாக சாத்தியமற்றதாகத் தோன்றியதைச் சாதித்துக்காட்டிய இலங்கை துரிதமாக சமாதானத்தைக் காண்பதற்கு அதற்கு இருக்கக்கூடிய வாய்ப்புகளை இழப்பதானால் அது அபத்தமானதாகும். போர்க்களத்தில் விடுதலைப் புலிகளை முற்றுமுழுதாகத் தோற்கடித்த பிறகு, பெரிய பங்கொன்றை வகிப்பதற்கு இராணுவம் மீண்டும் அழைக்கப்படுகின்ற ஒரு நிலைவரத்தை நோக்கி அரசாங்கம் செல்வதென்பது பெரும் துயரத்துக்குரியதாகும்.

இராணுவ வெற்றியொன்றுக்குப் பிறகு சமாதானத்தை வலுப்படுத்துவதற்கு அத்தியாவசியமான செயற்பாடு என்றால் அது போரை மூளவைத்த நெருக்கடியின் அடிப்படை அரசியல் காரணிகளை இல்லாமற் செய்வதில் கவனம் செலுத்த வேண்டியதேயாகும். இரண்டாவது உலக யுத்தத்தில் வெற்றிபெற்ற நாடுகள் போருக்குப் பிறகு ஜப்பானும் ஜேர்மனியும் அவற்றை ஆட்சி செய்வதற்கு புதிய அரசியலமைப்புகளைக் கொண்டிருப்பதை உறுதிசெய்தன.

> பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வொன்று காணப்படும் வரை பிரிவினைவாதத்தின் விதைகள் நிலைக்கவே செய்யும். ஆனால் அதுபற்றி கவலைப்படுகின்ற அரசாங்கம் அரசியல் தீர்வொன்றின் ஊடாக பிரச்சினையின் அடிப்படைக் காரணிகளை இல்லாமல் செய்வதில் அக்கறைகாட்டுவதாக இல்லை. நல்லிணக்கத்திற்கும் நிலையான பாதுகாப்புச் சூழலுக்குமான வாய்ப்புகள் அருகிக்கொண்டே போகின்றன

சீக்கியத் தீவிரவாதத்தின் மேலான இந்திய வெற்றிக்குப் பிறகு பஞ்சாப் மாநிலத்தில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் பயனுறுதியுடைய முறையில் ஆட்சி செய்யக் கூடியதாக புதிய அரசியல் ஏற்பாடுகள் கொண்டு வரப்பட்டன. இதே விளக்கப்பாடும் பட்டுணர் பகுத்தறிவும் இலங்கை மக்கள் மத்தியிலும் இருக்கிறது. நெருக்கடிக்கான அடிப்படைக் காரணிகள் இல்லாமற் செய்யப்பட வேண்டுமென்று அவர்கள் விரும்புகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றார்கள். பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய நடைமுறைச்சாத்தியமானதும் தன்னலமற்றதுமான வழிமுறைகளில் இந்த விளக்கப்பாட்டையும் பகுத்தறிவையும் பிரயோகிக்க அரசியல் தலைமைத்துவம் தவறுவதே இங்கு பிரச்சினையாகும். மக்களால் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட வடமாகாண சபை நிருவாகம் பயனுறுதியுடைய முறையில் செயற்படுவதை அனுமதிக்க அரசாங்கம் தவறுகின்றது. இது வெளிப்படையாகவே தெரிகின்ற ஒரு பிரச்சினையாகும்.

படுமோசமாகிக் கொண்டு போகும் நிலைவரம் குறித்து வடக்கில் தற்போது பெரும் வாட்டம் காணப்படுகிறது. இராணுவத்தின் பங்கு அதிகரித்திருப்பதை வடக்கிலிருந்து வரும் செய்திகள் மூலம் தெரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது. சிவில் சமூகம் செயற்படுவதற்கான வெளி சுருங்கியிருக்கிறது. இதற்குப் பிரதான காரணம் சிவில் சமூகச் செயற்பாடுகளுக்காக அனுமதியைப் பெற வேண்டியிருக்கும் சூழ்நிலையாகும். இந்த அனுமதி ஒன்றில் கிடைப்பதாக இல்லை அல்லது பெறுவது சாத்தியமற்ற ஒன்றாகத் தோன்றுகிறது. இராணுவத்தின் செயற்பாடுகளில் ஒளிவுமறைவற்ற தன்மை இருப்பதில்லை. இது அதன் இயல்பான குணாதிசயமாகும். இதன் விளைவாக விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு புத்துயிரளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்படுவது பற்றி அவநம்பிக்கை உணர்வே காணப்படுகிறது. இந்த வகையாக ஒளிவு மறைவற்ற தன்மை இல்லாதமையும் அரசியல் ரீதியில் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு முன்னோக்கிய நகர்வு எதுவும் செய்யப்படுகின்றது என்பதற்கான எந்தச் சமிக்ஞையும் தென்படாத சூழ்நிலையுமே ஆட்சியாளர்களின் முயற்சிகள் எல்லாமே அரசியல் சமுதாயத்தின் மீது அரசாங்க இராணுவத்தின் ஆதிக்கத்தை வலுப்படுத்தும் நோக்குடனானவை என்ற சந்தேகம் தோன்றுவதற்கு வாய்ப்பளிக்கிறது. இச்சந்தேகத்தை இல்லாமற் செய்வதற்கு ஒரே வழி அரசியல் தீர்வு தொடர்பில் அரசாங்கம் முன்னோக்கிய நகர்வைச் செய்வதேயாகும். இதைத்தவிர வேறு வழியில்லை.

**இராணுவத்தின் செயற்பாடுகளில் ஒளிவு மறைவற்ற தன்மை இருப்பதில்லை. இதன் விளைவாக விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு புத்துயிர் அளிக்கும் முயற்சியாகக் கூறப்படுவது பற்றி அவநம்பிக்கை உணர்வே காணப்படுகிறது.**

இனரீதியாக அல்லது மதரீதியாக சமுதாயத்தின் எந்தவொரு பிரிவேனும் தீவிரவாத மயப்படுவதென்பது அரசியல் ரீதியில் மதச்சார்பற்றதும் ஜனநாயகரீதியானதுமான அமைப்பு முறையொன்றை, சகல சமூகங்களையும் கலாசாரங்களையும் அரவணைத்துச் செல்லக்கூடிய அமைப்பு முறையொன்றை நிறுவுவதற்கு அரசு தவறியதன் தெளிவான வெளிப்பாடேயாகும். வேறுபட்ட இனங்களும் மதங்களைச் சார்ந்தவர்களும் ஐக்கியப்பட்டுச் செயற்பட வேண்டுமென்பதை நோக்கமாகக் கொண்ட அமைப்புகளுக்கு இலங்கை அரசாங்கம் பாதுகாப்பு வழங்கத் தவறுவது எந்த வகையிலும் ஒரு நேர்மறையான அறிகுறியல்ல. முஸ்லிம்களும் பௌத்தர்களும் சேர்ந்து ஊடகவியலாளர் மகாநாட்டை நடத்துவதற்கு அண்மையில் கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட முயற்சி குழப்பியடிக்கப்பட்ட சம்பவத்தை உதாரணமாகக் குறிப்பிட முடியும். போரின் முடிவுக்குப் பின்னரான நல்லிணக்கத்தைக் காண்பதற்கான வாய்ப்புகள் கடந்த மாதம் முக்கியமான பின்னடைவுகளைச் சந்தித்தன. இலங்கைப் போரின் இறுதிக் கட்டம் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்றைச் செய்வதற்கு வலியுறுத்தும் தீர்மானம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்டதன் பிறகு நாட்டில் காணப்படுகின்ற நிலைவரம் உள்நாட்டு மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் மோதல் நிலையை தீவிரப்படுத்துகின்ற ஒன்றாகவே இருந்துவருகிறது.

சர்வதேச மட்டத்தில் இடம்பெறுகின்றவை இலங்கை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு வெளியில் உள்ளவையாகும். ஆனால், இலங்கைக்குள்ளே நடப்பவை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளவையேயாகும். போரின் முடிவுக்குப் பின்னரான இலங்கையில் இராணுவமய நீக்கத்தைச் செய்வதற்குப் பதிலாக, ஆட்சி முறையில் ஒளிவுமறைவற்ற தன்மையைக் கடைப்பிடிப்பதன் மூலமாக மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்குப் பதிலாக, இங்கு நடப்பவையெல்லாம் முற்றிலும் மறுதலையானவையாகவே இருக்கின்றன. இது துரதிர்ஷ்டவசமானதாகும். கனடா போன்ற நாடுகள் சர்வதேச ரீதியில் முன்வைக்கின்ற குற்றச்சாட்டுகள் நம்பகத்தன்மையைப் பெறுகின்ற சூழ்நிலையை அரசாங்கமே அதன் நடவடிக்கைகள் மூலமாக ஏற்படுத்துகின்றது. கடந்த கால மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக் கூறவேண்டிய கடப்பாடு விடயத்தில் அரசாங்கம் அக்கறையுடன் செயற்படத் தயாராயில்லை என்பதும் தற்போது நல்லிணக்கத்துக்கான அரசியல் சூழ்நிலையை அரசாங்கம் தோற்றுவிக்கவில்லை என்பதுமே முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டுகளாகும். உண்மையான நல்லிணக்கம் இல்லாவிட்டால், இலங்கை (முன்னர் மோதலுக்கு வழிவகுத்த அதே) வெறுப்புணர்வு, பீதி மற்றும் ஏக்கத்துடன் கூடிய நாடாகவே தொடர்ந்தும் இருக்கப் போகிறது.

இத்தகைய நிலைவரம் மேலும் மோசமடைந்து மீண்டும் மோதல் மூளக்கூடிய சாத்தியத்தையே தோற்றுவிக்கும்! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்

# கிரிக்கெட் விளையாட்டும் தேசியவாத உணர்வுகளும்

ஆதித்தன் ஜெயபாலன்



ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி வெற்றிபெற்ற செய்தி 06-04-2014 வெளிவந்ததும் இலங்கையின் தென்பகுதியெங்கணும் கரைகடந்த மகிழ்ச்சி ஆரவாரம் பொங்கிப் பிரவாகித்தது. இந்த மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களில் அவதானிக்கத் தக்கதாக இருந்த முக்கிய விடயம் இலங்கை அரசின் தேசிய சின்னமான இலங்கையின் தேசியக் கொடியும் அதனோடு இணைந்த தேசியவாத உணர்வும் ஐக்கியமும் வெளிப்பட்டமையாகும். சிங்கக் கொடியும் தேசியவாதச் சுலோகங்களும் தேசிய அரசு (Nation State) என்ற கருத்தை மீள் வலியுறுத்தும் கருத்தியல் செயல்முறையை இந்தக் கொண்டாட்டங்கள் எடுத்துக்காட்டின. கிரிக்கெட் விளையாட்டு வெற்றிக் கொண்டாட்டம் மூலம் இனவாதமும், வடக்கேயும் கிழக்கேயும் வாழும் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறையின் நியாயப்படுத்தலும் வெளிப்படையாகத் தெரிந்தது. தென்பகுதியின் மக்கள் மீதான சர்வாதிகார ஆட்சியையும் வெற்றிவிழா நியாயப்படுத்தும் கருத்தியலைக் கொண்டதாக இருந்தது.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் போர் வெற்றியின் போது நிகழ்ந்த கொண்டாட்டத்திற்கும் ரி-20 வெற்றிக் கொண்டாட்டத்திற்கும் இடையிலான ஒற்றுமை வெளிப்படையானது. அன்று ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் அவர்களது கிராமங்களில் இருந்து வெளியேறியிருந்தனர். குண்டுவீச்சால் எண்ணிறந்தோர் கொலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கை மக்கள் தங்கள் விளையாட்டு வெற்றியை கொண்டாடும் வேளையில் அவர்கள் மத்தியில் தமது தேசியத்தின் எழுச்சி பற்றிய நம்பிக்கை உயரும் போது மறுபக்கத்தில் இன்னொரு இனம் இராணுவ அடக்கு முறையால் அழுந்துகிறது. தேசிய கிரிக்கெட் அணியும் அதன் மேலாண்மைவாத சிந்தனையும் தாம் செய்பவை சரி என்ற எண்ணமும் இனவாதத்தை துணிச்சல் கொள்ளத் தூண்டுகிறது**



செய்யப்பட்டிருந்தனர். தமிழ்க்கிராமங்கள் வெறிச்சோடிப்போயிருந்தன. தென்பகுதியிலோவெனில் சிங்களவர்கள் தெருக்களில் இறங்கி உணர்ச்சிப் பரவசத்தில் திளைத்தனர். சிங்கக் கொடியை தூக்கிப் பிடித்தபடி நாட்டுப்பற்றை வெளிப்படுத்தும் சுலோகங்களை முழங்கித் தமது ஆயுதப்படைகளுக்கு ஆதரவு தெரிவித்தனர். தமிழ்க் கிராமங்கள் பற்றி எரிந்த பொழுது தெற்கே ஆரவாரக்கோஷம் வானளவிற்கு உயர்ந்தது. சிங்கள இனவாதத்தின் உச்சமான வரலாற்றுத் தருணம் இதுவாக இருந்தது. ஒரு இனத்தை ஆக்கிரமித்து அடிபணிய வைத்தல் அரச சடங்குமுறை வைபவங்களின் தொனிப்பொருளாகியது. தேசிய அடையாளம் தேசியப் பெருமை என்பன அரசு மட்டத்தில் வழிபாட்டுக்குரியதாக்கப்பட்டது.

மே 19 வெற்றித் திருநாள் 2009 முதல் தேசிய முக்கியமுடைய தினமாக கொண்டாடப்படுகிறது. இத்தினத்தில் அரசின் வன்முறை பொதுமக்களின் கொண்டாட்டத்திற்குரிய தாக்கப்பட்டுள்ளது. அரசின் பிரசாரத்துடன் கூடிய இப்பொதுக் கொண்டாட்டம் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட யுத்தக் கொடுமைகளையும் அம்மக்களின் குறைகளையும் மூடிமறைப்பனவாய் அமைந்தன. இம்மூடிமறைப்புக் கருத்தாடல் ஒன்று உருவாகியது. தமிழர்கள் ஒரு தேசிய இனம் என்பதை நிராகரித்தல், அவர்களது எதிர்ப்புகளை பயங்கரவாதமாகக் காட்டுதல், அவர்களது கூட்டு மனநினைவுகளை அழித்தல், நீதிக்கும் சமத்துவத்திற்குமான அவர்களின் கோரிக்கைகளை மேற்கிளம்பவிடாது ஒடுக்குதல் என்பனவே இக்கொண்டாட்டங்களின் உட்பொருள். ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படும் வெற்றி விழாவிலும் இராணுவப்பலம் பகிரங்கப்படுத்தப்படுகிறது. சிங்கள இனவாதத்தின் வெற்றி முழக்கம் ஒலிக்கிறது. மக்களிடம் இந்த வெற்றிப் பெருமித உணர்வு ஊட்டப்படுகிறது.

இந்தப் பின்னணியில் தான் விளையாட்டு வெற்றியும் கொண்டாடப்படுகிறது. தேசத்தின் கிரிக்கெட் அணி, தேசிய அரசு, தேசிய உணர்வு, தேசிய ஒடுக்குமுறை என்பன யாவும் ஒன்றாகத் தெட்டத்தெளிவாக வெளிப்படு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன.

தமிழர்கள் மீது ஒட்டுமொத்தமாக நிகழ்த்தப்பட்ட கொடுமைகளை இலங்கையின் கிரிக்கெட் விளையாட்டு வீரர்கள் பகிரங்கமாக மறுத்துரைத்தும், அரசாங்கத்தை ஆதரித்துப் பேசுவதும் கிரிக்கெட்டிற்கும் இனவாதத்திற்கும் உள்ள பிணைப்பை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. இலங்கையின் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் பொதுநலவாய மகாநாடு நடைபெற்ற வேளையில் 16-11-2013 திகதியன்று சனல் -4 தொலைக்காட்சிக்குப் பேட்டியளித்தார். அப்போது அவர் காணாமல் போனோர்களின் உறவுகளின் எதிர்ப்புகளை உதாசீனம் செய்து மலினப்படுத்திப் பேசினார். காணாமல் போனோரின் உறவுகளின் மனவேதனையை, எதிர்ப்பை இரக்கமற்ற கொடுமனதோடு நிராகரித்தார். அம்மக்கள் பொய் கூறுவதாகக் கூறினார். பிரித்தானியப் பிரதமர் இலங்கையின் மனித உரிமைகள் நிலை பற்றித் தவறாக வழிநடத்தப்படுவதாகவும் குற்றஞ்சாட்டினார். இவரைப்போல் நடந்து கொண்ட இன்னொருவர் குமார் சங்கக்கார, இலங்கை அரசாங்கத்தின் 'சாதனைகள்' பற்றி போற்றிப் புகழ்ந்தார் சங்கக்கார. இதன் மூலம் போருக்குப் பிந்திய காலத்தின் நல்லிணக்கம், அபிவிருத்தி என்ற கதையாடலுக்கு அவர் ஆதாரம் வழங்கினார். இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டனான சனத்ஜயசூரிய கேரளாவிற்குப் போயிருந்த சமயம் நிருபர்களிடம் பேசும்போது, இலங்கையில் அரசாங்கம் அருமையான பணிகளைச் செய்கிறது. நாடு முழுவதினதும் வளர்ச்சிக்கு வேண்டிய எல்லாம் செய்யப்படுகின்றன. எங்கள் நாட்டின் சொந்த நீதித்துறை அற்புதமாகச் செயற்படுகிறது. சர்வதேசம் கவனிக்க வேண்டிய விடயம் என்று எதுவும் இல்லை என்ற பொருள்பட அவர் பேசினார்.

இலங்கையின் கிரிக்கெட் வீரர்கள் இவ்வாறு வெளிப்படையாகப் பேசுபவர்கள். அவர்களுடைய பேச்சில் இருந்து ஒன்று தெட்டத்தெளிவாகத் தெரிகிறது. இலங்கை அரசும், தேசிய கிரிக்கெட் அணியும் இணைபிரியா உறவால் பிணைக்கப்பட்டவை. தமிழர்கள் ஒடுக்கப்படுகிறார்கள் என்பதை முற்றாக நிராகரிக்கும் இந்தக் கிரிக்கெட் வீரர்கள் ஆற்றும் பணி என்ன என்பதைப் பார்க்க வேண்டும். தமிழர்களின் கூட்டு மனவேதனையையும் துன்பத்தையும் மௌனிக்கச் செய்வதே இவர்களின் நோக்கம்.

தேசிய அரசின் காவலர்களான இந்த வீரர்களுக்கு தகுந்ததோர் கோலாகலமான கொண்டாட்ட நிகழ்வை, வரவேற்பை அளிப்பதற்கு இலங்கை அரசு முன்வந்தது. உலகக் கிண்ணப் போட்டி வெற்றி விழா பெரும் எடுப்பில் நிகழ்ந்தது. சர்வதேச சமூகத்தின் இரண்டும் கெட்ட நிலை இலங்கைக்குள் இனவாதத்தை ஊக்குவிக்கிறது.

இலங்கை மக்கள் தங்கள் விளையாட்டு வெற்றியைக் கொண்டாடும் வேளையில், அவர்கள் மத்தியில் தமது தேசியத்தின் எழுச்சி பற்றிய நம்பிக்கை உயரும் போது மறுபக்கத்தில் இன்னொரு இனம் இராணுவ அடக்குமுறையால் அமுழ்ந்துகிறது. மார்ச்மாதம் ஏழாம் திகதிக்கும் 27 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் 44 தமிழர்கள் சட்டமுறையற்ற வகையிலான கைதுக்கும், கடத்தப்படுதலுக்கும் ஆளானார்கள்.வடபகுதியில் யுத்தகாலத்தில் இருந்த தடைகளும் கட்டுப்பாடுகளும் மீண்டும் கொண்டுவரப்பட்டுள்ளன. கடலுக்குப் போகும் மீனவர்கள் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்டு செல்ல வேண்டும். வீதிகளில் சோதனைத் தடைகளைப் பயணிகள் சந்திக்க வேண்டியுள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் முடிந்த கையோடு அடக்குமுறை தொடர்கிறது. காணாமல் போவோர் எண்ணிக்கை அதிகரிப்பதாக அறிக்கைகள் கூறுகின்றன. தமிழர்களின் உரிமைகளுக்கான செயற்பாட்டாளர்களும், முன்னாள் போராளிகளும், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சாட்சியம் சொல்லக்கூடியவர்களும் கடும் தொல்லைக்கு ஆளாகின்றனர்.


ரி-20 கிரிக்கெட் வெற்றியின் பின்னர் மறுநாள் 07-04-2014 ஆம் நாளன்று இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் உறுதியோடு கூறிய வார்த்தைகள் இவை. 'இலங்கை அரசாங்கம் விசாரணை தொடர்பாக ஏதாவது செய்யவேண்டும் என்று கேட்டால் அதனை அரசாங்கம் செய்ய மாட்டாது. அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்பதை எமக்கு விளக்கமாகச் சொல்லவேண்டும். நாம்தெளிவாக ஒரு கொள்கை முடிவை எடுத்துள்ளோம். அதன்படி விசாரணைக்கு நாம் ஒத்துழைக்க மாட்டோம். விசாரணைக்குழுவின் நியாயாதிக்கத்தினை நாம் ஏற்கமாட்டோம்'.

சர்வதேச சமூகத்தின் கோரிக்கையை உறுதியாக நிராகரிக்கும் இந்த நடத்தையில் இலங்கையின் கிரிக்கெட் வெற்றியின் தாக்கம் வெளிப்படுகின்றது என்று கூற முடியும். இருந்தபோதும் இலங்கை மீது நடவடிக்கை எடுப்பதற்கு மேற்குலகு காட்டிவரும் தயக்கமே இந்த உற்சாகத்தை வழங்குகிறது. மேற்குலகின் கூட்டு இலங்கை மீது கொடுக்கும் அழுத்தம் பலமற்றது. இப்பலவீனம் ஜெனீவாத் தீர்மானத்தால் வெளிப்படுகிறது. இதேவேளை சீனா-ரஷ்யா கூட்டும் இந்தியாவும், முஸ்லிம் நாடுகளும் இலங்கை அரசுக்குப் பின்னால் உள்ளன. இலங்கைக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்குகின்றன. சர்வதேச சமூகத்தின் இந்தப் பலவீனம் இலங்கை அரசின் உற்சாகத்தைத் தூண்டியுள்ளது. அரசின் ஒடுக்குமுறை அதிகரிக்கிறது. தமிழர் பிரச்சினைகளில் கவனம் செலுத்தப் போவதோ தீர்வு வழங்குவதோ நடைபெறமாட்டாது.

தேசிய கிரிக்கெட் அணியும் அதன் மேலாண்மைவாதச் சிந்தனையும் தாம் செய்பவை சரியென்ற எண்ணமும் இனவாத த்தை மேலும் துணிச்சல் கொள்ளத் தூண்டுகிறது. அது தமிழ்ச்சமூகம் எதிர்நோக்கும் பன்முகப்பட்ட ஒடுக்குமுறையை அதிகரிக்கவே செய்யும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்



# அரசியல் தீர்வா அல்லது ஆட்சி மாற்றமா?

# அரசின் கழுத்தில் சுருக்குக் கயிறு இறுகுகிறது

ராஜபக்ஷ ஆட்சிக்கு ஒரேயொரு மாற்றுவழிதான் உள்ளது. இன்றுவரை செய்து வந்தவை யாவற்றையும் பற்றி அரசாங்கம் மனவருத்தத்தை வெளியிட வேண்டும். தீமைதரும் கொள்கைகளை முற்றாகத் துறக்க வேண்டும்

குமார் டேவிட்

ஜெனீவா நிகழ்வுகளை துரதிருஷ்டத்தின் அறிகுறிகளாகவே நான் பார்க்கிறேன். ஜெனீவா இலங்கைக்குத் தெரிவித்த செய்திகள் எவை? இலங்கையில் ஆட்சி மாற்றத்தைக் கொண்டு வருவதற்கே சர்வதேச சக்திகள் முயற்சிக்கின்றன என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது. இது வெறும் சந்தேகம் அல்லது ஊகம் அன்று. மார்ச் மாதம் ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இலங்கையில் ஆட்சிமாற்றத்திற்கான தந்திரோபாய முடிவு. இதன்படி ஆட்சிமாற்றம் காலப்போக்கில் ஏற்படாது போகிறது. அதற்குச் சாத்தியமான சூழல் ஏற்பட்டால் அது நிறைவேறும் என்பதில் ஐயமில்லை. இச்செயல்முறையின் தொடக்க கட்டத்தில் நாம் இப்போது உள்ளோம். சர்வதேச சக்திகளின் திட்டத்தை அலரிமாளிகையில் முற்றுமுழுதான மாற்றம் ஒன்று ஏற்பட்டால் மட்டுமே தடுத்து நிறுத்தக்கூடியதாக இருக்கும். அல்லாவிடில் அவர்களின் இலக்கு அடையப்படும் வெற்றி உறுதி.

உக்ரெயினில் ஆட்சி மாற்றம் (கீவ் நகரில் இருந்து யனுகோவிச்சை துரத்துதல்) சரியான முறையில் கையாளப்படவில்லை. தூங்கிக் கிடந்த ரஷ்யா என்ற துருவக்கரடி இதனால் விழித்துக் கொண்டது. கிரிமியா இப்போது உக்ரெயினில் இருந்து பறிக்கப்பட்டுவிட்டது (ஏப்ரில் 2014). உக்ரெயினிற்குள் ஏற்பட்டுள்ள நெருக்கடி அந்நாடு தொடர்ந்து ஒரு சுதந்திர அரசாக நிலைத்து நிற்குமா என்ற சந்தேகத்தை உருவாக்கியுள்ளது. நிகழ்வுகள் மூலம் நாம் சமிக்ஞைகளையே கண்டுகொள்ளலாம். எதுவும் நடக்கலாம். நினைத்ததற்கு மாறாகச் சம்பவங்கள் திசை மாறலாம். இந்தியா ஜெனீவாவில் வாக்களிப்பில் இருந்து விலகி நின்றமை ஒரு அசௌகரியமான விடயமாக இருப்பினும் இந்தியா மேற்குலகின் கூட்டாளி என்றே நான் கருதுகிறேன். அது மேற்கைக் கைவிடமாட்டாது. ராஜபக்ஷ ஆட்சிக்கு ஒரே ஒரு மாற்று வழிதான் உள்ளது. இன்றுவரை செய்து வந்தவை யாவற்றையும் பற்றி அரசாங்கம் தன் மனவருத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த்தை வெளியிட வேண்டும். தனது தீமை தரும் கொள்கைகளை முற்றாகத் துறக்க வேண்டும், 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்தவும், கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின்படியான கடப்பாடுகளை நிறைவேற்றவும் அரசு உறுதி பூணுதல் வேண்டும். இது நடக்குமா?

எனது அபிப்பிராயத்தை ஒளிவு மறைவின்றி முன்கூட்டியே சுருக்கமாகக் கூறிவிடுகிறேன்.

அ) நீண்டகாலமாக அவஸ்தைக்கு உள்ளாக்கப்பட்டிருந்த சர்வதேச சமூகம் அதிருப்தியுற்றது; அது ஒரு முடிவுக்கு வந்து விட்டது. அந்த முடிவை மேலே குறிப்பிட்டிருந்தேன். இதற்கான காரணங்களை நான் பின்னர் கூறுவேன்.

ஆ) இந்தியா விலகிப் போக மாட்டாது; அதற்குப் பொருத்தமான பணிப்பொறுப்பும் வகிபாகமும் கொடுக்கப்படும்.

இ) ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் விசாரணை தொடர்கின்ற போதிலும், தமிழர்களின் அரசியல் பிரச்சினைக்கு ஒரு தீர்வை வழங்குதல் .அரசின் மீதான அழுத்தத்தைத் தணிப்பதற்கு உதவும். ஆனால், அரசாங்கம் பாரிச வாதத்தால் முடங்கிப்போன நிலையில் உள்ளது. இத்திசை நோக்கி அதனால் நகர முடியாது.

ஈ) விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்காவிட்டால் அதற்கான தண்டனை கிடைக்கவே செய்யும். தண்டனைகள் ஒவ்வொன்றாக அடுத்தடுத்து வரும். .

உ) எதிர்வரும் 24 மாதங்களில் நாட்டில் அரசியல் ஸ்திரமின்மையும் குழப்பநிலையும் மோதலும் ஏற்படும்.

மேலே நான் கூறியவற்றுள் அ), இ) என்ற இரு விடயங்கள் பற்றியும் நான் இங்கே விபரித்துக் கூறுவேன். மேலே நான் அட்டவணைப்படுத்திய வற்றுள் ஆ) என்ற விடயமும் ஏனைய ஈ), உ), என்பனவும் துணைக் காரணிகளாக அமைவன என்றே கருதலாம். ஐக்கிய அமெரிக்கா, பிரித்தானியா என்பனவும் ஐரோப்பாவும் ஒன்று சேர்ந்து ஜெனீவாவில் நிறைவேற்றிய தீர்மானம் மிகவும் கடுமையானது. சர்வதேச விசாரணையைத் தொடங்க வேண்டும் என்ற தீர்மானமும் தீவிரமான ஒரு முடிவே. இத்தீர்மானத்தைக் கொண்டு வந்தோர் அதன் பின்விளைவுகளை அறியாமல் இம்முடிவுக்கு வரவில்லை. ஜி.எல்.பீரிஸ் இலங்கை அரசு விசாரணைக்கு ஒத்துழைக்கமாட்டாது என்று கூறுகிறார். முரண்பாடு கூர்மையடைகிறது. இலங்கை ஏற்றுமதி வருமானத்தை நம்பியிருக்கும் பொருளாதாரத்தைக் கொண்டது. வெளிநாட்டுக் கடனும், உல்லாசப் பயணிகள் வருகையும் அதன் உயிர் நாடியானவை. இத்தகைய தங்கியிருத்தல் பொருளாதார நாடு நெருக்கடியின் வேதனைகளைத் தாங்கிக் கொள்ள வேண்டும். காலப்போக்கில் மக்கள் அரசுக்கு எதிராகக் கிளர்ந்து எழுவர். இலங்கையின் மனித உரிமைகள் நிலை படுமோசமானது. கனடா பொதுநலவாய நிதிக்கு வழங்கும் 10 மில்லியன் டொலர் நிதி உதவியை நிறுத்திவிட்டது. பிரித்தானியாவும் ஏப்ரல் மாதத்தில் கடுமையான வார்த்தைகளில் அமைந்த எச்சரிக்கை அறிவித்தலை தன்னாட்டுப் பிரஜைகளுக்குக் கொடுத்திருக்கிறது.

**அமெரிக்காவும் பிரிட்டனும் தாம் வகுத்துக்கொண்ட பாதையிலிருந்து பின்வாங்கப் போவதில்லை. அவை தம் காரியத்தை செயற் படுத்தப் போகின்றன. ஆனால் இந்த நாடுகள் யாரை அதிகாரத்தில் அமர்த்த விரும்புகின்றன என்பதே கேள்வி. ரணில் விடயத்தில் இந்நாடுகள் ஓரளவு தயக்கம் காட்டலாம்.**

இலங்கைப் பிரயாணத்தினைத் தவிர்க்கும்படி கேட்டுள்ளது. வழமைக்கு மாறான கடுமை நிறைந்த தீர்மானத்தை இந்த நாடுகள் ஜெனீவாவில் ஏன் கொண்டு வந்தன என்று சிந்திக்க வேண்டும். முன்யோசனையற்ற எழுந்தமானமான முடிவு இது என்று கொள்ள முடியாது. நன்கு திட்டமிட்டு எடுக்கப்பட்ட நடவடிக்கையென்றே கொள்ளவேண்டும். ஆட்சி மாற்றமே இந்நாடுகளின் இலக்கு என்பது தெளிவு.

இலங்கைக்குள்ளே அரசுக்கு எதிரான கட்சிகள் அரசின் குரல்வளையை நசுக்குவதற்குத் தயாராக உள்ளன. குறிப்பாக ஜனதாவிமுக்தி பெரமுனவும் ஐக்கியதேசியக் கட்சியும் இதில் முனைந்து நிற்கின்றன. தமிழ்த்தேசிய முன்னணியை இந்த விடயத்தில் சேர்த்துக் கணக்கிடக்கூடாது. ஐக்கிய அமெரிக்காவும் பிரித்தானியாவும் தாம் வகுத்துக் கொண்ட பாதையில் இருந்து பின்வாங்கப் போவதில்லை. அவை தம் காரியத்தைச் செயற்படுத்தப் போகின்றன. இந்நாடுகள் யாரை அதிகாரத்தில் அமர்த்த விரும்புகின்றன என்பதே கேள்வி. ரணில் விடயத்தில் இந்நாடுகள் ஓரளவு தயக்கம் காட்டலாம். எனினும் ரணிலைத் தலைவராக வைத்துக்கொள்வதை அவை ஏற்றுக் கொள்ளும். கட்சிக்குள் தலைமைத்துவப் பண்புகள் கொண்ட எவரை யாவது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்து தெரிந்து எடுத்துக் கொண்டால் மாற்றத்திற்கான முதற்படிக்கு அதுவே போதும். எதிர்காலத்தில் மக்கள் விடுதலை முன்னணி எழுச்சி பெற்று முன்னுக்கு வரப்போகின்றது என்பதையிட்டு சர்வதேச சமூகம் பெரிதாகக் கவலைப்படப்போவதில்லை என்றும் நான் கருதுகிறேன். சர்வதேச சமூகத்தின் செயற்பாடு எப்படி இருக்கும் என்பது பற்றிய எனது கருத்துகள் இவைதாம்.

அடுத்து இந்தியாவின் நிலையை எடுத்துக்கொள்வோம். மேற்குலகின் தந்திரோபாயத்தின் நீண்டகால விளைவுகள் பற்றி இந்தியா புரிந்து வைத்திருக்கிறது. அந்நாடு மிகுந்த அவதானத்துடன் நடந்துகொள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்பதை உணர்கிறது. இந்தியப் பிரதிநிதி டிலிப் சிங்கா ஜெனீவாத் தீர்மானம் பற்றிப் பேசும் போது அது 'நடைமுறைச்சாத்தியம் இல்லாதது' என்றார். அத்தோடு இத் தீர்மானம் 'தலையிடுவது' என்றும் அபிப்பிராயம் தெரிவித்தார். தலையி டுவது என்ற சொற்பிரயோகமும் குறிப்பும் இந்தியா குறித்த ஒரு நாட் டைக் குறிவைக்கும் தீர்மானத்தை (Country Specific Resolution) எதிர்ப்பதை எடுத்துக்காட்டுகிறது. (ஏனெனில் இந்தியா மறைப்ப தற்குரிய பலகொடுமைகள் உள்ளன) ஆனால் அது நடைமுறைச் சாத்திய மற்றது என்று ஏன் கூறியது? அதன் அர்த்தம் என்ன? தீர்மானத்தை நடை முறைப்படுத்துவதில் இந்தியாவிற்கு கஷ்டங்கள் உள்ளன என்பதை இரா ஜதந்திர பரிபாஷையில் டிலிப் சிங்கா கூறினாரா? இத்தீர்மானத்தைத் தொட ர்ந்து என்னென்ன நிகழ்வுகள் தொட ரும் என்பதை அறிந்துள்ள இந்தியா, இலங்கையோடு கடும் போக்கில் நடந்துகொள்வதனையிட்டுக் கவலை கொள்கிறதா என்று யோசிக்க வேண் டியுள்ளது. ஏனெனில் இந்தியா வுக்கும் இலங்கைக்கும் இடையே அரசாங்க மட்ட உறவுகளுக்கு அப் பால் மக்களிடையேயான உறவுக ளும் உள்ளன. இருந்தபோதும் புதிய அரசாங்கம் டில்லியில் ஆட்சியில் அமர்ந்தவுடன் ராஜபக்ஷ அரசின் காலை வாரிவிடலாம். மௌனமா கவே தம் காரியத்தை நிறைவேற்றிவி டலாம்.

**ஜெனீவா தீர்மானத்தை அடுத்து என்னென்ன நிகழ்வுகள் தொடரும் என்பதை அறிந்துள்ள இந்தியா இலங்கையோடு கடும் போக்கில் நடந்து கொள்வதனையிட்டு கவலை கொள்கிறதா என்று யோசிக்கத் தோன்றுகிறது.**

### ராஜபக்ஷ அரசு மீது மேற்குலகு நம்பிக்கையிழந்தது ஏன்?

மேற்குலகு ஆட்சிமாற்றத்தைக் குறியாகக் கொண்டுள்ளது என்ற கரு துகோளை நான் முன்வைத்தேன். ஆயினும் ஏன் இந்த முடிவு என்ற கேள்விக்கு இன்னும் நான் பதில் கூற வில்லை. ஆட்சி மாற்றத்தை மேற்கு லகு ஏன் விரும்புகிறது? நாம் இந்த விடயத்தில் ஊகங்களைத் தான் செய்ய முடியும். பொதுவாக நான்கு காரணங்கள் இக்கேள்விக்கான பதி லாகக் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் எந்த ஒரு காரணத்தையும் தனிமைப் படுத்தி நோக்கும் போது அது வலி தான ஒன்றாக இல்லை என்பதே என் கருத்து. இப்போது அவற்றை ஒவ் வொன்றாகப் பார்ப்போம். அமெரிக் காவில் காங்கிரஸும், பிரித்தானியா வில் பாராளுமன்றமும், இலங்கை யில் நடக்கும் மனித உரிமை மீறல்க ளையும் நீதியை நிலைநாட்டுவதன் தேவையையும் உரத்துச் சொல்லி யுள்ளன. அந்நாடுகளில் பொதுசன அபிப்பிராயமும் இலங்கையில் நடப் பனவற்றிற்கு எதிரானதாக உள்ளது. அந்நாடுகள் இவ்விடயத்தில் ஏதா வது செய்தாக வேண்டும் என்ற நிர்ப் பந்தத்தில் உள்ளன என்பது முதலா வது காரணம். அரைகுறை மனதோடு அவை தீர்மானத்தை நிறைவேற்றி விட்டனவே. இது போதும் அல்லவா என்ற இக்காரணத்தை வலிதற்ற ஒன் றாக ஒதுக்கிவிடலாம். இரண்டாவ தாக அமெரிக்கா, பிரித்தானியா, இந் தியா என்ற மூன்று நாடுகளும் இலங்கையின் முரட்டுத்தனம், அப் பட்டமான பொய்கள் ஆகியவற் றால் அதிருப்தியடைந்துள்ளன. விர லுக்கு ஏற்ற வீக்கம் வேண்டும். தலைகால் புரியாத இவர்களுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும் என்று இந்த நாடுகள் எண்ணியுள்ளன என்று கூறப்படுகிறது. ஆனால் உலக வல்ல ரசுகளின் வெளிநாட்டுக் கொள்கை களை கடுஞ்சினம், எரிச்சல் உணர்வு போன்ற உணர்வுகள் தீர்மானிப்ப தில்லை என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். மூன்றாவதாக பிரித்தானியாவிலும், கனடாவிலும் உள்ள புலம்பெயர் தமிழர்கள் கொடுக்கும் அழுத்தம் தான் முக்கிய மான காரணம் என்றொரு கருத்து முன்வைக்கப்படுகிறது. கோதாபய அவர்கள் வெஞ்சினம் கொண்டவ ராய் 420 வரையான தமிழர்களையும் 16 புலம்பெயர் அமைப்புகளையும் தடை செய்துள்ளார். இந்த நபர்களும் அமைப்புகளும் தீர்மானம் நிறை வேற்றப்படுவதற்கான பிரசார நடவ டிக்கைகளை மேற்கொண்டதே இவற் றைத் தடை செய்ததற்கான காரணம். ஆனால் உண்மையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் ஒரு தீர்மா னத்தைக் கொண்டுவரச் செய்யும் அளவிற்குத் தமிழர்களின் புலம்பெ யர் அமைப்புகளுக்குப் பலம் இல்லை என்றே கூற வேண்டும்.

நான்காவது காரணம், இராஜதந்திர முக்கியத்துவம் பற்றியது. இலங்கை ஒரு கேந்திர முக்கியத்துவம் உடைய நாடு. இந்து சமுத்திரத்தில் அதன் அமைவிடம், கடற்பாதைகளின் மையத்தில் அது அமைந்திருத்தல், இந்தியாவிற்கு மிக அண்மையில் இருத்தல், எழுச்சி பெறும் சீனாவின் இராணுவ, பொருளாதார ஆபத்து களும், அவற்றின் கோளமயப் பரிமா ணமும் ஆகிய விடயங்கள் மேற்குல கின் நடவடிக்கைக்கு பின்னணியாக அமைந்துள்ளன என்று கூறப்படுகி றது. இங்கே நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய விட யம், இந்து சமுத்திரத்தில் சீனாவின் இராணுவப் பிரசன்னம் கிடையாது என்பதுதான். இன்னும் இருபத் தைந்து வருடங்களுக்கு அது பற்றிய சாத்தியம் இல்லை என்றும் கூறலாம். சீனாவிடம் கடற்படைக் கப்பல்களின் பலம் கிடையாது. ஜெனீவாவில் மனித உரிமைகள் பேரவையில் நிகழ்ந்த சச்சரவு சீனாவைத் தூண்டி விடப் போவதும் இல்லை. இலங்கை சீனாவின் பக்கம் மேலும் மேலும் சாயலாம் என்பது உண்மையே. சீனா பொருளாதார அரங்கில் தன் ஆதிக் கத்தை விஸ்தரிக்கிறது. அதற்கு ஆபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிக்கா, மத்திய ஆசியா, தென்னமெரிக்கா என்ற பிராந்தியங்கள் தான் முக்கியமானவை. இலங்கை இவ்விடயத்தில் முக்கியமில்லை. ஆகையால் இலங்கையின் கேந்திர அமைவிடம் என்ற விடயம் இரண்டாம் நிலையான துணைக்காரணியே ஆகும். அது முதன்மைக் காரணி அன்று என்றே நான் கருதுகிறேன்.

எனது கருதுகோளிற்கு இப்போது வருகிறேன். மேலே நான் குறிப்பிட்ட விடயங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டிய காரணிகள் ஆயினும் பிரதான விடயம் இலங்கை அரசு ஆட்டம் கண்டுள்ளது, நிலை தளம்புகிறது என்பதாகும். அரசாங்கத்தின் ஸ்திரமற்ற தன்மைதான் முக்கிய விடயம். வடக்கு மாகாணத்துடன் உள்ள உறவுகள் சீர்குலைந்து கொண்டு போகிறது. முன்னேற்றத்திற்கான எந்தவித அறிகுறிகளும் இல்லை. முஸ்லிம்கள் அந்நியப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவுடன் உள்ள உறவு மோசமடைகிறது. யாவற்றிலும் ஆபத்தான விடயம் தென்பகுதியின் அரசியல் நெருக்கடியாகும். பொருளாதாரம், அரசின் சர்வாதிகாரப்போக்கு, ஜனநாயகம் மறுக்கப்படுதல் என்பன பிரச்சினைகளை அதிகப்படுத்துகின்றன. மேற்குலகின் இலக்கு ஸ்திரமின்மையையும், சர்வாதிகாரத்தையும் முடிவுக்குக் கொண்டுவருவதற்காக ஆரம்பகட்டத்திலேயே அவற்றுக்கான நிலைமைகளைத் தடுத்துவிடுதல் ஆகும். இதனை லிபரல் ஜனநாயக மாற்றுவழி மூலம் ஏற்படுத்தலாம் என்றும் இலங்கை இப்பிராந்தியத்தில் இன்னொரு உறுதியற்ற நாடாக மாறுவதைத் தடுக்க வேண்டும் என்றும் மேற்குலகு கருதுகிறது. இந்தியாவும் இதேபோன்ற கருத்தையே கொண்டுள்ளது.

### பொறிமுறை

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் பிரிவு 2, பிரிவு 10b என்பன இலங்கை தொடர்பாக மேற்கொள்ளவிருக்கும் செயற்பாடுகளை விபரிப்பன. அவற்றைக் கீழே தருகிறேன்.

பிரிவு 2: சர்வதேச மனித உரிமைகள் சட்டம், சர்வதேச மனிதாய சட்டம் ஆகியவற்றின் ஏற்பாடுகள் மீறப்பட்டமை தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து சுயாதீனமானதும் நம்பகத்தன்மையுடையதுமான விசாரணையை நடத்த வேண்டும் என்றும், இம்மீறல்களைச் செய்தோரைப் பொறுப்புக்கூற வைக்க வேண்டும் என்றும், இலங்கையில் தொடர்ந்தும் இடம்பெறும் இத்தகைய மீறல்கள், துஷ்பிரயோகங்கள் நிறுத்தப்பட வேண்டும் எனவும், உயர் ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட சிபார்சுகளை அமுல்படுத்த வேண்டும் என்றும் இலங்கை அரசிற்குக் கோரிக்கை விடுக்கப்படுகிறது. பிரிவு 10: உயர் ஆணையாளர் அலுவலகத்திற்கு (விடுக்கும் கோரிக்கை) கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணையில் உள்ளடக்கப்பட்ட காலப்பகுதியில் இலங்கையில் இருதரப்பினராலும் இழைக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டப்படும் மிக மோசமான மனித உரிமை மீறல்கள், அவற்றோடு தொடர்புடைய குற்றங்கள் குறித்து முழுமையான விசாரணை ஒன்றை நடத்தும்படியும், அத்தகைய மீறல்கள் இழைக்கப்பட்டதாகக் குற்றம் சாட்டப்படும் ஏனைய குற்றங்கள் தொடர்பான நேர்வுகளையும் சூழமைவுகளையும் நிறுவும்படியும், தொடர்புடைய நிபுணர்களதும், விசேட நடைமுறைகளதும் உதவியுடன், எதிர் காலத்தில் தண்டனை, பொறுப்புக் கூறல் ஆகியவற்றில் இருந்து தப்பிக் கொள்ளுதலைத் தவிர்க்கும் நோக்குடனும் விசாரணையை நடத்தும்படி கோரிக்கை விடுக்கப்படுகிறது.

> உலக வல்லரசுகளின் வெளிநாட்டுக்கொள்கைகளை கடுஞ்சினம், எரிச்சல் போன்ற குணங்கள் தீர்மானிப்பதில்லை. புலம்பெயர் தமிழர்கள் கொடுக்கும் அழுத்தம்தான் முக்கிய காரணம் என்றொரு காரணம் முன்வைக்கப்படுகிறது. அந்த அளவிற்கு புலம்பெயர் அமைப்புகளுக்கு பலம் இல்லையென்றே கூற வேண்டும்

இந்த இரு பிரிவுகளும் ஒன்றை ஒன்று மேவி நிற்கின்றன. வாசகத்தில் தெளிவின்மை உள்ளது. உயர் ஆணையாளரின் விசாரணை அ) நம்பகத்தன்மையுடைய தேசியப் பொறிமுறை இல்லாதவிடத்து நடைபெற வேண்டுமா அல்லது ஆ) நவிபிள்ளையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட தேசியப் பொறிமுறையானது தொடர்ச்சியாக உண்மையைக் கண்டறியவோ நீதியைப் பெற்றுக்கொள்ளவோ தவறியமையால் விசாரணை நடைபெற வேண்டுமா என்பது தெளிவற்றதாகவே உள்ளது. தெளிவின்மை வேண்டுமென்றே உட்புகுத்தப்பட்ட விடயம் என்றே தோன்றுகிறது. உள்ளூர் மட்ட விசாரணை தொடங்கப்படுமாயின் அது தொடக்கப்பட்ட பின்னர் அதனைப் போலியானது என்று கூற முடியாது. ஆனால் விசாரணை திருப்தியற்றதாயின் 10 (ஆ) பிரிவின்படி சமாந்தரமான இன்னொரு விசாரணைக்கும் ஏற்பாடு உள்ளதெனக் கூற முடியும். ஆணையாளரும் மேற்குலகினரும் இந்த விடயத்தை இரகசியமாகவே வைத்திருக்கின்றனர்.

இலங்கையின் அதிகார பீடங்களில் சர்வதேச விசாரணை என்ன விதத்தில் நடைபெறப் போகின்றதோ என்ற கவலை வெளிப்படுகிறது. இலங்கை அரசு விசாரணையை நிராகரிக்குமானால் பொருளாதாரத் தடைகள் போன்ற தடைகள் விதிக்கப்படும் என்ற அச்சம் எழுந்துள்ளது. ராஜபக்ஷ மீதும் உயர் இராணுவ பீடத்தின் மீதும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படலாம். அரசுக்குள்ளே ஒற்றுமையின்மை வெளிப்படுகிறது. கோதாபயவிற்கு வழிகாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டியாகவிருக்கும் பொதுபலசேனா, பசில் ஒரு துரோகி என்று கூறியுள்ளது. ஐ.நா.மனித உரிமைகள் அலுவலகத்தின் விசாரணை நடைமுறையுடன் அரசாங்கம் ஒத்துழைக்குமா என்பது பற்றி ஜனாதிபதி ஒரு வார்த்தை கூடப்பேசவில்லை.

### ராஜபக்ஷ அரசின் பிடிவாதப் போக்கு

அரசாங்கம் தமிழர்கள் பிரச்சினையைத் தீர்க்குமானால் இந்த நெருக்கடியில் இருந்து தன்னை மீட்டுக்கொள்ள வேண்டும். பதின்மூன்றாவது திருத்தத்தைக் கூட்டியோ கழித்தோ, பிரித்தோ, பெருக்கியோ தீர்வைக் கொடுக்க வேண்டும். பொலிஸ் அதிகாரங்கள் விடயத்தில் ஒரு சமரசத்தை அடைய முடியும். ஆனால், காணி அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்குதல் வேண்டும். நான் விதிமுறைகளைக் கூறி இப்படித்தான் செய்ய வேண்டும் என்று கூற வரவில்லை. முக்கியமான விடயம் என்னவென்றால் அதிகாரப் பகிர்வுக்கான விருப்பம் அரசாங்கத்திற்கு இருக்க வேண்டும். அப்படி இருக்குமானால் பிரச்சினைகளைப் பேசித்தீர்த்துக் கொள்ளலாம். சர்ச்சைக்குரிய விடயங்களைத் தனிப்படுத்தி அவற்றையும் தீர்வு செய்யலாம். ஆனால் அரசாங்க அதிகாரத்தை மத்தியில் குவிப்பதையும், மாகாணங்களுக்கு எதனையும் கொடுக்கக்கூடாது என்பதையும் முனைப்போடு தொடருமானால் என்ன வழி? முதலமைச்சர் விக்னேஸ்வரனை முடமாக்கிவிடுவதிலும் வட மாகாண சபையை இயங்கவிடாமல் குழப்புவதிலும் முனைந்திருப்பதன் காரணமும் பின்னணியான யதார்த்தமும் தெளிவாகத் தெரிகின்றது.

நேர்மையான அரசியல் தீர்வு அமைதியை ஏற்படுத்தும். இதனால் தமிழர்கள் போர்க்குற்றம், மனித உரிமை மீறல், பொறுப்புக் கூறுதல் என்பன பற்றிய விசாரணைகளில் தீவிரமான முயற்சியில் ஈடுபடமாட்டார்கள். தேசியவாதிகளும் ஆய்வறிவாளர்களுமான தமிழர்கள் பலருடன் தனித்தனியாக நான் பலதடவை

**சர்வதேச விசாரணை எவ்வாறு நடைபெறப் போகிறதோ என்ற கவலை இலங்கையின் அதிகார பீடங்களில் வெளிப்படுகிறது. அரசு விசாரணையை நிராகரிக்குமானால் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படும் என்ற அச்சம் எழுந்துள்ளது.**

உரையாடியிருக்கிறேன். அவர்கள் இப்படிச் சொன்னார்கள். ‘நேர்மையான உண்மையான அரசியல் தீர்வு இருக்குமானால், இவர்களை பொறுப்புக்கூறல் விடயத்தில் ஏன் தொல்லைபடுத்த வேண்டும்? அதற்கான அவசியம் உள்ளதா?’ இப்பதில் எனக்கு அதிர்ச்சியாகவே இருந்தது. ஆயினும் அவர்களின் சிந்தனையில் உள்ள தர்க்கத்தை உடனே புரிந்துகொண்டேன். பொருத்தமான தீர்வு ஒன்று உள்ளூர் அரசியலில் உள்ள அழுத்தம், விறைப்பு நிலை என்பனவற்றைத் தணித்துவிடும். தீர்வுத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினால் மேற்கு வல்லரசுகளின் ஆட்சி மாற்றத்திற்கான திட்டம் செயலிழந்து போகும். இலங்கைத் தமிழர்களை சாந்தப்படுத்தித் திருப்தியடையச் செய்தால் முஸ்லிம்கள் மீதான தாக்குதலையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடியும். சர்வதேச மட்டத்திலும் இலங்கைக்கு எதிரான நிலைப்பாட்டில் மாற்றம் உண்டாகும். இந்த வழிமுறை ராஜபக்ஷ அரசு தப்பிக் கொள்வதற்கான மார்க்கத்தைத் திறந்து விடும்.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் தீர்மானம் ஆறாவது பிரிவு பின்வருமாறு குறிப்பிடுகிறது.


“6. வடமாகாணசபை உட்பட அனைத்து மாகாணசபைகளும் திறமையுடன் இயங்குவதற்கும் இலங்கையின் அரசியல் யாப்பின் 13 ஆவது திருத்தத்தின்படி செயற்படவும் இலங்கை அரசு வேண்டிய உட்சாகத்தை அளித்தல் வேண்டும்’’

இவற்றைப் பார்க்கும் போது இலங்கை அரசாங்கம் எளிமையாக இவற்றை நிறைவேற்றிவிடலாம் என்று தோன்றவில்லையா? ஆயினும் தீவிரவாத தேசியவாதம் எதற்கும் பணிந்து அடங்கிப் போகப் போவதில்லை. மத அடிப்படைவாதமும், இனவாதமும் இனமுறுகல் போக்கும் உணர்வுகளைத் தூண்டி வளர்ப்பவை. தீவிரவாத ஆதரவாளர்கள் தமது பற்றுறுதியை வெளிப்படுத்தி ஆர்ப்பரிப்பார்கள். குறுகியவாத நோக்குடைய தீவிரவாதிகளை ஆதரிப்பதால் வாக்குகளைக் கொள்ளையடிக்கலாம் எனக் கருதும் அரசாங்கம் திறந்திருக்கும் சமாதானக் கதவு ஊடாகக் காலடி எடுத்துவைத்து உட்பிரவேசிக்க மறுக்கிறது. அரசியல் தீர்வா அல்லது ஆட்சி மாற்றமா இரண்டில் ஒன்றைத் தேர்ந்து கொள்ள வேண்டும் என்ற நிலை இன்று ஏற்பட்டுள்ளது. தீர்வுக்கான கதவுகள் அகலத் திறந்துள்ளன. ஆனால், பிடிவாதம் மிக்க அரசு மாற்றம் எதற்கும் தயாராக இல்லை. மாற்றத்திற்கான அறிகுறிகள் எவையும் தெரியவும் இல்லை. ஆறாவது பிரிவை இன்னொரு கோணத்திலும் பார்க்க வேண்டும். இந்தியா இம்முறை ஜெனீவாவில் வித்தியாசமாக நடந்துகொண்டதை முன்னர் குறிப்பிட்டேன். 6 ஆவது பிரிவில் குறிப்பிட்டிருப்பதுபோல் அரசாங்கம் முன்வந்து மாகாணசபைகளுக்கு 13 ஆவது திருத்தப்படி முழு அதிகாரங்களைக் கொடுத்தால் கடந்த மார்ச் மாதம் ஜெனீவாவில் நிறைவேற்றிய தீர்மானத்தை செப்டெம்பரில் நடக்கப்போகும் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவருதல் பற்றிப் பரிசீலிக்கப்படலாம்.


பகற்கனவுகள் காண்பதற்கு தடைகள், எல்லைகள் இல்லை அல்லவா. இன்னும் பல பகற்கனவுகளை நான் கூறிக்கொண்டு போகலாம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆசியாவில் பொருளாதார ரீதியில் ஒன்றிணைவு ஏற்படுகின்ற அதேவேளை அரசியல் ரீதியிலான ஒருங்கிணைவில் பின்னடைவு ஏற்படுகிறது. ஆபிரிக்கா கண்டத்திற்கு அடுத்ததாக அரசியல் ரீதியான ஒருங்கிணைவில் தோல்விகண்ட கண்டமாக ஆசியா விளங்குகிறது








# ஆசிய நாடுகளுக்கிடையே வலுவடையும் பிளவுகள்



பிரஹ்ம ஷெலானி

இரண்டாம் உலக யுத்தத்தின் போது ஐரோப்பா பிளவுபட்டிருந்தது போன்று ஆசிய நாடுகளிடையே பிராந்திய ரீதியிலான போட்டிகளும் மோதலும் வலுவடைந்துள்ளன.

இவற்றிடையே ஏற்பட்டுள்ள பிரிவினைகள் புவி அரசியல் ரீதியாக ஆபத்துகளையும் உலக சந்தையில் பிரச்சினைகளையும் தோற்றுவித்துள்ளன. ஜப்பானியப் பிரதமர் சின்சோ அபேயும் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பெனிக்னோ அக்கியூனோவும் இந்த ஆபத்துகள் குறித்து அண்மையில் கருத்து வெளியிட்டனர். பெரிய பிரித்தானியாவும் ஜேர்மனியும் இரண்டாம் உலக யுத்தம் தொடங்கிய வேளையில் பொருளாதார ரீதியாக ஒன்றில் ஒன்று தங்கியிருந்தன. ஆனால், அவை ஒன்றோடொன்று யுத்தம் செய்வதில் இறங்கின. அதேபோன்ற நிலைதான் இன்றும் உள்ளது. சீனாவும் ஜப்பானும் பொருளாதார ரீதியில் ஒன்றையொன்று தங்கியுள்ளன. ஆனால் முறுகல் நிலை உள்ளது என அபே கருத்துரைத்தார். பெனிக்னோ அக்கியூனோ சீனாவின் பிரதேச ரீதியான ஊடுருவலை நாஜி ஜேர்மனியின் விஸ்தரிப்புவாதத்திற்கு ஒப்பிட்டுப் பேசினார்.

ஆசியாவின் வேகமான பொருளாதார வளர்ச்சியும் எழுச்சியும் உலகின் கவனத்தை ஈர்த்ததால் அது எதிர்கொள்ளும் சவால்கள் உலகின் கண்களில் இருந்து மறைக்கப்படுகின்றன. பிராந்திய எல்லைப் பிரச்சினைகள் கடற்பிராந்திய எல்லைகள் பற்றிய பிரச்சினைகள் என்பனவும், வீறுகொண்டெழும் தேசியவாதங்களும், இயற்கை வளங்களுக்கான தீவிர போட்டியும், தீங்கு பயக்கக்கூடிய கடந்தகால வரலாற்று நினைவுகளும் அரசுகளுக்கிடையிலான உறவுகளைச் சீர்குலைக்கும் வல்லமை மிக்க சவால்களாகும். ஆசியா உலகின் மிகக் கூடிய சனத்தொகையைக் கொண்ட கண்டம், அதுவே மிகவும் துரிதமாக வளர்ச்சியடையும் கண்டமாயும் உள்ளது. ஆசியாவின் மொத்த தேசிய உற்பத்தி ஆண்டுதோறும் சராசரி 5% இற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியதாக அதிகரிக்கிறது. இவையெல்லாம் இருந்த போதும் ஆசியா உலகின் முதன்மை இடத்தைப் பெறும் என்று கூற முடியாது. ஆசியாவின் வளர்ச்சி தடுத்துநிறுத்த முடியாதது என்றும் மேற்குலகின் வீழ்ச்சி தவிர்க்க முடியாதது என்றும் சில ஆய்வாளர்கள் கற்பிதம் செய்கிறார்கள். ஆனால் இந்த கற்பிதத்தை ஆசியா எதிர்நோக்குகின்ற ஆழமான சவால்கள் கேள்விக்குள்ளாக்குகின்றன.

இரண்டு முக்கியமான பிரச்சினைகள் ஆசியாவின் முன்னேற்றத்திற்குத்தடையாக உள்ளன. முதலாவதாக பொருளாதாரத்திற்கும், அரசியலுக்கும் இடையே பெரிய இடைவெளி ஆசியாவில் உள்ளது. புவியரசியலின் போக்குகள் உலகச் சந்தையில் தீவிர பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. ஆசியாவில் பொருளாதார ரீதியில் ஒன்றிணைவு ஏற்படுகிறது. ஆனால், அரசியல் ஒருங்கிணைவில் ஆசியா பின்னடைவைக் கண்டுள்ளது. ஆபிரிக்க கண்டத்திற்கு அடுத்ததாக அரசியல் ரீதியான ஒருங்கிணைவில் தோல்வியடைந்த கண்டமாக ஆசியா விளங்குகிறது.

இரண்டாவது பிரச்சினை ஆசியாவின் வரலாற்றுடன் தொடர்புடையது. இதனைக் கடந்தகாலம் எவ்வாறு நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் அச்சுறுத்துகிறது என்ற பிரச்சினை என்றும் கூறலாம். வரலாற்றைத் திரித்தலும், கடந்த காலத்துடன் சமரசம் செய்து கொள்ள முடியாதிருப்பதும் ஒன்றோடொன்று போட்டியிடும் தேசிய வாதங்களைத் தோற்றுவித்துள்ளன. தேசியவாதங்கள் ஒன்றையொன்று பரஸ்பரம் பலப்படுத்துவனவாகவும் உள்ளன. ஆசியா தன் கடந்த கால வரலாற்றில் இருந்து பெற்ற வேண்டாத சுமைகளை ஒதுக்கிவைத்துவிட்டு, நிலையான செழிப்புமிக்க எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்க வேண்டும்.

நாடுகளின் எல்லைகளுக்கு மதிப்பளித்தல், சமாதானத்திற்கும் உறுதி நிலைக்கும் அவசியமான முன் நிபந்தனையாகும். ஐரோப்பா இத்தகைய ஒரு கொள்கையின் அடிப்படையிலேயே சமாதானத்தை உருவாக்கியுள்ளது. பல ஐரோப்பிய நாடுகள் விருப்பமில்லாதவிடத்தும் இருக்கும் எல்லைகளை ஏற்றுக்கொண்டு வாழப் பழகியுள்ளன. ஆசியாவில் இருந்து வரும் எல்லைக்கோடுகளைக் குழப்புவதும் மீறுவதும் புவி அரசியல் கொந்தளிப்புகளையும், பதற்றத்தையும் பூசலையும் கிளப்புகின்றன. குறிப்பாக இராணுவப் பலம்மிக்க சீனா வரலாற்று ரீதியான குறைகள் பற்றிப் பேசுகிறது. இவை உண்மையானவையாகவும் இருக்கலாம். கற்பனையானவையாகவும் இருக்கலாம். நீண்டகாலமாகப் பிறநாடுகளின் பகுதிகளாகவும், மீன்பிடிக்கும் கடற்பரப்பாகவும் இருந்த இடங்களைச் சீனா தன்னுடையது என்று கோருகிறது. தெற்கு, கிழக்கு சீனக்கடலில் உள்ள கேந்திர முக்கியத்துவமுடைய தீவுகள் சில வளம்மிக்க இமாலயப் பகுதியான இந்தியாவின் அருணாசாலப் பிரதேச அரசுக்குச் சொந்தமான பகுதிகள் ஆகியவற்றை தனது என சீனா கூறுவதோடு இராணுவப் பலத்தைக் காட்டி அச்சுறுத்துகிறது.

சீனாவின் இவ்வாறான கோரிக்கைகளையும் பிறநாடுகளின் நிலப்பகுதியை தனது என்று கூறுவதையும் 1938 ஆம் ஆண்டில் ஹிட்லர் செக் கோசிலாவாக்கியாவின் நிலப்பகுதிகளைக் கோரியபோது பிற வல்லரசுகள் கண்ணை மூடிக்கொண்டிருந்ததை உதாரணம் காட்டிப் பேசும்போது பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு, எதுவரை பொறுத்துக் கொள்ளலாம் என்று இந்த மாதம் அக்கியூயேனா ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டார்.

ஆசியா பொருளாதார ரீதியில் ஒன்றிணைந்து கொண்டிருக்கிறது. ஆனால் அரசியலில் ஒருங்கிணைவு இல்லை. ஆசியாவின் புவி அரசியலின் பதற்ற நிலைக்கு இதுவே காரணம். பொருளாதாரம் என்ற குதிரை அதனைச் செல்வச்செழிப்பு என்ற பாதையில் கொண்டு செல்ல முயற்சிக்கிறது. ஆயினும் அரசியல் என்ற குதிரை பயங்கரமான இன்னொரு பாதையில் அதனை இழுக்கிறது.

பொருளாதார ரீதியில் நாடுகள் ஒன்றில் ஒன்று பரஸ்பரம் தங்கியிருத்தல், வர்த்தக உறவுகள் நன்கு விருத்தியடைதல் என்பன அரசுகளுக்கிடையில் மிதவாதப் போக்கையும் சுய கட்டுப்பாடான நடத்தையையும் கொண்டு வரும் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை என்ற உண்மையையே இவை எடுத்துக் காட்டுகின்றன. நல்லுறவுகள் அயல் நாடுகளுடன் இல்லாத விடத்து அரசியல் மட்டத்தில் உறவுகளைச் சீர்செய்யாது பொருளாதார உறவுகளை மட்டும் வளர்ப்பதால் உறுதி நிலையைப் பேணுதல் முடியாது. ஆசியாவில் பொருளாதார வளர்ச்சியின் வேகம் குறைதல் மேற்குறித்த அரசியல் பிரச்சினைகளின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. ஆசியாவிற்கு ஒரு பாதுகாப்பு ஒழுங்கமைவு இல்லாததன் ஆபத்துகளை இவை எடுத்துக்காட்டுகின்றன. பிராந்திய மட்டத்திலான ஆலோசனைப் பொறிமுறை கூடப் பலவீனமானதாக இருப்பதைக் காணலாம்.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஐரோப்பாவில் நிகழ்ந்த யுத்தங்களும் அவற்றின் பேரழிவுகளும் அங்கே யுத்தம் என்ற நினைப்பிற்கே


**ஆசியா தன் கடந்தகால வரலாற்றிலிருந்து பெற்ற வேண்டாத சுமைகளை ஒதுக்கி வைத்துவிட்டு நிலையான, செழிப்புமிக்க எதிர்காலத்தை நோக்கிப் பயணிக்க வேண்டும். நாடுகளின் எல்லைகளுக்கு மதிப்பளித்தல், சமாதானத்திற்கும் உறுதிநிலைக்கும் அவசியமான முன்நிபந்தனையாகும். ஐரோப்பா இத்தகைய ஒரு கொள்கையின் அடிப்படையிலேயே சமாதானத்தை உருவாக்கியுள்ளது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று இடமில்லாமல் செய்து விட்டன. ஆனால், ஆசியாவிலோ நிலைமை வேறானது. இங்கு இருபதாம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் ஏற்பட்ட யுத்தங்கள் முறுகலையும் போட்டியையும் இன்றும் கூர்மையாக்கியுள்ளன. 1950களின் பின்னர் நாடுகளுக்கிடையேயான யுத்தங்கள் பல நடைபெற்றன. கொரிய யுத்தமும், திபெத்தைச் சீனா தன்னோடு இணைத்துக் கொண்ட போதும் நாடுகளிற்கிடையிலான அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் தொடரலாயின.

ஐரோப்பா 100 வருடங்களுக்கு முன்னரே வர்த்தகம், முதலீடு என்ற இருவிடயங்களிலும் இன்றைய ஆசியாவை விட ஒருங்கிணைக்கப்பட்டதாக இருந்தது. ஐரோப்பிய நாடுகளின் இராச குடும்பங்கள் திருமண உறவுகளால் ஐக்கியப்பட்டிருந்தன. இருந்த போதும் ஐரோப்பாவின் வர்த்தகமும் அரசியலும் வெவ்வேறு பாதைகளில் சென்றபடியால் முதலாவது உலக யுத்தம் தொடங்கியது.

நாடுகளின் பொருளாதாரத் தங்கியிருத்தல் மட்டும் யுத்தத்தைத் தடுக்க முடியாது என அபே கூறியது சரியானதே. சீனாவையும் 1914க்கு முந்திய ஜேர்மனியையும் ஒப்பீடு செய்வதன் மூலம் அவர் மறைமுகமாக இன்னொரு செய்தியையும் வெளிப்படுத்தியுள்ளார். ஜப்பான் ஒரு ஜனநாயக அரசு, ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் எப்படி விஸ்தரிப்பு வாத எண்ணத்துடன் செயற்பட்ட ஏகாதிபத்திய நோக்கம் கொண்ட சர்வாதிகார ஜேர்மனியை தடுத்து நிறுத்துவதற்கு பிரித்தானியாவின் ஜனநாயக அரசு



முயன்றது போல் ஜப்பானும் இன்று செயற்படுகிறது என்று அபே கூற முனைகிறார்.

ஜப்பானியப் பிரதமரின் கூற்றில் உள்ள முரண்நகை என்னவெனில், ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் ஜப்பான் ஒரு இராணுவமய அரசாக ஏகாதிபத்திய சர்வாதிகாரப் போக்கில் சென்றது. ஜப்பானின் மெஜீ சீர்திருத்தம் (1868 முதல் 1912 வரை) ஒரு சக்தி மிக்க இராணுவத்தை உருவாக்கியது. காலப்போக்கில் அந்த இராணுவம் சிவிலியன் அரசாங்கத்தினை தன் சொற்படி ஆட்டுவித்தது. சீனாவிலும் இதே நிலைதான் ஏற்படப்போகிறது. அங்கு இராணுவ ஜெனரல்கள் மிகுந்த பலம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய ஏகபோக ஆதிக்கத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்காக இராணுவத்திற்குப் பணிந்து போகிறது.

அரசியலுக்கும் பொருளாதாரத்திற்கும் இடையிலான இடைவெளியைக் குறைப்பதன் மூலமே ஆசியாவின் இன்றைய போக்குகளில் உள்ளுறையும் ஆபத்துகளில் இருந்து தப்பிக்கொள்ளலாம். இவ்விடயத்தில் சந்தேகம் வேண்டாம். ஆசியாவில் சமாதானமும் உறுதி நிலையும் அடிப்படையில் தற்போது உள்ள நாட்டு எல்லைகளை மதித்து நடந்து கொள்வதில் தான் தங்கியுள்ளது. நிலப்பரப்பிலும் கடற்பரப்பிலும் நாடுகளுக்கிடையே தோன்றியுள்ள எல்லைப் பிரச்சினைகள் இதனையே கோடிட்டுக் காட்டுகின்றன. தற்போதுள்ள எல்லைகளை நாடுகள் மதித்து நடக்கும் போதுதான் உலகு தழுவிய வளர்ச்சியின் பாதையில் ஆசியா பயணிப்பதும் புதிய உலக ஒழுங்கை ஏற்படுத்துவதும் சாத்தியமாகும்.■

***(பிரம்ரை ஷெலானி புதுடில்லியில் உள்ள ஆராய்ச்சிக்கான மையத்தின் பேராசிரியர்)***

---

*(12ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

விடுதலைப் புலிகள் தங்களை மீள அணிதிரட்டுகிறார்கள் என்று கூறி வண்ணமயமான கதைகளை எழுதுவதற்கு சுயாதீனமானவர்களாக காட்சியளிக்கும் ஊடகவியலாளர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள். அவர்களின் கதைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற பிரசார இயக்கங்களை அடிப்படையாகக் கொண்டவையாகவே வடக்கில் அண்மையில் முன்னெடுக்கப்பட்ட படை நடவடிக்கை அமைந்திருந்தது.

இத்தகைய நடவடிக்கைகளை மக்களின் உருப்படியான பங்கேற்புடன் எவ்வாறு எதிர்க்கக்கூடியதாக இருக்கும் என்பதே இப்போதுள்ள கேள்வி. அதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிடம் புதிய சிந்தனை வேண்டும். அந்தப் புதிய சிந்தனை என்பது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்களை அணிதிரட்டிக் கொண்டுவந்து வடக்கு-கிழக்கில் சிவில் நிருவாகம் வேண்டும் என்றும் வடமாகாணசபைக்கு அதிகாரம் வேண்டும் என்றும் அடாத்தாக கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் கோருவதைப் பற்றியதாக இருக்குமானால், அது இலங்கை அரசியலில் (வடக்கிலும் தெற்கிலும்) இன்னொரு புதிய கட்டத்தைப் பற்றியதாகவே இருக்க முடியும்.


களத்தில் இறங்கி அத்தகைய ஒரு அரசியல் நகர்வை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தினால் செய்ய முடியுமா? அல்லது என்றுமே நடக்கப் போகாத விடயங்களுக்காக வன்னி மக்களை கூட்டமைப்பினர் காத்துக்கொண்டிருக்க வைக்கப்போகிறார்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரத்துக்கு வரப்போகிறவர் யார்?

தெளிவான வெற்றியை யார் பெறுவார்கள் என்பது குறித்து அரசியல் அவதானிகள் நிச்சயமாக எதனையும் கூற முடியாதவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இரு விடயங்கள் நிச்சயமானவை ஒன்று கூடுதலான ஆசனங்களைப் பெறும் தனிக்கட்சியாக பாரதீய ஜனதாவே வரும். மற்றையது காங்கிரஸ் மோசமான தோல்வியைத் தழுவும்.



எம்.பி.வித்தியாதரன்

இந்தியாவில் இதுகாலவரையில் நடைபெற்றிருக்கக்கூடிய சகல பொதுத்தேர்தல்களையும் விட இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் பொதுத்தேர்தலே கடுமையான போட்டிகள் நிறைந்ததாகக் காணப்படுகிறது. உயர்மட்டத் தலைவர்கள் சகலருமே நெருக்கடியான ஒரு கட்டத்தில் இருக்கிறார்கள். காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி, அவரது மகனும் காங்கிரஸின் துணைத் தலைவருமான ராகுல் காந்தி, பாரதீய ஜனதா கட்சியின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி, பாரதீய ஜனதா தலைவர் ராஜ்நாத் சிங் மற்றும் அக்கட்சியின் உயர்மட்டத்தலைவர்களான அருண் ஜேட்லி, ஆனந்த்குமார் ஆகியோரும் இதில் உள்ளடங்குவர்.

ஏப்ரில் 7 ஆம் திகதி ஆரம்பமான 9 கட்ட வாக்களிப்புகளில் இதுவரையில் 7 கட்டங்கள் முடிவடைந்துவிட்டன. இறுதி இரு கட்டங்களும் மே 7 ஆம் திகதியும் 12 ஆம் திகதியும் நடைபெறுகின்றன. வாக்கு எண்ணிக்கை மே 16 ஆம் திகதி ஆரம்பமாகும்.

கவனத்தை ஈர்க்கும் முக்கியத்துவமான போட்டிகள் உத்தரப்பிரதேசத்தின் வாரணாசிங் தொகுதியில் மோடிக்கும் ஆம் ஆத்மி கட்சியின் தலைவரான அரவிந்த் கெஜ்ரிவாலுக்கும் அமேதி தொகுதியில் ராகுல் காந்திக்கும் ஆம் ஆத்மியின் குமார் பிஸ்வாஸுக்கும் பஞ்சாப் மாநிலத்தின் அமிர்தசரஸ் தொகுதியில் பாரதீய ஜனதாவின் அருண் ஜேட்லிக்கும் முன்னாள் காங்கிரஸ் முதலமைச்சரான அம்ரிந்தர் சிங்கிற்கும் இடையிலானதாகும். இந்தப் போட்டிகள் சர்வதேச ஊடகங்களில் முக்கிய இடத்தைப் பிடித்திருக்கின்றன. முக்கியமான தலைவர்கள் ஒருவரையொருவர் எதிர்த்துக் களத்தில் நிற்கிறார்கள் என்பதே இதற்குக் காரணமாகும்.

அரசியல் ரீதியில் வாரணாசிப் போட்டி மோடிக்கு மிகுந்த முக்கியத்துவம் இல்லாததாக சிலவேளை இரு க்கக்கூடும். ஏனென்றால், அவர் தனது குஜராத் மாநிலத்தில் நிச்சயமாக வெற்றிபெறக் கூடிய வடோடரா தொகுதியிலும் போட்டியிடுகிறார். வாரணாசியில் மோடி தோற்றுவிடுவார் என்றில்லை. ஆனால், அத்தொகுதியில் தற்செயலாக அவர் தோல்வியடைய நேரிட்டார், மற்றைய தொகுதியில் அடையக்கூடிய வெற்றியில் உள்ள பட்டொளியை அது அபகரித்துவிடும் என்பது மாத்திரமல்ல, 543 ஆசனங்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் ஆட்சியமைப்பதற்குப் போதுமான ஆசனங்கள் பாரதீய ஜனதாவுக்கும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கும் கிடைத்தாலும் கூட அவர் அந்த அரசாங்கத்துக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமை தாங்குவதற்கான தார்மீக அதிகாரம் அவருக்கு இல்லை என்ற வாதம் கிளம்புவதற்கு வழியேற்பட்டுவிடக் கூடும். உண்மையில் மோடி இரு தொகுதிகளில் போட்டியிட்டிருக்கக்கூடாது. இதுவரை காலத்தில் பொதுத்தேர்தல் ஒன்றில் இருதொகுதிகளில் போட்டியிட்டு ஒரு தொகுதியில் மாத்திரம் வெற்றிபெற்ற எந்தவொரு தலைவருமே இந்தியாவின் பிரதமராக வந்ததில்லை. இருதொகுதிகளில் போட்டியிடும் இந்தப் பழக்கத்தை ஆரம்பித்து வைத்தவர் காலஞ்சென்ற பிரதமர் இந்திரா காந்தியே யாவார். அவசரகால நிலை பிரகடனம் செய்யப்பட்டதையடுத்து இந்தியாவில் மூண்ட நெருக்கடிகளுக்குப் பிறகு 1977ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் இந்திராகாந்தி அவரது செல்வாக்குமிக்க (உத்தரப் பிரதேசத்தின்) ரேபரேலி தொகுதியில் எதிர்பாராத வகையில் ராஜ்நாராயணனிடம் தோல்வியைத் தழுவினார். தற்போது தங்களது வெற்றியில் நிச்சயமில்லாத பிராந்திய தலைவர்கள் குறிப்பாக மாநில சட்டசபைத் தேர்தல்களில் இருதொகுதிகளில் போட்டியிடும் வழக்கத்தைத் தொடருகிறார்கள்.

பாரிய அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கப் போவதாக உறுதியளித்திருக்கும் மோடி இளைஞர், யுவதிகள் மத்தியில் பெரும் ஆர்வத்தைத் தூண்டியிருக்கிறார். அத்துடன் அவர் தனக்கு எதிரான வாக்குகள் (ஆம் ஆம்மி, காங்கிரஸ், சமாஜ்வாதிக்கட்சி மற்றும் பகுஜன் சமாஜ்கட்சி ஆகிய கட்சிகளின் வேட்பாளர்கள் மத்தியில்) சிதறப்போவதால் பயனடையக் கூடியதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மோடிக்கு எதிரான கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு வேட்பாளரை அவருக்கு எதிராக நிறுத்தியிருந்தால் கடுமையான போட்டியை ஏற்படுத்தியிருக்க முடியும். இந்துக்களின் முக்கியமான யாத்திரைத் தலமான வாரணாசியில் கடந்த பொதுத் தேர்தலில் பாரதீய ஜனதாவின் வேட்பாளராக நின்ற மூத்த தலைவர்களில் ஒருவரான முரளி மனோகர் ஜோஷி 18 ஆயிரத்துக்கும் குறைவான வாக்குகள் வித்தியாசத்திலேயே வெற்றிபெறக் கூடியதாக இருந்தது. எது எவ்வாறிருந்தாலும் கெஜ்ரிவாலை எவருமே குறைத்து மதிப்பிடமுடியாது. டில்லி மாநில சட்டசபைத் தேர்தலில் காங்கிரஸின் முன்னாள் முதலமைச்சர் ஷீலா தீக்ஷித்தை அவரது தொகுதியில் 60 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தவர் கெஜ்ரிவால், அதன் காரணத்தினால் தான் பாரதீய ஜனதாவும் மோடியும் ஆபத்து நேரக்கூடிய சூழ்நிலையைத் தவிர்ப்பதற்காக ஒன்றுக்கும் அதிகமான தொகுதிகளைத் தெரிவு செய்திருக்கக்கூடும்.

காந்தி குடும்பத்தின் செல்வாக்கு மிக்க இன்னொரு தொகுதியான அமேதியில் இத்தடவை ராகுல் காந்தி மிகவும் கடுமையான போட்டியை எதிர்நோக்குகிறார். கிராமப்புறத் தொகுதியான அமேதியில் குமார் பிஸ்வால் கடந்த மூன்றுமாதகாலமாக பிரசாரத்தை மேற்கொண்டு அப்பகுதியின் மூலை முடுக்குகள் எல்லாம் தனிப்பட்ட முறையில் சென்றுவந்திருக்கிறார். தனக்காக வாக்குகளைச் சேகரிப்பதில் சகோதரி பிரியங்கா காந்திக்கு இருக்கக்கூடிய ஆற்றலிலேயே ராகுல் காந்தி நம்பிக்கை வைத்திருக்கிறார். அமேதியிலும் தாயார் சோனியா காந்தி போடியிடும் ரேபரேலி தொகுதியிலும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை பிரியங்கா காந்தி தன் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு நடத்துகிறார். ஆம் ஆத்மி வேட்பாளரினால் மாத்திரமல்ல, பாரதீய ஜனதா கட்சியின் வேட்பாளரான முன்னாள் தொலைக்காட்சி நடிகை சுமிரிதி இரானியிடமிருந்தும் பெரும் போட்டியை ராகுல் காந்தி எதிர்நோக்கவேண்டியிருக்கிறது. இரானி இப்போது பாரதீய ஜனதாவின் துணைத்தலைவர்களில் ஒருவராகவும் இருக்கிறார்.

சுவாரஸ்யமான இன்னொரு போட்டி அமிர்தசரஸில் இடம்பெறுகிறது. இங்கு முன்னாள் மத்திய அமைச்சரான அருண் ஜேட்லி முன்னாள் முதலமைச்சரும் அரச குடும்பத்தைச் சேர்ந்தவருமான அமரிந்தர் சிங்கிடமிருந்து மிகவும் கடுமையான போட்டியை எதிர்கொள்கிறார். ஜேட்லி தனது கட்சிக்காக வெற்றிகரமான பல தேர்தல் பிரசாரங்களை முன்னின்று நடத்திய மூத்த ஒரு தலைவர் என்றபோதிலும், இப்போது தான் முதற்தடவையாக நேரடி தேர்தல் போட்டிக்கு முகங்கொடுக்கிறார். ஏற்கனவே அவர் பாராளுமன்றத்தின் ராஜ்ய சபாவின் உறுப்பினராக இருந்திருக்கிறார். ராஜ்ய சபா உறுப்பினர்கள் சட்டசபை உறுப்பினர்களினால் தெரிவு செய்யப்படுபவர்கள்.

எது எவ்வாறிருப்பினும், இந்தப் பொதுத் தேர்தல் அரசியல் அறிஞர்களையும் ஏன் அரசியல் கட்சிகளையும் கூட தடுமாறவைத்திருக்கிறது. கடந்த பத்து வருடங்களாக மத்தியில் அதிகாரத்தில் இருந்துவரும் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கு மக்கள் மத்தியில் இருக்கும் கடுமையான எதிர்ப்பை இந்திராகாந்தி காலத்தில் அவசரகால நிலைக்குப் பிறகு காங்கிரஸ் கட்சிக்கு இருந்த எதிர்ப்புடன் அரசியல் ஆய்வாளர்கள் ஒப்பிடுகிறார்கள். இதை

**மோடிக்கு எதிரான கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு வேட்பாளரை அவருக்கு எதிராக நிறுத்தியிருந்தால் கடுமையான போட்டியை ஏற்படுத்தியிருக்க முடியும். இந்துக்களின் முக்கியமான யாத்திரைத் தளமான வாரணாசியில் கடந்த பொதுத் தேர்தலில் பாரதீய ஜனதாவின் வேட்பாளராக நின்ற மூத்த தலைவர்களில் ஒருவரான முரளி மனோகர் ஜோஷி பதினெட்டாயிரத்திற்கும் குறைவான வாக்குகள் வித்தியாசத்திலேயே வெற்றிப்பெறக் கூடியதாகவிருந்தது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோனியா காந்தியின் எதிர்காலம்



சோனியா காந்திக்கு இப்போது 67 வயது. மன்மோகன் சிங், சரத்பவார் போன்றவர்களுடன் ஒப்பிடும்போது அவர் வயதில் குறைந்தவராக இருக்கலாம். ஆனால், அரசியல் சிக்கல்களில் இருந்து தன்னை விடுவித்துக்கொள்ள சோனியா காந்தி திட்டமிடுகிறார் போலத் தெரிகிறது. அண்மைக்காலமாக அவருக்கு உடல்நலக் குறைபாடுகளும் ஏற்பட்டிருக்கின்றன. அதன் காரணத்தினால், ராகுல் காந்தியை முன்னிலைப்படுத்த வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

128 வருடகால பழமை வாய்ந்த காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரை, நீண்டகாலம் தலைமைப்பதவியை வகிப்பவராக சோனியா காந்தியே விளங்குகிறார். அவர் மிகவும் சாதுரியமாகச் செயற்படக் கூடியவர். விவேகி, தேர்தல் முடிவுகள் எவ்வாறு அமையப் போகின்றன என்று தெரிந்தாலும், அவர் எந்த அறிகுறியையும் முகத்தில் காட்டுகிறாரில்லை.

ராஜீவ் காந்தியின் மணப் பெண்ணாக இந்தியாவுக்கு வந்த சோனியாகாந்திக்கு கடந்த நாலரைத் தசாப்த காலமும் மிகவும் சவால் மிக்கதொரு காலகட்டமாகவே இருந்திருக்கிறது. மாமியார் திருமதி இந்திரா காந்தியும் கணவர் ராஜீவ் காந்தியும் கொடூரமான முறையில் கொல்லப் பட்டார்கள்.

நரசிம்மராவ் பிரதமராக இருந்த பிறகு காங்கிரஸ் அதிகாரத்தை இழந்ததையடுத்து மீண்டும் காந்தி குடும்பத்தின் வழிகாட்டலை கட்சி நாடிய போது தலைமைப் பொறுப்பு சோனியா மீது திணிக்கப்பட்டது. தற்போது அவர் எதிர்நோக்குகின்ற சவால் முற்றிலும் அரசியல் ரீதியானது. அவரது வாழ்வில் இது மிகவும் கடுமையான சவாலாகும். நரேந்திர மோடியின் வருகையால் ஊக்கம் பெற்றிருக்கும் பாரதீய ஜனதாவின் முன்னால் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி பெரும் போராட்டத்தை நடத்த வேண்டியிருக்கிறது.

ராகுல் காந்தியும் தயக்கத்துடன் தான் முன்னணிக்கு வந்தார். அவர் காங்கிரஸின் துணைத்தலைவராக் கப்பட்ட போதிலும், மக்களைக் கவர்ந்திழுக்கத் தவறிவிட்டார். அடுத்து எத்தகைய நடவடிக்கையில் சோனியா காந்தி இறங்குவார் என்பது எவருக்கும் தெரியவில்லை.

முற்றுமுழுதாகக் காங்கிரஸின் தலைமைப் பொறுப்பை ராகுல் காந்தியிடமே ஒப்படைப்பாரா அல்லது அடுத்த ஆயுதமான 'பிரியங்காவை' பயன்படுத்தத் திட்டமிடுவாரா? பிரியங்காவை முன்னிலைப்படுத்த வேண்டுமென்று காங்கிரஸ் தலைவர்கள் பலர் ஏற்கனவே வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். எல்லாமே மே 16 வெளிவரப்போகும் தேர்தல் முடிவுகளிலேயே தங்கியிருக்கிறது. ■

பாரதீய ஜனதா தனக்கு மிகவும் சாதகமாக எளிதாக பயன்படுத்தியிருக்க முடியும். ஆனால், மோடி போன்ற உறுதியான ஒரு தலைவரை பிரதமர் வேட்பாளராக முன்னிலைப்படுத்திய போதிலும்கூட, அதைச் செய்ய அக் கட்சி தவறிவிட்டது. மோடி முன்னிலைப்படுத்தப்பட்டதால் எல்.கே.அத்வானி, முரளி மனோகர் ஜோஷி மற்றும் சுஷ்மா சுவராஜ் போன்ற பல மூத்த தலைவர்கள் அதிருப்தியற்றிருக்கிறார்கள். பாரதீய ஜனதாவின் இந்தப் பலவீனத்தை தனக்கு அனுகூலமான முறையில் பயன்படுத்திக் கொள்வதற்கு காங்கிரஸ் கட்சி முயற்சித்துக்கொண்டிருக்கிறது.

மோடியிடம் பல ஆற்றல்கள் இருக்கின்றபோதிலும், அவர் சிறுபான்மை இனத்தவர்களினால்- குறிப்பாக, கிறிஸ்தவர்களினாலும் முஸ்லிம்களினாலும் நாட்டு மக்கள் மத்தியில் பிரிவினையை உண்டுபண்ணக்கூடிய ஒரு தலைவராகவே நோக்கப்படுகிறார். சிறுபான்மையினங்கள் மத்தியில் உள்ள சிலர் பாரதீய ஜனதாவுக்கு முன்னரும் வாக்களித்திருக்கிறார்கள் என்பது உண்மையென்ற போதிலும், ஒரு பிளவுச் சக்தியாக மோடி நோக்கப்படுவது கட்சிக்குப் பெரும்பாதிப்பை ஏற்படுத்துமென்று எதிர்பார்க்கப்படுகிறது. பல தொகுதிகளில் சிறுபான்மை இனத்தவர்கள் ஒருமித்த உணர்வுடன் வாக்களிக்கக்கூடிய சூழ்நிலை பாரதீய ஜனதாவின் வாய்ப்புகளைப் பாதிக்கலாம். இந்தப் பிரச்சினையை மோடி (அபிவிருத்திக்காகவும் சுபிட்சத்துக்காகவும் வாக்களிக்குமாறு) இளைய தலைமுறையினருக்கு அழைப்பு விடுப்பதன் மூலமாக சமாளிக்க முயற்சிக்கிறார்.


சுமார் 400 வேட்பாளர்களைக் களத்தில் இறக்கியிருக்கும் ஆம் ஆத்மி கட்சியின் வளர்ச்சி முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய ஒரு அம்சமாகும். இருபதுக்கும் குறைவான ஆசனங்களிலேயே ஆம் ஆத்மி வெற்றிபெறக்கூடும் என்ற போதிலும், போட்டியிடுகின்ற தொகுதிகளில் கணிசமானவற்றில் ஒரு மட்டமான வீத வாக்குகளை அது பெறக் கூடியதாக இருக்குமானால் மோடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் கட்சியின் வாய்ப்புகளைப் பாழாக்க முடியும். கெஜ்ரிவால் விடுக்கும் அழைப்பு பரந்தளவில் மக்களைச் சென்றடைவதை செய்தி அறிக்கைகள் மூலம் உணர்ந்துகொள்ளக் கூடியதாக இருக்கிறது. அவர் வறியவர்களின் ஒரு மீட்பராக நோக்கப்படுகிறார். மிகவும் நெடுந்தொலைவில் உள்ள பிராந்தியங்களில் பல கிராமங்கள் கெஜ்ரிவாலை ஆதரிக்கின்றன. அவருக்கு இருக்கின்ற பிரதானமான பாதகநிலை என்னவென்றால், போதுமான ஆசனங்களில் அவரது கட்சி வெற்றி பெற முடியாமற் போகக் கூடும் என்பதைத் தெரிந்திருக்கும் மக்கள் அக்கட்சிக்கு வாக்களிப்பது வாக்குகளை விரயமாக்குவதற்குச் சமமானதாக அமையலாம் என்று நினைப்பதாகும்.

இத்தகைய சிக்கல் நிலைமைகள் காரணமாக தேர்தலில் தெளிவான வெற்றியை யார் பெறுவார்கள் என்பது குறித்து அரசியல் அவதானிகள் நிச்சயமாக எதையும் கூறமுடியாதவர்களாக இருக்கிறார்கள். ஆனால், இரு விடயங்கள் நிச்சயமானவை. ஒன்று கூடுதலான ஆசனங்களைப் பெறும் தனிக்கட்சியாக பாரதீய ஜனதாவே வரும். மற்றது, காங்கிரஸ் படுமோசமான தோல்வியைத்தழுவும். ஆனால், ஊடகங்களின் கணிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி தெளிவான பெரும்பான்மைப் பலத்தைப் பெறும் என்றே தோன்றுகிறது. பெரும்பாலான அபிப்பிராய வாக்கெடுப்புகளும் அந்தமாதிரியே கூறுகின்றன. ஆனால், இப்போதெல்லாம் ஊடகங்களின் நம்பகத்தன்மை மிகவும் தாழ்ந்த மட்டத்தில் இருப்பதால் அவற்றின் அபிப்பிராய வாக்கெடுப்புகளை பெரும்பாலான மக்கள் அக்கறையுடன் நோக்குவதில்லை. பாரதீய ஜனதாவும் காங்கிரஸும் அள்ளிவீசுகின்ற பெருமளவு பணமே ஊடகங்களின் செய்தி அறிக்கைகள் மீது செல்வாக்குச் செலுத்துகின்றது என்று மக்கள் நினைக்கிறார்கள்.

இதுவரையில் காங்கிரஸின் தேர்தல் பிரசாரங்களுக்கு ராகுல் காந்தியே தலைமைதாங்கி வழிநடத்தினார். சோனியாகாந்தி இரண்டாம் பட்சமான ஒரு பங்களிப்பையே செய்தார். இவர்களின் பிரசாரங்கள் மனதிற்பதியக்கூடிய வகையில் அமைந்திருக்கவில்லை என்றுதான் கூறவேண்டும். இதன் காரணத்தினால்தான் தேர்தலுக்குப் பிறகு பிரியங்கா தலைமைத்துவப் பொறுப்புக்கு வரவேண்டுமென்று பெரும்பாலான காங்கிரஸ் காரர்கள் விரும்புகிறார்கள். காங்கிரஸின் செல்வாக்குமிக்க மூத்த தலைவரான ஜனார்த்தன் திரிவேதி போன்றவர்கள் பிரியங்காவை முன்னிலைப் படுத்த வேண்டுமென்ற நிலைப்பாட்டை எடுத்திருக்கிறார்கள். கட்சித் தலைமைத்துவமும் பிரியங்காவும் அத்தகைய நினைப்பை தற்போதைக்கு நிராகரித்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.



தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவும் மேற்கு வங்காள முதலமைச்சர் மம்தா பானர்ஜியும் அவரவரது கட்சிக்கு சாத்தியமானளவுக்கு கூடுதல் பட்ச ஆசனங்களை வென்றெடுக்கும் இலக்கோடு பிரசாரங்களை மேற்கொண்டிருந்தார்கள். தேசிய ஜனநாயகக் கூட்டணி குறைந்தபட்சம் 225 ஆசனங்களைக் கைப்பற்றத் தவறும் பட்சத்தில் தான் ஜெயலலிதாவுக்கும் மம்தாவுக்கும் வாய்ப்பு கிட்டும். தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு 200க்கும் குறைவான ஆசனங்கள் கிடைக்குமானால், அவர்கள் இருவரில் எவராவது ஒருவரது தலைமையில் சமஷ்டி முன்னணியொன்று அமைக்கப்படக்கூடிய வாய்ப்பு பிரகாசமாகலாம்.

யார் அதிகாரத்துக்கு வரப்போகிறார்கள் என்பதை அறிய இந்திய மக்களும் உலகமும் இன்னும் சில தினங்கள் பொறுத்திருக்க வேண்டும். தெற்காசியாவில் உள்ள எமது அயல் நாடுகள் மாத்திரமல்ல, அமெரிக்கா, சீனா, ரஷ்யா,ஜப்பான் போன்ற வல்லாதிக்க நாடுகளும் இந்தியத் தேர்தல் முடிவுகளைப் பெரும் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றன. மோடி வெற்றி பெறுவாரா? சாதித்துக் காட்டுவாரா? மேலே கூறப்பட்ட நாடுகளில் கொள்கை வகுப்பாளர்கள் மத்தியில் எழுந்துள்ள முக்கியமான கேள்வி இது, ஏனென்றால் மோடி அதிகாரத்துக்கு வருவாரேயானால், இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் ஒரு நகர்வு ஏற்படலாம். அந்த நகர்வு இறுக்கப் பிடிப்புடைய ஒரு திசைமார்க்கத்தில் அமையக்கூடும்.

## உண்மையான பிரதமர் யார்?

தேர்தல் பிரசாரங்கள் சூடுபிடித்துக் கொண்டிருந்தபோது ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கத்தின் செயற்பாடுகள் குறித்து இரு புதிய நூல்கள் வெளியாகின. இது காங்கிரஸ் தலைமைத்துவத்துக்கு பெரும் கவலையை ஏற்படுத்திவிட்டது. ஒரு நூல் பிரதமர் மன்மோகன் சிங்கின் ஊடக ஆலோசகராக இருந்த சஞ்சய பாரு எழுதியது. மற்றையது முன்னாள் நிலக்கரித்துறைச் செயலாளர் பி.சி.பராக் எழுதியது.

சஞ்சய பாரு முன்னர் பிரதமருக்கு மிகவும் நெருக்கமானவராக விளங்கியவர். அத்துடன் முக்கியத்துவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வாய்ந்த ஆவணங்களைப் பார்க்கக்கூடிய அந்தஸ்தில் இருந்தவர். காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி இந்திய நிருவாக சேவையின் சிரேஷ்ட அதிகாரியான பூலோக் சட்டர்ஜி ஊடாக பிரதமர் அலுவலகத்தை 'றிமோட் கொன்ட்ரோல்' மூலம் இயக்கிக் கொண்டிருந்தார் என்று சஞ்சய பாரு குற்றஞ்சாட்டியிருக்கிறார். சட்டர்ஜி காந்தி குடும்பத்துக்கு மிகவும் நெருக்கமானவர் என்று கூறப்படுகிறது. பிரதமர் அலுவலகத்தில் அவர் சக்தி வளத்துறைச் செயலாளராக பதவி வகித்தார். முக்கியத்துவம் வாய்ந்த சகல ஆவணங்களும் முதலில் திருமதி காந்திக்குக் காண்பிக்கப்பட்டன. அவரால் அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்கள் மாத்திரமே பிரதமர் அலுவலகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன என்று சஞ்சய பாரு THE ACCIDENTAL PRIMEMINISTER என்ற தனது நூலில் எழுதியிருக்கிறார்.

சஞ்சய பாருவினால் தெரிவிக்கப்பட்டிருக்கும் சில குற்றச்சாட்டுகளை உறுதிப்படுத்தும் வகையில் இந்திய நிருவாக சேவையின் இன்னொரு அதிகாரியான பராக்கும் தனது 'Coal-gate and other truths' என்ற நூலில் பிரதமர் தீர்மானங்களை எடுக்கவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார். உச்ச நீதிமன்றத்தில் மேற்பார்வையின் கீழ் மத்திய புலனாய்வுப் பணியகத்தினால் (சி.பி.ஐ) இப்போது விசாரிக்கப்பட்டு வரும் 'கோல் கேட்' ஊழல் விவகாரத்தில் பிரதமர் சம்பந்தப்பட்டிருந்ததாக பலர் குற்றஞ்சாட்டுகிறார்கள். நிலக்கரி அகழ்வுக்காக நிலத்துண்டுகள் ஒதுக்கப்பட்ட விவகாரத்தில் சில சர்ச்சைக்குரிய ஒதுக்கீடுகள் இடம்பெற்றபோது நிலக்கரி அமைச்சுக்கு பிரதமர் தான் பொறுப்பாக இருந்தார்.


சஞ்சய பாருவின் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்று பிரதமர் அலுவலகம் வர்ணித்திருக்கிறது. நூலில் எழுதப்பட்டிருக்கும் விடயங்கள் குறித்தும் அது வெளியிடப்பட்ட காலகட்டம் குறித்தும் பிரதமர் மிகுந்த கவலை கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. பிரதமரின் மகள் சஞ்சய பாருவை வெளிப்படையாகவே கண்டனம் செய்திருக்கிறார். பாரு மீது தனது தந்தையார் வைத்திருந்த நம்பிக்கைக்கு அவர் துரோகம் செய்துவிட்டார் என்று மகள் கூறியிருக்கிறார்.

நூல் வெளியிடப்பட்ட தருணம் அதன் வெளியீட்டாளர்களினாலேயே தீர்மானிக்கப்பட்டது என்றும் அதில் தனக்கு எந்தப் பங்கும் இல்லை என்றும் பாரு மறுத்திருக்கிறார். உண்மையில், தேர்தலுக்குப் பிறகு நூலை வெளியிடவே தான் விரும்பியிருந்ததாகவும் ஆனால், தேர்தலில் போட்டியிடவில்லை என்றும் பிரதமர் ஏற்கனவே அறிவித்துவிட்டதால் அவர் ஓய்வு பெறுவதற்கு முன்னதாக வெளியிடுவதே பொருத்தமாக இருக்குமென்று வெளியீட்டாளர்கள் கூறியதாகவும் பாரு தெரிவித்திருக்கிறார்.

என்ன காரணத்தைத் தான் கூறினாலும், காங்கிரஸ் தலைமைத்துவத்தைப் பொறுத்தவரை அதுவும் விசேடமாக, காந்தி குடும்பத்தவர்களைப் பொறுத்தவரை மிகவும் மோசமான நேரத்திலேயே இந்த நூல்கள் வெளிவந்திருக்கின்றன. காந்தி குடும்பமே அரசாங்கத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது என்ற எண்ணத்தை நூல்கள் கொடுக்கின்றன. மக்கள் மத்தியில் ஏற்கனவே அத்தகைய அபிப்பிராயமே இருக்கிறது. பிரதமர் அதிகாரமெதுவும் இல்லாத ஒரு பேர் வழியாகக் காணப்படுவதால், ஆட்சிமுறையில் உள்ள பிரச்சினைகள் சகலதிற்கும் காந்தி குடும்பமே பதில் கூறவேண்டியிருக்கிறது. காந்தி குடும்பத் தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்களில் பிரதமர் வெறுமனே தனது கையெழுத்தை மாத்திரமே போட்டார் என்றல்லவா ஆகிறது.



பிரதமர் அதிகாரமற்றவராக செயலிழக்கச் செய்யப்பட்டதாக பாரு எழுதியிருக்கும் அதேவேளை, பராக் நிலக்கரித்துறையில் ஊழல் கும்பல்கள் தங்களது அட்டகாசத்தைச் செய்ய பிரதமர் அனுமதித்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார். பிரதமர் அவ்வாறு அனுமதித்தார் என்றால், வேறு எங்கோ இருந்து அறிவுறுத்தல்கள் வந்திருக்கக்கூடும் என்றுதானே அர்த்தம். அந்த இடம் எதுவாக இருக்கக்கூடும்? ஏன் அவ்வாறு செய்யப்பட்டது? இந்தக் கேள்விகளுக்கான விடைகள் அரசியல் அவதானிகளுக்கும் மக்களுக்கும் தெளிவாக இருக்கக்கூடும்.





உண்மையில் தவறுகளைச் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்ட அதிகாரமற்ற ஒரு பேர்வழியாக பிரதமரைக் காண்பிக்கவே சஞ்சய பாரு முயற்சித்திருக்கிறார். அவரது நூல் பெரும்பாலான குற்றப் பொறுப்பை காங்கிரஸ் தலைமைத்துவம் மீதே சுமத்துகிறது. எனவே, ஒரு வகையில் நோக்குகையில் மன்மோகன் சிங்கின் பங்களிப்புகளை ஒப்பீட்டளவில் நல்ல கோணத்தில் பார்ப்பதற்கு இந்த நூல் உதவியிருக்கிறது என்றும் கூறமுடியுமல்லவா?

இந்த நூலுக்குக் கிடைத்த பிரசித்தத்தினால் கவலையடைந்த காங்கிரஸ் சகல தனியார் தொலைக்காட்சி அலைவரிசைகளிலும் சோனியாகாந்தியைக் காண்பிக்கும் அரை நிமிடநேர விளம்பரமொன்றைக் கொடுத்திருந்தது. பிரபலமான அலைவரிசைகள்

**(54ஆம் பக்கம் பார்க்க...)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஜனநாயகத் திருவிழாவில்

# மோடி, லேடி, டாடி






முத்தையா
காசிநாதன்

ஜனநாயகத் திருவிழா ஒன்று தமிழகத்தில் நடந்து முடிந்திருக்கிறது. அடித்தட்டு மக்களிடமும் அரசியல்வாதிகள் அன்பு காட்டும் தேர்தல் களத்தில் ஏறக்குறைய 5.50 கோடி வாக்காளர்களில் 73 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் வாக்களித்துள்ளார்கள். கடந்த 2009 பாராளுமன்றத் தேர்தலில் பதிவான வாக்குகள் 73 சதவீதம். எத்தனையோ கட்சிகள். கலர்புல் காட்சிகள். பல்வேறு வேட்பாளர்கள்.

ஆனால் போட்டி என்பது மூன்று அணிகளுக்கு இடையே மட்டுமே காணமுடிந்தது. ஒன்று தி.மு.க. தலைமையிலான அணி. இன்னொன்று அ.தி.மு.க. மூன்றாவதாக பா.ஜ.க. தலைமையில் அமைந்த தேசிய ஜனநாயகக் கூட்டணி. பிரசாரத்திற்கு அனைத்துத் தலைவர்களுமே வந்து விட்டார்கள். மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரகாஷ் காரத்தில் துவங்கி, பா.ஜ.க.வின் அத்வானி, அக்கட்சித் தலைவர் ராஜ்நாத்சிங், காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி, அடுத்து வரப்போகும் தலைவர் ராகுல் காந்தி என்று தலைவர்களுக்குப் பஞ்சமில்லாத தமிழகத் தேர்தலாக இந்தப் பாராளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரபரப்பான தேர்தல் முடிவு காத்திருக்கிறது. எந்தக்கட்சியின் வேட்பாளர் ஜெயித்தாலும் அவருக்கும் தோல்வியடையும் வேட்பாளருக்கும் இடையே இருக்கக்கூடிய வாக்கு வித்தியாசம் ஆயிரக்கணக்கில் மாத்திரம் இருந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை. அந்த அளவிற்கு ஆய்வுகளினால் கூட சரியாகக் கணிக்க முடியாததாக அமைந்திருக்கிறது தமிழகத்தில் நாடாளுமன்றத் தேர்தல்

இதுதவிர பிரசார ஹீரோக்கள் என்ற வரிசையில் களத்தில் நின்ற தலைவர்கள் என்று எடுத்துக் கொண்டால் பா.ஜ.க. பிரதமர் வேட்பாளர் நரேந்திரமோடி, அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா, தி.மு.க. தலைவர் கருணாநிதி என்று அடுக்கிக் கொண்டே போகலாம். இவர்களில் மோடியும், ஜெயலலிதாவும் ஹெலி கொப்டர் பிரசாரம். கலைஞர் கருணாநிதி காரில் பிரசாரம். ஆனால், வைகோ,. ராமதாஸ் போன்றவர்கள் பெரும்பாலும் தங்கள் தொகுதிகளுக்கு உள்ளேயே தங்கிப் போனார்கள். பெயருக்கு சில தொகுதிகளில் பிரசாரம் செய்துவிட்டு, தங்கள் கட்சியோ, தாங்களோ போட்டியிடும் தொகுதிகளுக்குள் முடங்கிப் போனார்கள். தமிழகம் முழுவதும் ஏறக்குறைய 229 சட்டமன்றத் தொகுதிகளில் சாலைப்பிரசாரம் செய்தது மு.க. ஸ்டாலின். அதேபோல் விஜயகாந்தும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்காக தீவிரப் பிரசாரம் மேற்கொண்டார். காங்கிரஸ் கட்சிக்காக நடிகர் கார்த்திக் நீட்டிய அன்புக் கரம் தான் ஆறுதல் கரமாக அமைந்தது.

பெண்மணிகளின் பிரசாரம் வேறு களைகட்டியது. தி.மு.க. சார்பில் நடிகை குஷ்பு, ராஜ்ய சபை எம்.பி. கனிமொழி. பா.ஜ.க. சார்பில் வானதி சீனிவாசன், அ.தி.மு.க. சார்பில் நடிகை நிர்மலா, நடிகை விந்தியா, முன்னாள் வாரியத் தலைவர் சரஸ்வதி, கிராமியக் கலை அனிதா குப்புசாமி என்று கலக்கினார்கள். கடைசி நேரத்தில் காங்கிரஸுக்காக மும்தாஜ் கூட களத்திற்கு வந்தார். இப்படி கலக்கல் பிரசாரத்தினை காசு எதுவும் கொடுக்காமல் கேட்டார்கள் தமிழக வாக்காளர்கள். நடிகர்கள் பட்டாளமும் பிரசாரத்தில் குதித்தது. நடிகர் ஆனந்த்ராஜ், பொன்னம்பலம், தியாகு, குண்டு கல்யாணம், சிங்கமுத்து, நடிகர் ராமராஜன் என்று ஒரு பட்டாளமே அ.தி.மு.க.விற்காக வாக்காளர்களுக்கு அப்பீல் விட்டது. தி.மு.க. சார்பில் குமரிமுத்து, நடிகர் வாகை சந்திரசேகர் போன்றோர் இருந்தனர். ஆனால் எப்போதும் பிரசாரக் களத்தில் நிற்கும் நடிகர் நெப்போலியன் இந்த முறை மிஸ்ஸிங். ஆக ஜனநாயகம் என்ற மேடையில் இத்தனை நடிகர்கள். அனைவரின் நோக்கமுமே தங்கள் கட்சி வேட்பாளர்களுக்கு எப்படி வாக்குகளை வாரிக் குவிப்பது என்பது மட்டுமே.

பிரசாரத்தின் தொடக்கம் அ.தி.மு.க.விற்கும், தி.மு.க.விற்கும் இடையே உள்ள போட்டி என்பது போல் தொடங்கினாலும், நாளடைவில் அது பா.ஜ.க.வுக்கும் இடையே நடக்கும் மும்முனைப் போட்டி என்று களம் கலர் மாறியது. சிறுபான்மையினர் வாக்குகளைத் திரட்ட தி.மு.க. பிரயோகித்த யுக்தி அ.தி.மு.க.வை கடைசி நிமிடத்தில் மோடி பற்றியும் அட்டாக் பண்ண வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கியது. 'மோடி பற்றி ஏன் நீங்கள் விமர்சிக்கவில்லை. மேடம். பதில் சொல்லுங்கள்' என்று இந்தக் கேள்வியை கன்னியாகுமரி தேர்தல் பிரசாரத்தில் துவங்கி வைத்தார் ஸ்டாலின். அதை இரு கம்யூ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னிஸ்ட் கட்சித் தலைவர்களும் தூக்கிப் பிடித்தார்கள். பிறகு பா.ஜ.க. அணியில் இருக்கும் வைகோவே கூட அந்தக் கருத்தைப் பிரதிபலிக்கும் வகையில் ஜெயலலிதாவை விமர்சித்தார். இன்னொரு பக்கம், யாரும் எதிர்பாராத வகையில் உச்ச நீதிமன்றமும் தேர்தல் பிரசாரத்திற்குள் இழுத்துவரப்பட்டது. அது ராஜீவ் கொலை வழக்கில் தண்டனை பெற்ற சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு, பிறகு உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், மாநில அரசு அவர்களை விடுதலை செய்ததை எதிர்த்து மத்திய அரசு தொடுத்த வழக்கு விவகாரம். வாதங்கள் முடிவுபெற்று தீர்ப்பிற்காக ஒத்தி வைக்கப்பட்டது. அந்த வழக்கின் தீர்ப்பு, 25ஆம் திகதிக்குள் வெளியாகும் என்று தமிழகத்தைச் சேர்ந்த உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சதாசிவம் கோவையில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் வெளியிட்டார். இதைப் பிடித்துக் கொண்ட தி.மு.க. தலைவர், 'ஒரு முக்கியமான வழக்கில், அரசியல் தாக்கம் உள்ள வழக்கில் இப்படி தேர்தல் நடக்கும் போது உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியே சொல்வது சரியா' என்று கேள்வி எழுப்பினார். அதேபோல் பெங்களூர் சொத்துக் குவிப்பு வழக்கில் வெளிவந்த தீர்ப்புகள் பற்றியும் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கேள்வி எழுப்பினார் கருணாநிதி. தேர்தலில் சுப்ரீம் கோர்ட்டின் தீர்ப்புகளே பிரசாரப் பொருளானது தமிழகத்தில் தான். ஆனாலும் தி.மு.க. தலைவரின் இந்தப் பிரசாரத்திற்கு வேறு எந்தக் கட்சித் தலைவர்களுமே பதில் சொல்லவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் பா.ஜ.க. வுடன் அ.தி.மு.க. விற்கு ரகசியக் கூட்டணி இருக்கிறது என்ற பிரசாரத்தை முறியடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஜெயலலிதாவிற்கு ஏற்பட்டது. அதனால் ஒரு கட்டத்தில் பா.ஜ.க.வின் மீதும் கணைகளைத் தொடுத்தார் ஜெ. அதற்கு அவர் தேடிக் கண்டுபிடித்த காரணங்கள் மூன்று. ஒன்று காவிரிப் பிரச்சினை. காவிரியில் பா.ஜ.க.வால் தமிழகத்

### ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சட்ட அமர்வு

# அடுத்த புதிய அரசுக்கு தலைவலி?



ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்குத்தண்டனை பெற்ற மூவரின் விவகாரம் இப்போது இந்திய உச்சநீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் கொண்ட அமர்வுக்குப் போகிறது. விடுதலை செய்வற்கு உள்ள அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்கிறதா அல்லது மாநில அரசுக்கு இருக்கிறதா என்ற முக்கிய கேள்விக்கு ஐந்து பேர் கொண்ட அமர்வு தீர்ப்பளிக்கப் போகிறது. அதுவரை சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோர் விடுதலைக்காக காத்திருக்க வேண்டிய கட்டாயம் பிறந்திருக்கிறது.

கருணை மனுவில் உரிய நேரத்தில் முடிவு எடுக்கவில்லை என்பதனால் இந்த மூவருக்கும் விதிக்கப்பட்ட தூக்குத்தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து உத்தரவிட்டது உச்சநீதிமன்றம் கடந்த பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி அந்தத் தீர்ப்பு வெளியானது. உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பைப் பயன்படுத்தி தமிழக முதல்வர் ஜெயலலிதா, அந்த மூவர் மட்டுமின்றி ராஜீவ் கொலைவழக்கில் தண்டிக்கப்பட்டு சிறையில் இருக்கும் வேறு நால்வரையும் சேர்த்து (ராபர்ட் பயாஸ், நளினி, ரவிச்சந்திரன், ஜெயக்குமார்) விடுதலை செய்ய அமைச்சரவையைக் கூட்டி முடிவு எடுத்தார். ஆனால் சி.பி.ஐ. என்ற மத்திய புலனாய்வுத்துறை விசாரிக்கும் வழக்குகளில் இப்படி தண்டனையைக் குறைத்து விடுதலை செய்யும் அதிகாரம் மாநில அரசுக்கு இல்லை என்பது மத்திய அரசின் வாதம். ஆட்சியிலிருந்த காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசு இந்த விடயத்தை உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றது.

இந்த வழக்கு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சதாசிவம் அமர்வு முன்பு விசாரணை முடிந்து தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது. அதில் 25 ஆம் திகதிக்குள் நல்ல தீர்ப்பு வழங்கப்படும் என்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி கோவையில் ஒரு பொது நிகழ்ச்சியில் சொன்னது சர்ச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சையானது. தி.மு.க. தலைவர் கருணாநிதியே 'தேர்தல் நடக்கின்ற நேரத்தில் இப்படிச் சொல்லலாமா' என்று கேள்வி எழுப்பினார். இப்படியொரு பரபரப்புக்கிடையில் ஏப்ரல் 25ஆம் திகதி உச்ச நீதிமன்றம் வெளியிட்ட தீர்ப்பில், 'இந்த விடயத்தை ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சட்ட அமர்வுக்கு' அனுப்பி விட்டது. மூன்று மாதங்களுக்குள் அரசியல் சட்ட அமர்வு கூட்டப்பட வேண்டும் என்பதும் இத்தீர்ப்பின் இன்னொரு கட்டளை.

இந்த வழக்கில் மத்திய அரசின் சார்பில் எடுத்து வைக்கப்பட்ட வாதங்கள் சில. இந்திய குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டத்தில் வரும் 'அப்ரோப்ரியேட் கவர்ன்மென்ட்' என்பது இந்த வழக்கைப் பொறுத்தவரை மத்திய அரசு தான், மாநில அரசு அல்ல என்பது ஒரு வாதம். ஏற்கனவே அவர்களுக்கு அளித்த தூக்குத்தண்டனையை உச்சநீதிமன்றம் ஆயுள் தண்டனையாகக் குறைத்து விட்டது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் மாநில அரசும் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்களுக்கு விடுதலை என்ற சலுகையை வழங்க முடியாது என்பது இரண்டாவது வாதம். சம்பந்தப்பட்ட கைதிகளின் மனு இல்லாமல் ஒரு மாநில அரசு தானாகவே முன் வந்து (சூ மோட்டோ) இது போன்ற விடுதலை கொடுக்க முடியாது என்பது மூன்றாவது வாதம். இது போன்ற வழக்குகளில் குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டப்படி விடுதலை செய்யும் அதிகாரத்தைப் பயன்படுத்தும் முன்பு மத்திய அரசை 'கலந்து ஆலோசிக்க' வேண்டும் என்று இருக்கும் ஷரத்து 'மத்திய அரசின் ஒப்புதல் பெற வேண்டும்' என்பதற்குச் சமம் என்பது நான்காவது வாதம்.



'இன்னும் எத்தனை வருடங்களுக்கு நாங்கள் காத்திருக்க வேண்டுமோ? இந்தப் பிரச்சினையை அரசியல் மயமாக்கியதால் இப்படி சதாசிவம் ஐயா தீர்ப்புச் சொல்லி விட்டாரோ?'

ஆனால் மாநில அரசோ, 'மத்திய சட்டங்களின் படி உள்ள தண்டனைகளை அவர்கள் அனுபவித்து விட்டார்கள். இப்போது அவர்கள் அனுபவித்து வரும் தண்டனை மாநில சட்டங்களின் குற்றங்கள் அடிப்படையிலானது. ஆகவே மாநில அரசுக்கு விடுதலை செய்யும் அதிகாரம் இருக்கிறது' என்பது முதல் வாதம். உச்ச நீதிமன்றம் தூக்குத் தண்டனையைக் குறைத்தாலும், மாநில அரசும் தண்டனைக் குறைப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தலாம் என்பது இரண்டாவது வாதம். சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள 'மத்திய அரசுடன் கலந்து ஆலோசிக்க வேண்டும்' என்பதற்கு மத்திய அரசின் ஒப்புதல் பெற வேண்டும் என்று அர்த்தமல்ல என்பது மூன்றாவது வாதம். இறுதியாக கைதிகள் மனுப்போடவில்லை என்றாலும், அவர்களை விடுதலை செய்ய மாநில அரசு தானாகவே (சூ மோட்டோ) நடவடிக்கை எடுக்க அதிகாரம் இருக்கிறது என்ற வாதம்.

இந்த வாதங்களைக் கேட்ட நீதிபதிகள் கர்நாடக மாநிலத்தைச் திற்குத் தீர்வு பெற்றுத் தர முடியாது. காங்கிரஸும், பா.ஜ.க.வும் இந்த விடயத்தில் ஒன்றுதான் என்று முதலில் சாடினார். அடுத்து வேலூர் பொதுக் கூட்டத்தில், 'வெளிநாட்டில் உள்ள இந்துக்கள் தங்கள் இயற்கைப் பிறப்பிடமான இந்தியாவுக்கு வரலாம். வரவேற்கப்படுகிறார்கள் என்று பா.ஜ.க. தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ளது. ஆனால் இந்துக்கள் மட்டும்தான் வெளிநாட்டில் இருக்கிறார்களா? முஸ்லிம்கள் இருக்கிறார்கள். பார்ஸிகள் இருக்கிறார்கள். ஜெயின்கள் இருக்கிறார்கள். இப்படியொரு தேர்தல் அறிக்கையில் இந்துக்களை மையப்படுத்தி பா.ஜ.க. சொல்லியிருப்பது மதச்சார்பற்ற தன்மைக்கு விரோதமானது' என்றார். இந்த வேலூர் தொகுதி முஸ்லிம்கள் அதிகம் உள்ள நாடாளுமன்றத் தொகுதி என்பது குறிப்பிடத்தக்கது. மூன்றாவதாக அவர் எடுத்த பிரச்சினை குஜராத் வளர்ச்சி.

கிருஷ்ணகிரி, தர்மபுரி தேர்தல் பிரசாரக்கூட்டங்களில் பேசிய நரேந்திரமோடி தமிழகத்தில் வளர்ச்சி இல்லை என்ற ரீதியில் பேசிவிட்டுச் செல்ல அதற்குப் பதிலளித்த அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா, 'குஜராத் வளர்ச்சியை விட தமிழக வளர்ச்சி அதிகம். அதனால் குஜராத் மோடியா இந்த லேடியா. யார் சிறந்த வளர்ச்சியைக் கொடுத்தது' என்று கேள்வி எழுப்பினார். 'லேடியா, மோடியா' என்ற பிரசாரம் சூடுபிடித்தது. தன் நிறைவு நாள் பிரசாரத்தில் சென்னையில் சொன்ன இந்தக்கருத்திற்கு புதுக்கோட்டையில் தன்னுடைய நிறைவு நாள் பிரசாரக் கூட்டத்தில் பதில் சொன்னார் ஸ்டாலின். 'குஜராத் மோடி, தமிழகத்து லேடி எல்லாம் இல்லை. தமிழகத்தில் பொருளாதாரம் வளர்ந்திருக்கிறது என்றால் அதற்கு என் டாடிதான் காரணம்' என்றார். ஆகவே தி.மு.க. விற்கும், அ.தி.மு.க.விற்கும் என்பது போல் தொடங்கிய பிரசாரம் இறுதிக் கட்டத்தில் 'மோடி லேடி டாடி' என்று முடிவிற்கு வந்தது. ஆனாலும், கடைசி வரை அ.தி.மு.க.வின் சார்பில் பா.ஜ.க.வின் சார்பில் எடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கப்பட்ட ராமர் கோயில் கட்டுவது, பொதுச்சிவில் சட்டம் கொண்டு வருவது, அரசியல் சட்டப் பிரிவு 370இல் காஷ்மீருக்கு வழங்கப்பட்டுள்ள சிறப்புச் சலுகைகளை நீக்குவது உள்ளிட்ட மூன்று விவகாரமான விடயங்களுக்கு பதில் சொல்லவில்லை. அதற்கு பதில் சொல்லுங்கள் என்று அ.தி.மு.க. தலைவியிடம் கேள்வி கேட்டு மற்றத் தலைவர்கள் எல்லாருமே தேர்தல் பிரசாரம் போலவே ஓய்ந்து போனதுதான் மிச்சம்.

தேர்தல் களத்தில் முழங்கிய சில கேள்விகள் தமிழக வாக்காளர்கள் காதில் இன்னும் பாய்ந்து கொண்டிருக்கிறது. அது ஜெயலலிதா சார்பில் எழுப்பப்பட்ட, 'செய்வீர்களா, நீங்கள் செய்வீர்களா' என்பது. தன் பிரசாரத்தின் இடையில், 'தி.மு.க.வையும், காங்கிரஸையும் வேரோடும் வேரடி மண்ணோடும் சாய்க்க வேண்டும். செய்வீர்களா, நீங்கள் செய்வீர்களா' என்பதுதான் ஜெ. எழுப்பிய கேள்வி. இதற்குப் பதில் கேள்வியை ஸ்டாலின் எழுப்பினார். அவர் தன் பொதுக்கூட்டத்தின் இறுதியில் அ.தி.மு.க. நிறைவேற்றாத தேர்தல் வாக்குறுதிகளைச் சுட்டிக்காட்டி, வாக்காளர்களைப் பார்த்து, நீங்கள் ஜெயலலிதாவிடம், 'செஞ்சீங்களா, எதையாவது செஞ்சு தொலைச்சீங்களா' என்று கேளுங்கள் என்று மேடையைப் பரபரப்பாக்கினார். கேள்விக்கணைகள், பதிலடிகள், பரபரப்புப் பேச்சுகள் என்று தேர்தல் பிரசாரம் அனல் பறந்தாலும், பாராட்டத்தக்க ஒரே அம்சம் அ.தி.மு.க. மற்றும் தி.மு.க.வில் உள்ள எந்த மூத்த தலைவர்களும் நாகரீக வரம்பை மீறி பேசிவிடவில்லை என்ற ஒரே ஆறுதல்தான். ஆவேசங்கள் பேச்சுகளில் கொப்பளித்தாலும் அநாகரீகம் தலை தூக்கவில்லை.

தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் சர்ச்சைக்குள்ளானது. குறிப்பாக 144 தடையுத்தரவு போட்டு விட்டு தேர்தலை நடத்தியது பல்வேறு கட்சிகள் மத்தியில் எரிச்சலை ஏற்படுத்தியது. ஊரடங்குச்சட்டம் போட்டு வாக்காளர்களின் உரிமைகளைப் ... சேர்ந்த 'ஸ்வாமி ஸ்ரதானந்தா' வழக்கைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அதில் அந்த சாமியார் மீது கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அதை எதிர்த்து உச்ச நீதிமன்றம் செல்கிறார். அங்கு அவருக்கு ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டுள்ளது. அப்படிக்குறைக்கப்பட்டவர் வாழ்நாள் முழுவதும் சிறையிலிருக்க வேண்டும். தண்டனைக் குறைப்பு அவருக்கு இல்லை என்பதுதான் அந்த 'ஸ்வாமி ஸ்ரதானந்தா' வழக்கின் சாரம்சம். அந்த வழக்கில் மூன்று நீதிபதிகள் அமர்ந்து தீர்ப்பளித்துள்ளார்கள். ஆகவே மூன்று நீதிபதிகள் கொண்ட இந்த பெஞ்ச் அந்த பெஞ்சின் முடிவை ரத்துச் செய்ய முடியாது. ஆகவே ராஜீவ் வழக்கில் தண்டனை பெற்றோரின் வழக்குகளை ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சட்ட அமர்வுக்கு அனுப்புகிறோம் என்று கூறிவிட்டார் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சதாசிவம். மத்திய மாநில அரசுகள் எழுப்பிய ஏழு கேள்விகளை அந்த பெஞ்ச் விசாரிக்க வேண்டிய விடயங்களாகவும் வகுத்துக் கொடுத்து விட்டது இந்த பெஞ்ச்.

ஐந்து நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன பெஞ்சின் முன்பு இந்த வழக்கு வர இன்னும் மூன்று, நான்கு மாதங்களாகும். அப்போது மத்தியில் புதிய அரசாங்கம் அமைந்திருக்கும். பிரதமராக வருவார் என்று எதிர்பார்க்கப்படும் நரேந்திரமோடி மாநில அரசுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்ற கருத்துக்கு சொந்தக்காரர். பல தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் அதை வலியுறுத்தியும் வந்திருக்கிறார். அதே நேரத்தில் இது முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி தொடர்புடைய வழக்கு. பா.ஜ.க.வும் காங்கிரஸ் போல் தேசியக் கட்சி. வெளியுறவுக்கொள்கைகளில், தேச நலன் போன்றவற்றில் இரு கட்சிகளுமே மத்திய அரசுக்கு உள்ள அதிகாரங்களை மாநில அரசுக்கு விட்டுக் கொடுக்க முன்வருமா என்பது மிகப்பெரிய கேள்வி. ஆனால் வழக்கு விசாரணைக்கு வரும் போது, மத்திய புலனாய்வு அமைப்பின் கீழ் விசாரிக்கப்பட்ட வழக்கில் விடுதலை செய்யும் அதிகாரம் மாநில அரசுக்கு இருக்கிறது என்று புதிய மத்திய அரசின் வழக்கறிஞர் வாதிடுவாரா? அப்படியெல்லாம் மாநில அரசுக்கு அதிகாரம் இல்லை. மத்திய அரசுக்குத்தான் இதுபற்றி அதிகாரம் இருக்கிறது என்று கூறுவாரா? ஆக மொத்தம்



பிரதம நீதியரசர் சதாசிவம்

அமையப் போகும் புதிய அரசுக்கு எடுத்த எடுப்பிலேயே இடியப்பச் சிக்கலை உருவாக்கும் வழக்கு இது.

ஆனால் மாநில, மத்திய அரசு அதிகாரப் போட்டியில் 23 வருடங்களுக்கும் மேலாக சிறையிலிருப்போருக்கு நீதி எப்போது கிடைக்கும் என்பதுதான் கவலைக்குரியது. அதை வெளிப்படுத்தும் வகையில் தான் இத்தீர்ப்பு வெளிவந்தவுடன் நிருபர்களிடம் பேசிய பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள், 'இன்னும் எத்தனை வருடங்களுக்கு நாங்கள் காத்திருக்க வேண்டுமோ' என்று கண்கலங்கியிருக்கிறார். அது மட்டுமின்றி, 'இப்பிரச்சினையை அரசியல் மயமாக்கியதால் இப்படி சதாசிவம் அய்யா தீர்ப்புச் சொல்லி விட்டாரோ என்று நினைக்கத் தோன்றுகிறது' என்றும் மிகவும் வேதனையுடன் தெரிவித்துள்ளார்.■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையைப் பறிப்பதா என்று கேள்வி எழுப்பப்பட்டது. ஆனால் இது பற்றி அ.தி.மு.க. மட்டும் கருத்துத் தெரிவிக்கவில்லை. தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகு முதல்வர் அலுவலகத்தில் அட்வைஸர் பதவிக்கு நியமனம், டி.ஜி.பி.யாக இருக்கும் ராமானுஜத்தை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை, 144 தடையுத்தரவை ரத்துச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை, வாக்காளர்களுக்கு பணம் கொடுக்கப்படுவதைத் தடுக்க வேண்டும் என்ற கோரிக்கை இப்படி எல்லாவற்றிலுமே தேர்தல் ஆணையம் அசைந்து கொடுத்தது மாதிரித் தெரியவில்லை. அமைதியாக தேர்தலை நடத்தியதற்கு தேர்தல் ஆணையத்தின் மீது பாராட்டுக்களை சுமத்தினாலும், பல்வேறு புகார்கள் பற்றி தேர்தல் ஆணையம் உரிய முறையில் கண்டு கொள்ளவில்லை என்ற கோபம் அரசியல் கட்சிகள் மத்தியில் இருக்கிறது. குறிப்பாக அரசியல் கட்சித் தலைவர் கூட்ட மேடையில் வேட்பாளர் ஏறி நின்று வாக்குக் கேட்கக் கூடாது என்று தேர்தல் கமிஷன் போட்ட உத்தரவின் மீது முதல்வர் ஜெயலலிதாவே அட்டாக் பண்ணினார். சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் இல்லாமல் தேர்தலை நடத்தியதற்கு தேர்தல் ஆணையத்திற்கு சல்யூட் அடிக்க விரும்பும் அரசியல் கட்சிகள், பணம் பட்டுவாடாவைத் தடுக்க பெயரளவில் கூட தேர்தல் ஆணையம் தமிழகத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது ஆளுங்கட்சி தவிர அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள் மனதையும் ஆக்கிரமித்து விட்டது. யாருக்கு வாக்குப் போட்டோம் என்பதை அறிந்து கொள்ளும் முறையை முதன் முதலில் மத்திய சென்னை தொகுதியில் அறிமுகப்படுத்தியது தேர்தல் கமிஷன். இது தயாநிதிமாறன் போட்டியிடும் தொகுதி என்பது கவனிக்கத்தக்கது.

இப்படியொரு பரபரப்பான தேர்தல் களத்தின் காட்சிகள் எழுப்பிய தூசிகள் அடங்கி, ஏப்ரல் 24ஆம் திகதி சுறுசுறுப்பான வாக்குப்பதிவு நடைபெற்றது. முதலமைச்சர் ஜெயலலிதா வாக்களிக்கும் ஸ்டெல்லா மேரி கல்லூரி வாக்குச் சாவடியில் முதல் ஆளாக வாக்களித்தவர் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த். ஆனால் யாருக்கு வாக்கு என்பது பற்றி பேட்டி எதுவும் கொடுக்காமல் எஸ்கேப் ஆனார். அதே வாக்குச் சாவடியில் பிறகு வாக்களித்தார் முதல்வர் ஜெயலலிதா. அவர் சசிகலாவுடன் வாக்குச் சாவடிக்கு வந்தார். நிருபர்களிடம் பேசுகையில், 'தேர்தல் முடிவுகள் வந்த பிறகு என் கருத்தைச் சொல்கிறேன்' என்று முன் எச்சரிக்கையுடன் கருத்துத் தெரிவித்தார். இதேபோல் கோபாலபுரம் சாரதா பள்ளியில் தி.மு.க. தலைவர் கருணாநிதி வாக்களித்தார்.' சென்ற முறை வெற்றி பெற்றதை விட அதிக இடங்களில் தி.மு.க. வெற்றி பெறும்' என்று நம்பிக்கை தெரிவித்தார். அதேபோல் மு.க.ஸ்டாலின் தன் துணைவியார் துர்க்கா ஸ்டாலினுடன் வந்து வாக்களித்துவிட்டு, தேர்தல் ஆணையத்தின் மீது குற்றம் சாட்டினார். இது தவிர கைத்தடி உதவியுடன் (விபத்தில் சிக்கிக் கொண்டதால்) வாக்குச் சாவடிக்கு வந்து வாக்களித்தார் நடிகர் சூர்யா. அவர் தந்தை சிவக்குமார் வாக்களித்து விட்டு, 'வருகின்ற அரசாங்கம் நதி நீர் இணைப்பில் அக்கறை செலுத்த வேண்டும்' என்றார்.

பல முனைப் போட்டி. அதில் முக்கியமாக மூன்று முனைப் போட்டி இது தான் இந்தத் தேர்தலின் இறுதிக் காட்சிகள். இதில் 73 சதவீத வாக்குகள் பதிவாகியிருக்கிறது. 2009 நாடாளுமன்றத் தேர்தலில் பதிவான வாக்குகளும் 73.05 சதவீதம்தான். ஏறக்குறைய 2009 மற்றும் 2014 நாடாளுமன்றத் தேர்தல்களுக்கு இடையில் ஒற்றுமையும் இருக்கிறது. வேற்றுமையும் இருக்கிறது. 39 நாடாளுமன்றத் தொகுதிகளில் 17 தொகுதிகளில் 75 சதவீத வாக்குகளுக்கு மேல் 2009இல் பதிவாகியிருந்தது. இப்போது 20 நாடாளுமன்றத் தொகுதிகளில் 75 சதவீதத்திற்கு மேல் வாக்குகள் பதிவாகியிருக்கின்றன. சென்ற தேர்தலில் அதிக வாக்குகள் பதிவான 17 தொகுதிகளில் 80 சதவீதத்திற்கு மேல் உள்ள தொகுதிகளின் எண்ணிக்கை ஒரேயொரு தொகுதிதான். அது கரூர் நாடாளுமன்றத் தொகுதியாக இருந்தது. ஆனால் இந்த முறை அதிக வாக்குகள் பதிவாகியுள்ள 20 தொகுதிகளில் 80 சதவீதத்திற்கு மேல் பதிவாகியுள்ள தொகுதிகளின் எண்ணிக்கை 6. இத்தொகுதிகளில் போட்டியிடும் பிரபலங்கள் யார்? பா.ம.க. சார்பில் அன்புமணி ராமதாஸ், அ.தி.மு.க. சார்பில் மு.தம்பித்துரை, எஸ்.ஆர்.எம். கல்லூரியின் அதிபர் பாரிவேந்தர், காங்கிரஸ் முன்னாள் மத்திய அமைச்சர் மணி சங்கர் அய்யர் போன்றோர் அடங்குவர். இவர்களில் அன்புமணி ராமதாஸ் போட்டியிடும் தர்மபுரி நாடாளுமன்றத் தொகுதியில்தான் 81.15 சதவீதம். தமிழகத்திலேயே அதிக வாக்குகள் பதிவான தொகுதி. சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் மிகக்குறைந்த வாக்குகள் பதிவான தொகுதி மத்திய சென்னை. அப்போது அங்கே 61.04 சதவீத வாக்குகள் மட்டுமே பதிவானது. இப்போது தென் சென்னைத் தொகுதி. 59.86 சதவீத வாக்குகள் மட்டுமே பதிவானது. இங்கு தி.மு.க. சார்பில் டி.கே.எஸ். இளங்கோவனும், பா.ஜ.க. சார்பில் அக்கட்சியின் தலைவர்களில் ஒருவரான இல. கணேசனும் களத்தில் நிற்கிறார்கள்.

வாக்குப்பதிவு பற்றிய விவாதங்கள் இப்போது துவங்கி விட்டன. யாருக்கு வெற்றி என்பதுதான் அடுத்த கேள்வி. மே16 ஆம் திகதி மின்னணு வாக்கு இயந்திரங்களைத் திறக்கும் போது வெற்றி வேட்பாளர் யார், தோல்வி வேட்பாளர் யார் என்பது தெரிந்து விடும். பதிவான செல்லும் வாக்குகளில் ஆறில் ஒரு பங்கு வாக்குகளைப் பெறும் வேட்பாளர்கள் மட்டும்தான் தாங்கள் செலுத்திய கட்டுத் தொகை (செக்யூரிட்டி டெபாஸிட்) யைப் பெற முடியும். போட்டியிட்ட வேட்பாளர்களில் எத்தனை பேர் அன்றைய தினம் குறைந்த பட்சம் தங்கள் கட்டுத் தொகையைக் காப்பாற்றிக் கொள்வார்கள் என்பது தெரிந்து விடும். காங்கிரஸ் கட்சியை டெபாஸிட் கிடைக்காமல் செய்ய வேண்டும் என்று தமிழக

(54ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச அரசியல்

# அமெரிக்கப் படைத்தளம் அவுஸ்திரேலியாவில் வியாபிக்கின்றதா?

ஏதாவது ஒரு காலக்கட்டத்தில் தனக்கு சீனா அல்லது இந்தோனேஷியா தரப்பிலிருந்து அச்சுறுத்தல் வந்தால் அதனைச் சமாளிக்க இப்போதே தயாராகின்றது அவுஸ்திரேலியா.



சிட்னியிலிருந்து கலாநிதி சந்திரிகா சுப்ரமண்யன்




அவுஸ்திரேலிய வான் படைப் பலத்தினை அதிகரிக்கும் முகமாக ஐம்பத்து எட்டு F 35 ரக போர் விமானங்களுக்காக சுமார் 24 பில்லியன் டொலர்களை பிரதமர் டோனி அப்பொட் ஒதுக்கியுள்ளது பாராளுமன்றத்தில் பெரும் சர்ச்சையை உருவாக்கியுள்ளது. தனது இந்த முதலீட்டை நியாயப்படுத்த டோனி அப்பொட் அடுத்த நிமிடம் நாம் இருக்கும் இடத்தில் என்ன நடக்கும் என்று தெரியாத சூழலில் நாம் இருக்கிறோம், எதற்கும் பாதுகாப்பாக இருக்கட்டுமே என்று நமது வான் படையை வலுவாக்கும் நோக்குடன் இந்த விமானங்கள் வாங்கப்பட்டுள்ளன என்று தன்னிலை விளக்கம் அளித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் பில் ஷோர்ட்டன் நமது பாதுகாப்புப் படைக்கு வளம் சேர்க்க நீண்ட கால தொலை நோக்கில், இம் முதலீடு அவசியம் தான் என்று நியாயப் படுத்தி இருக்கிறார். அவுஸ்திரேலிய பாராளுமன்ற லிபரல் உறுப்பினர் டென்னிஸ் ஜென்சென் கடுமையாக விமர்சித்துள்ளார். கிரீன் கட்சியின் தலைவர் அடம் பேண்ட் அவுஸ்திரேலியாவில் பட்ஜட்டில் துண்டு விழும் கால கட்டத்தில் ஓய்வூதியம் முதன்மை நோக்கமாக இருக்க வேண்டுமேயொழிய உதவாக்கரை விமானங்கள் அல்ல என்று சீறியிருக்கிறார்.

இலவச கல்வி மற்றும் இலவச மருத்துவத்திற்காகவும், ஊனமுற்றோர், முதியோர் பராமரிப்பு போன்றவற்றுக்கு ஒதுக்கப்படும் நிதி குறைக்கப்பட்டுவரும் இவ்வேளையில் இத்தகைய பாரிய பாதுகாப்புச் செலவு விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது. அதே சமயத்தில் மாறிவரும் உலக நடப்புகள் மற்றும் அவுஸ்திரேலியாவுக்கு அதிகரித்து வரும் பாதுகாப்பு அச்சுறுத்தல் போன்றவற்றை கருத்தில் கொண்டு பொது மக்களின் விமர்சனங்கள் குறைவாகவே உள்ளன.

புதிதாக வருகின்ற இந்தப் போர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விமானங்கள் அமெரிக்காவிடமிருந்து வாங்கப்படுகின்றன. 2020 இல் இவை படையில் சேர்க்கப்படும். இவற்றைப் பயன் படுத்த தேவைப்படும் முதலீடு 54 பில்லியன் டொலர்கள் ஆகும்.

எல்லாவற்றையும் மீறி F 35 ரக போர் விமானங்களின் வருகை ஒன்றை உறுதிப் படுத்தி உள்ளது. இவை இனிவரும் போர்களில் அமெரிக்காவுடன் இணைந்து பணியாற்ற அவுஸ்திரேலியாவுக்குக் கிடைக்கும் வசதிகளில் முதல் கட்டமாகும்.

அமெரிக்க தளம் அவுஸ்திரேலியாவில் இயங்குகிறது 2011 இல் சீன அரசு குற்றம் சாட்டியது. பின் 2012 இல் வெளியுறவு அமைச்சர் பொப் கார் தனது அரசியல் கொள்கைகளில் முதலிடம் பிடிப்பவை, அமெரிக்கா தனது பிராந்தியத்தில் ஈடுபட்டிருத்தலும், ஆசியாவுடன் அவுஸ்திரேலியாவுக்கு உள்ள உறவினை மேம்படுத்துவதும் ஆகும் என்றார். இது அமெரிக்காவுடனும், சீனாவுடனும் அவுஸ்திரேலியா நிலையான உறவைப் பேண அவர் காட்டிய ஆர்வத்தையே சுட்டிக் காட்டியது. ஆனாலும் அமெரிக்காவும் சீனாவும் வேறு தளங்களில் அவுஸ்திரேலியாவுடன் தொடர்புடையவை. அமெரிக்கா படைப்பலத்தையும் சீனா பொருளாதார பலத்தையும் அவுஸ்திரேலியாவுடன் தொடர்பு படுத்திக் கொண்டன. இரண்டையுமே சமமாக நடத்த வேண்டிய கட்டாயத்தில் அவுஸ்திரேலியா இருக்கின்றது.

அவுஸ்மின் என்ற அவுஸ்திரேலிய அமெரிக்க அமைச்சர்கள் கூட்டு பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்து , 2012 இல் அமெரிக்க இராணுவப் படை, தளவாடங்கள், தொழில் நுட்பம் அனைத்துமே அவுஸ்திரேலிய மண்ணில் இடம் பிடித்துக் கொண்டன.குறிப்பாக மூன்று விடயங்கள் 1.வட மேற்கு கேப் வான் ராடர் அதி நவீன தொலை நோக்கி 2. (மைக்ரோ சாட்டிலைட்டு) நுண் செயற்கைக் கோள்களைக் கண்டு பிடிக்கக் கூடிய அமெரிக்க தொலை நோக்கி 3. இரு நாடுகளும் பரஸ்பரம் செயற்கை கோள்களைப் பகிர்ந்து கொள்ளும் வசதி கொண்ட கூட்டுத் தொடர்பு வாசல் அனுமதி அவுஸ்திரேலியாவுக்கு வழங்கப்பட்டது .இதனால் அவற்றில் இருந்து பெறப்படும் தகவல்களை அவுஸ்திரேலியா நேரடியாக பெற்றுக் கொள்ளும் வசதிகள் கிட்டின. ஆனால் இவை எல்லாம் நடந்த கால கட்டத்தில் பாதுகாப்பு அமைச்சர் ஸ்டீவன் ஸ்மித் அமெரிக்கப் படைத் தளம் இங்கு இல்லவே இல்லை என்று அடித்துக் கூறினார்.

இந்தக் கூட்டமைப்பு தொடர்பில் இருந்து நியூசிலாந்து விலக்கப்பட்டது. இதனால் நியூசிலாந்து நாட்டில் எந்த பாதுகாப்பு பாதிப்பும் ஏற்படவில்லை என்பதே உண்மை. நியூசிலாந்து அமெரிக்காவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் செய்வது அவசியமில்லை என்பது பற்றி மிகத்தெளிவாக உள்ளது. தமது நாடு மிகச் சிறிய நாடு எனவும், தனியாக ஒரு படைப் பலம் தேவை இல்லை எனவும், எந்த நாட்டுடனும் தாம் இணக்கத்துடன் வாழவே விரும்புவதாகவும், தமது வளங்களைப் பாதுகாப்புக்குச் செலவிடுவதை விட தேசிய மேம்பாட்டுக்குச் செலவிடுவதே உசிதமான கொள்கை என்று தனது நிலைப் பாட்டை நியூசிலாந்து வெளிப்படையாகவே தெரிவித்துள்ளது. அவுஸ்திரேலியாவின் பாதுகாப்பு நியூசிலாந்துக்கும் சேர்த்துதான் பலன் கிட்டும் என்று வாதிடலாம். ஆனால் நியூசிலாந்து தன் இறைமையை மகாராணி எலிசெபெத் முதல் பராக் ஒபாமா வரை தெளிவுபடுத்துவதில் தவறுவதில்லை. அதேசமயம் அவுஸ்திரேலியா அமெரிக்காவின் அடியொற்றி நடக்கத் தவறுவதில்லை.

அவுஸ்திரேலியாவுக்கு அப்படி என்னதான் பிரச்சினை? கிழக்கு திமோரில் தலையிட்டதனால் அவுஸ்திரேலியா இந்தோனேசியாவை பகைத்துக் கொண்டது. அதனால் ஒரு நிரந்தர அச்சம் அரசுக்கு இருந்து கொண்டே இருக்கிறது. பூகோள ரீதியில் இந்தோனேசியா அமைந்துள்ள இடம் அவுஸ்திரேலிய பாதுகாப்புக்கு உத்தரவாதம் தருவதாக இல்லை.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் அவுஸ்திரேலிய அரசு இந்தோனேசியாவில் செய்த உளவு வேலை அம்பலமானதும், இந்தோனேசியா தனது தூதரை திருப்பி அழைத்துக் கொண்டது. தொடர்ந்து அவுஸ்திரேலியாவுடன் தனக்கு இருந்த ஆட் கடத்தல், இராணுவ பயிற்சிகள், உளவுத்துறை ஆகிய அனைத்து உடன்படிக்கைகள் தொடர்பாகவும் மீள் பரிசீலனை செய்யப் போவதாகவும் இந்தோனேசியா அறிவித்தது. இது தொடர்பான டோனி அப்பொட்டின் பேச்சு அத்தனை திருப்திகரமாக இல்லை என்றே சொல்ல வேண்டும். கிழக்குத் திமோர் பிரச்சினைக்குப் பின் ஓரளவு சுமுகமாக இருந்த இரு நாட்டு உறவு மறுபடியும் சிக்கலில் முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பசுபிக் பிராந்தியத்தில் அவுஸ்திரேலியா எதிர்நோக்கக் கூடிய ஒரே பிரச்சினை இந்தோனேசியா தான் என்பது அரசியல் விமர்சகர்களின் கருத்தாகும்.

தவிர ஜப்பான் சீன உறவில் ஆள் இல்லாத ஏழு தீவுகள் தொடர்பாக விரிசல் விழுந்துள்ளது. அமெரிக்கா ஜப்பானை ஆதரிக்கிறது. அவுஸ்திரேலியாவுக்கோ ஏற்றுமதி,இறக்குமதி, சுரங்கம் மற்றும் முதலீடுகள் போன்ற பொருளாதாரக் காரணங்கள் சார்ந்து சீனாவுடன் உறவு அத்தியாவசியமாகிறது. அதே சமயம் அமெரிக்க கொள்கையே அவுஸ்திரேலியாவின் கொள்கை என்ற தீவிர நிலைப்பாட்டில் அவுஸ்ரேலியா உறுதியாக உள்ளது.

அவுஸ்திரேலியாவின் இந்த இக்கட்டுக்கள் தான் அவுஸ்திரேலியா தன் படைப் பலத்தைக் கூட்டுவதற்கு அடிப்படைக் காரணம் என்று நம்பப்படுகிறது. அதன் அடிப்படையிலேயே அவுஸ்திரேலியா அமெரிக்காவுடன் படைபலப் பெருக்கல் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது. ஏதாவது ஒரு கால கட்டத்தில் தனக்கு சீனா அல்லது இந்தோனேசியா தரப்பில் இருந்து எதிர்ப்பு வந்தால் அதனைச் சமாளிக்க இப்போதே அவுஸ்திரேலியா தயாராகின்றது.

தவிர, அமெரிக்காவின் பசுபிக் பிராந்திய நிலைகொள்ளல் பலப்படுத்தப்படுகிறது. வியட்னாம் போரின் பின் 2011ஆம் ஆண்டு தான் ஜூலியா கில்லர்ட் அரசின் கீழ் தான் அமெரிக்க கடற்படைக்கு இடம் கொடுக்கப்பட்டது. அமெரிக்கா கூட்டு என்பது அவுஸ்திரேலியாவுக்கு மனித உயிர்கள் மற்றும் சர்வதேச உறவுகளை விலையாகக் கொடுத்து கிடைக்கக் கூடிய ஒன்றே. அமெரிக்கா தனது அரசியல் ஆக்கிரமிப்பை ஈடுபடுத்தி அதன் மூலம் தனது பொருளாதாரத்தைப் பலப்படுத்த முயற்சிக்கும் ஒரு நடத்தையே பிராந்திய படைப்பலம் விரிவாக்கலாகும். அமெரிக்க சகாப்தம் என்பது நடைமுறையில் தோல்வியைத் தழுவி வருவது சர்வதேச அரங்கில் கண்கூடு. போர்கள் மக்களை சலிப்படையச் செய்துவிட்டன. தலைவர்களின், அரசியல் பம்மாத்துக்கள் பொய்த்து விட்டன. பலப் பரீட்சைகள் களைப்படையச் செய்து விட்டன.

இனி வரும் காலத்தில் இராணுவ கூட்டு முயற்சிகள் பலன் அளிக்காமல் போய் அமைதிக்கான கூட்டு முயற்சிகள் மட்டுமே வரவேற்கப்படும் காலம் வரும். அப்போது ஆயுத வியாபாரங்கள், அரசியல் நரித்தனங்கள் நசிந்து போய் விடும். இந்த உண்மையை அவுஸ்திரேலியா உணராமல் போனது துர்ப்பாக்கியமே. இன்று அமெரிக்கப் படையினரின் உள் நுழைவு பின் நாளில் அவுஸ்திரேலியா கொடுக்கவுள்ள பெரும் விலைக்கு வித்தாகும். ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மனிதாபிமானப் பிரச்சினை

# இந்தியாவில் தேசிய அளவிலான ஒரு ஏதிலியர் சட்டத்தின் தேவை







அ.மார்க்ஸ்

கண்ணதாசனின் சிவகங்கைச் சீமை திரைப்படத்தில் ஒரு காட்சி. கட்ட பொம்மனைத் தூக்கிலிட்டபின் அவரது தம்பி ஊமைத்துரை வெள்ளையர்களுக்கு எதிராகப் பாளையக்காரர்களைத்திரட்டிப் போராடிய போது அவருக்கு யாரும் அடைக்கலம் கொடுக்கக்கூடாது என வெள்ளையர்கள் அறிவித்திருப்பார்கள். அப்போது ஊமைத்துரை அடைக்கலம் தேடி சிவகங்கைக்கு வருவார். அப்போது சிவகங்கையை மருது சகோதரர்கள் ஆண்டுகொண்டிருந்தனர். சின்ன மருது ஊமைத்துரையை மறைந்திருக்கச் சொல்லி விட்டு அண்ணனிடம் வந்து அவருக்கு அடைக்கலம் அளிக்க வேண்டும் என்பார். தற்போதுள்ள சூழலில் ஆங்கிலேயரைப் பகைத்துக்கொண்டு வாழ இயலாது என்று மறுப்பார் பெரிய மருது. அப்போது அருகிலுள்ள அறையிலிருந்து ஊமைத்துரை உள்ளே வருவார். என்ன காரியம் செய்துவிட்டாய் எனப்பெரியவர் தம்பியைக் கண்டித்துக் கொண்டிருக்கும் போதே அங்கு வரும் ஆங்கிலத்தள பதி ஊமைத் துரையின் மடியைப் பிடித்துக் கைது செய்ய முயல்வான். அப்போது பெரிய மருது, என்ன துணிச்சல் இருந்தால் என்னிடம் அடைக்கலம் வந்த ஒருவரை என் கண் முன்னே கைது செய்வாய் எனச் சீறி அவனை வெளியே அனுப்புவார். அவனும் இதன் விளைவுகளை நீ அனுபவிப்பாய் என எச்சரித்து அகல்வான். பின்னர் வெள்ளையரின் படை இதைச் சாக்காகக் கொண்டு சிவகங்கை மீது படை எடுத்து மருது சகோத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரர்களை அழிப்பதாகக் கதை செல்லும்.

முன்னதாக ஆற்காட்டு நவாப் மற்றும் ஆங்கிலப் படைகளால் சிவகங்கை மன்னர் முத்துவடுகநாதர் கொல்லப்பட்டபின் மைசூர் மன்னர் ஹைதர் அலியிடம்தான் இந்த மருது சகோதரர்களும் ராணி வேலுநாச்சியாரும் அடைக்கலம் கோரிச் சென்றனர், ஹைதரும் அவரது மகன் திப்புவும் தங்கள் திண்டுக்கல் கோட்டையில் இவர்களுக்கு ஏழாண்டுகாலம் அடைக்கலமளித்துக் காத்ததோடு, இறுதியில் அவர்கள் மீண்டும் இழந்த ஆட்சியைப் பிடிக்க படைகளும் பொருளும் உதவினர் என்பது வரலாறு.

இப்படி உயிரைக் கொடுத்தேனும் அடைக்கலம் வந்தோரைக் காப்பது என்றொரு மரபு நமக்குண்டு. புத்த ஜாதகக் கதைகள் ஒன்றில் சிபிச் சக்கரவர்த்தி தன்னிடம் அடைக்கலம் வந்த ஒரு புறாவைக் காப்பாற்ற வேண்டி, அதை வேட்டையாட வந்த பருந்துக்கு புறாவின் எடைக்குச் சமமான சதையைத் தன் தொடையிலிருந்து வெட்டித் தருவான். இப்படி நிறையச் சொல்லலாம்.

இப்படியான மரபு நமக்கு உண்டெனினும் இன்றும் நமது நாடு ஐ.நா அவையின் அகதிகள் தொடர்பான 1951ஆம் ஆண்டு உடன்பாட்டிலும் (UN Convention on the Status of the Refugees), 1967ஆம் ஆண்டு விருப்ப ஒப்பந்தத்திலும் கையொப்பமிடவில்லை. ஆனாலும் சுதந்திரத்திற்குப் பிந்திய பிரிவினைக் கலவரம் தொடங்கி இன்றுவரை சுமார் இரண்டரை கோடி பேர் அகதிகளாக இந்தியாவிற்குள் வந்துள்ளதாக ஒரு கணக்கு உள்ளது. 53,000 சக்மாக்கள் உட்பட 150,000 பர்மியர்கள், 90,000 திபெத்தியர்கள், 70,500 ஈழத் தமிழர்கள், 19,000 ஆப்கானியர்கள் என இப்போது 4,50,000 ஏதிலியர் இந்தியாவில் உள்ளனர். இவர்களில் ரோகினியா மற்றும் வங்கதேச முஸ்லிம்களில் இருந்து, ஆப்கன் மற்றும் பாக்கிலிருந்து வந்துள்ள சீக்கியர்கள், இந்துக்கள் எனப் பல மதத்தினரும், இனத்தினரும் உள்ளனர். இதில் பலர் இனி சொந்த நாடு திரும்புவதற்கான வாய்ப்புகள் குறைவு.

அப்படி இருந்தும் இந்திய அரசு இது தொடர்பான ஐ.நா. ஒப்பந்தங்களில் கையெழுத்திடவோ, தேசிய அளவிலான ஒரு ஏதிலியர் கொள்கையை உருவாக்கவோ தயாராக இல்லை. பின் எந்த அடிப்படையில் ஏதிலியர் இந்திய அரசுகளால் கையாளப்படுகின்றனர்? அவ்வப்போதைக்குத் தற்காலிகமாக உருவாக்கப்படுகிற அணுகல்முறைகளே (ad hocism) கடைப்பிடிக்கப்படுகின்றன. இதன்விளைவாக வெவ்வேறு மாநிலங்களில் வெவ்வேறு விதமான வகையில் வெவ்வேறு நாட்டு அகதிகள் நடத்தப்படும் நிலை உருவாகியுள்ளது.

> இந்தியா அகதிகளுக்கான பன்னாட்டு உடன்படிக்கைகளை ஏற்காவிட்டாலும் அகதிகளைத் திருப்பி அனுப்பாமை முதலான நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதாகக் கூறுவது வழக்கம். இது ஓரளவு உண்மைதான் என்றாலும் பன்னாட்டு உடன்பாடுகளை ஏற்காததன் விளைவாக அகதிகளைக் கையாள்வதில் பல குறைபாடுகள் ஏற்படுகின்றன


எடுத்துக்காட்டாக, திபெத்திய அகதிகளுக்கு இமாசலப் பிரதேசத்தில் விவசாய நிலங்கள் கூடத் தரப்பட்டுள்ளன. பிள்ளைகள் படிக்கத் தனிப் பள்ளிக்கூடங்களும் உள்ளன. தமிழ் நாட்டில் சுமார் 113 அகதி முகாம்கள் அமைக்கப்பட்டு (designated refugee camps) வரும் ஏதிலியர் அங்கு பிரித்தனுப்பப்படுகின்றனர். பூட்டான் மற்றும் நேபாளத்திலிருந்து வந்துள்ளோர் இரு நாட்டு நட்புறவு ஒப்பந்தங்களின் அடிப்படையில் நடத்தப்படுகின்றனர். சிலருக்கு வேலை அனுமதியும் கூட (work permit) அளிக்கப்படுகிறது. அதேநேரத்தில் பர்மா, ஆப்கான் முதலான பிற நாடுகளிலிருந்து வரும் அகதிகளின் நிலை படுமோசம்.

இந்தியாவுக்குள் பெரிய அளவில் ஒரு நாட்டிலிருந்து அகதிகள் வந்து குவியும்போது அவர்களுக்கு முகாம்கள் அமைக்கப்பட்டு குறிப்பிட்ட அளவு சமூகப் பொருளாதாரப் பாதுகாப்புகளுடன் குடியமர்த்தப்படுகின்றனர். தென் ஆசிய நாடுகள் அல்லது அவ்வளவு சுமுகமான உறவுகளில்லாத பிற நாடுகளிலிருந்து வருவோர் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பிக்கின்றனர். அவர்கள், ஆய்வுகளுக்குப் பின் அடைக்கலம் தேடுவோர் (asylum seekers) என்பதாக ஏற்கப்படுகின்றனர். அவர்களுக்கு விரிவான அகதிகள் நிலை (refugee status) அளிக்கப்படுவதில்லை. பிற நாடுகளிலிருந்து வரும் சிலர் ஐ.நா. அவையின் அகதிகளுக்கான உயர் ஆணையர் அலுவலகத்திற்கு அதன் விதிகளுக்குட்பட்டுத் தங்களுக்குத் தனிநபர் அடிப்படையில் அகதி நிலை அளிக்குமாறு விண்ணப்பிக்கின்றனர். இந்த அலுவலகம் டில்லியில் மட்டும் உள்ளது. மற்றபடி தமிழகத்திலும் சிறிய அளவில் உதவிகள் அளிக்கின்றது.

ஆக இந்தியாவில் உள்ள ஏதிலியரை மூன்று வகையாகப் பிரிக்கலாம்: (அ) இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டவர்கள் (எ.கா ஈழ மற்றும் திபெத் அகதிகள்). (ஆ) ஐ.நா அகதிகளுக்கான உயர் ஆணையர் அலுவலகத்தால் திருப்பி அனுப்பப்படாத உரிமையுடன் முழு அகதி நிலை வழங்கப்பட்டோர் (பர்மிய மற்றும் ஆப்கன் அகதிகள்) (இ) இந்திய அரசாலோ, ஐ.நா ஆணையத்தாலோ அங்கீகரிக்கப்படாதவர்கள் (மிசோராமில் வாழும் பர்மிய சின் அகதிகள்).

இந்திய அரசுக்கு அகதிகளுக்கான ஏதாவது ஒரு கொள்கை உள்ளது என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





றால் அது திபெத்திய அகதிகள் குறித்து நேரு அப்போது சொன்னது தான். இந்தியா தன் நாட்டுக்கு வரும் அகதிகளைப் பொறுத்தமட்டில் மூன்று அடிப்படைக்காரணிகளின் அடிப்படையில் நடத்தப்படுவர் என்றார். அவை:

1. எந்த நாட்டிலிருந்து வருகிறார்களோ அந்த நாட்டுடன் உள்ள நட்புறவு.
2. தேச மற்றும் எல்லைப்பாதுகாப்பு.
3. அகதிகளின் மீதான அனுதாபம்.

ஆக, இருநாட்டு அரசியலே இங்கு முதன்மை ஆகிறது. பன்னாட்டு ஒப்பந்தங்கள், அவற்றுக்கான கடப்பாடுகள் இங்கு ஒரு பொருட்டல்ல. இதன் விளைவுதான் மேற்குறிப்பிட்ட அகதிகளுக்கான அணுகல்முறைகளில் உள்ள சீரற்ற தன்மைகள்.

இந்தியா அகதிகளுக்கான பன்னாட்டு ஒப்பந்தங்களில் கையொப்பமிடாதபோதும் எல்லா நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட, வரும் அகதிகளை அவர்களின் நாடுகளுக்குத் திருப்பி அனுப்பாமை என்கிற Non - refoulement கொள்கையைப் புறக்கணிக்க இயலாது. தவிரவும் இந்திய அரசு 1966ஆம் ஆண்டின் ஐ.நா. சபையின் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான உடன்பாட்டையும், பொருளாதார, சமூக, கலாசார உரிமைகளுக்கான உடன்பாட்டையும் ஏற்றுக்கொண்டுள்ளது. ஐ.நா சபையின் குழந்தைகள் உரிமைக்கான உடன்பாட்டிலும் கையெழுத்திட்டுள்ளது இவை அகதிகளின் உரிமைகளையும் உள்ளடக்குவது குறிப்பிடத்தக்கது. அத்தோடு குடிமக்களுக்கிடையே சமத்துவம், அவர்களின் வாழ்வுரிமை, மத உரிமை ஆகியவற்றை ஏற்கும் இந்திய அரசியல் சட்டத்தின் 14, 21, 25 ஆகிய பிரிவுகள் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு இங்கு வரும் அகதிகளுக்கும் பொருந்தும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த அடிப்படைகளிலேயே நமது நீதிமன்றங்கள் பன்னாட்டு உடன்பாடுகளில் உள்ள உரிமைகள், அந்த உடன்பாடுகளில் இந்தியா கையொப்பமிடாதபோதும், இங்கு வாழும் அகதிகளுக்கும் உண்டு என்கிற நெறிமுறையை (judicially evolved principle) உருவாக்கியுள்ளன. சக்மா அகதிகள் வழக்கில் (National Human Rights Commission v State of Arunachal Pradesh, AIR 1996 SC 1234). உச்ச நீதிமன்றம் மேற்குறித்த அரசியல் சட்ட உரிமைகள் இங்கு வாழநேர்ந்த அகதிகளுக்கும் உண்டு என்பதைத் தெளிவாக்கியுள்ளது. அதேபோல இந்திய அரசு அந்தமான், நிகோபார் தீவுகளில் உள்ள பர்மிய அகதிகளை வெளியேற்ற முயற்சித்தபோது தொடுக்கப்பட்ட மற்றொரு வழக்கில் (Malvika Karlekar v Union of India & Criminal Writ Petition No 243 of 1988) அவர்களின் அகதி விண்ணப்பங்கள் ஐ.நா.அகதிகள் உயர் ஆணையரின் அலுவலகத்தில் நிலுவையில் உள்ளதைச் சுட்டிக்காட்டி, அதை நிறுத்துமாறு ஆணையிட்டது.

இந்தியா இவ்வாறு அகதிகளுக்கான பன்னாட்டு உடன்பாடுகளை ஏற்காவிட்டாலும் பொதுவில் அகதிகளைத் திருப்பி அனுப்பாமை முதலான நடைமுறைகளைக் கடைபிடிப்பதாகக் கூறுவது வழக்கம். இது ஓரளவு உண்மைதான் எனினும் பன்னாட்டு உடன்பாடுகளை ஏற்காததன் விளைவாக மேற்குறித்தவாறு அகதிகளைக் கையாளுவதில் சீரற்ற தன்மை இருப்பது முதலிய குறைபாடுகள் ஏற்படுகின்றன. தவிரவும் அரசியல் காரணங்களை முன்னிட்டு அகதிகளைத் திருப்பி அனுப்பாமை என்கிற கொள்கையையும் இந்திய அரசு விட்டு விடக்கூடியதுதான் என்பதற்கு ராஜீவ் கொலையை ஒட்டிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய அளவில் ஈழஅகதிகள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டது ஒரு எடுத்துக்காட்டு.

இப்படியான நிலையை இந்தியா எடுப்பதற்கு அடிப்படையாக இருப்பது இன்று அகதிகளைக் கையாள்வதற்கு அது பயன்படுத்தக்கூடிய 1939 ஆம் ஆண்டு வெளிநாட்டார் பதிவுச் சட்டம், 1946ஆம் ஆண்டு வெளிநாட்டார் சட்டம் மற்றும் பல கடவுச் சீட்டுச் சட்டங்கள் முதலியவைதான். இச்சட்டங்கள், குறிப்பாக வெளிநாட்டார் சட்டம் அகதிகளுக்கானதல்ல. இச்சட்டம் (அ) தங்களது நாடுகளில் வாழ இயலாமல் துன்புறுத்தப்பட்டு வெளியேறி வரும் அகதிகளையும், (ஆ) இங்குள்ள வேலை வாய்ப்புகள் அல்லது தொழில் வாய்ப்புகள் மூலம் தம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதற்காக சட்டபூர்வமாகவும் சட்டபூர்வ மற்றும் வருகிற புலம் பெயர்ந்தவர்களையும் (legal and illegal migrants) (C) உரிய பயண ஆவணங்களுடன் இங்கு வருபவர்களையும் இது வேறுபடுத்தி அணுகுவதில்லை. இந்தச் சட்டமும், இந்தச் சட்டத்தின் அடிப்படையில் 1971இல் வெளியிடப்பட்ட ஆணையும், 2004 இல் வாஜ்பாய் அரசாங்கத்தால் இச் சட்டத்திற்குக் கொண்டுவரப்பட்ட திருத்தமும் குடிமக்கள் அல்லாதவர்கள் மீது அபரிமிதமான அதிகாரங்களை இந்திய அரசுக்கு அளிக்கிறது. உரிய ஆவணங்கள் இல்லாத யாரையும் கைது செய்யவும், தடுத்து நிறுத்தவும், சிறையிலடைக்கவும், தேவையானால் சொந்த நாட்டிற்கே திருப்பி அனுப்பவும் இச்சட்டம் வழிவகுக்கிறது. 2003ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட குடிமக்கள் சட்டமும் வெளிநாட்டாருக்கு எதிரான அரசின் அதிகாரங்களை வலுவாக்குகிறது.

இந்தச் சட்டங்களின் அடிப்படையில்தான் இந்திய, தமிழக அரசுகள் ஈழ அகதிகளுக்கென செங்கல்பட்டு, பூந்தமல்லி முதலான இடங்களில் சிறப்பு அகதிகள் முகாம்கள் எனப்படும் நிழற் சிறைகளையும் (shadow prisons) செயற்படுத்துகின்றன. இவற்றில் அடைக்கப்பட்டுள்ள அகதிகள், தாங்கள் விடுவிக்கப்பட வேண்டுமெனத் தொடர்ந்து போராடி வருவது அறிந்த ஒன்று.

தங்கள் நாட்டில் வாழவே இயலாது துன்புறுத்தலுக்கு ஆளாகிறவர்கள் பிற நாடுகளில் தஞ்சம் புகுவதையும் அங்கு கண்ணியமாக அவர்கள் நடத்தப்படுவதையும் ஒரு உரிமையாக ஏற்கும் கடப்பாடு, பன்னாட்டுச் சட்டங்களில் கையெழுத்திடாதபோதும் இந்தியாவிற்கு உண்டு என்பதைச் சற்று முன் பார்த்தோம். அப்படி வருகிறவர்களிடம் உரிய பயண ஆவணங்களை எதிர்பார்ப்பது என்ன நியாயம்? அப்படி இல்லை என்பதற்காக வெளிநாட்டார் சட்டம் அல்லது உகண்டா நாட்டினருக்கான 1972ஆம் ஆண்டு ஆணை முதலியவற்றின் அடிப்படையில் அவர்களைத் திருப்பி அனுப்புவது அல்லது சிறையிடுவது எப்படிச் சரியாகும்?

ஐ.நா. உடன்பாடு மற்றும் விருப்ப ஒப்பந்தம் ஆகியவற்றில் கையொப்பமிடாததற்கு இந்தியா மூன்று காரணங்களைச் சொல்கிறது. அவை:

1. 1951ஆம் ஆண்டு உடன்பாடு ஐரோப்பிய நலன்களை முதன்மைப்படுத்துவதாக உள்ளது. பனிப்போர் காலத்திய பின்னணியில் உருவாக்கப்பட்டது அது.
2. தீவிரவாதம், பயங்கரவாதம் முதலியன தலைதூக்கியுள்ள சூழலில் இவ்வாறு அகதிகளை எளிதாக அனுமதித்துவிட இயலாது.
3. அகதிகளுக்கு இத்தனை உரிமைகளைக் கொடுத்தால் அருகிலுள்ள நாடுகளிலிருந்து ஏராளமானோர் இங்கு வரக்கூடும்.

இதில் சில உண்மைகள் இருந்த போதிலும், இந்தக் காரணங்களின் அடிப்படையில் இந்தியா ஐ.நா. உடன்பாடுகளில் கையெழுத்திடாமலும், அகதிகளுக்கான பொதுச் சட்டம் ஒன்றை உருவாக்காமலும் உள்ளதை ஏற்க இயலாது. இந்திய அரசியல் சட்டத்தின் 51(c) பிரிவின்படி இந்தியா பன்னாட்டு ஒப்பந்தங்களை ஏற்க வேண்டிய கடப்பாடுடையதாக உள்ளது. தவிரவும் தென் ஆசியாவில் ஒரு முக்கியமான வல்லரசாக தன்னைக்காட்டிக்கொள்ள விரும்புகிற, ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலில் நிரந்தர உறுப்பினராகத் துடிக்கிற, பன்னாட்டு அரசியலில் முக்கிய பங்காற்ற விழைகிற ஒரு நாடு இத்தகைய அடிப்படைப் பன்னாட்டுக் கடப்பாடுகளை மறுப்பதை எப்படி ஏற்க இயலும்? பனிப்போர்க் காலத்திய உடன்பாடு என்றால் இன்று பனிப்போர் முடிவுக்கு வந்துள்ள சூழலில் அதன் பொருளென்ன? தேவையான திருத்தங்களுடன் புதிய உடன்பாடுகளை உருவாக்க இயலாதா? 1951ஆம் ஆண்டு உடன்பாட்டின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள ஐ.நா. அகதிகள் உயர் ஆணையத்தின் செயற்குழுவில் அங்கம் வகிக்கும் இந்திய அரசு இன்னும் அந்த அடிப்படை உடன்பாட்டிலேயே கையொப்பமிடாதிருப்பது பெருங் கேலிக்கூத்து.

அகதிகள் என வருகிற யாரும் அப்படியே உள்ளே அனுமதிக்கப்படுவதில்லை. உரிய பரிசீலனைகள், விசாரணைகளுக்குப் பின்தான் அவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். தவிரவும்

**இந்திய அரசுக்கு அகதிகள் தொடர்பில் ஏதாவது கொள்கை உள்ளது என்றால் அது திபெத்திய அகதிகள் குறித்து நேரு அன்று சொன்னதுதான். இந்தியா தன்னிடம் வரும் அகதிகளை கையாள்வதற்கு மூன்று அடிப்படைக் காரணிகளைப் பின்பற்றுகிறது. எந்த நாட்டிலிருந்து வருகிறார்களோ அந்த நாட்டுடன் உள்ள நட்புறவு, தேச மற்றும் எல்லைப்பாதுகாப்பு, அகதிகளின் மீதான அனுதாபம் ஆகியவையே அந்த அனுதாபம். ஆக இரு நாட்டின் அரசியலே இங்கு முதன்மையாகிறது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சார்க் நாடுகளின் 2004ஆம் ஆண்டு பயங்கரவாத எதிர்ப்பு ஒப்பந்தம் பயங்கரவாதிகள் என சந்தேகப்படக் கூடியவர்களுக்கு அகதிகள் நிலை அளிக்கக்கூடாது எனக் கூறுகிறது. அந்த விதியை இங்கும் பயன்படுத் திக்கொள்ளலாம். தேவையானால் இன்னும் விளக்கமாக பாதுகாப்பு அடிப்படையில் இன்னும் இது போன்ற முன்னெச்சரிக்கைகளை இணைத்துக் கொள்ளலாம்.

பெரிய அளவில் அண்டை நாட் டார் இதைப் பயன்படுத்திக் கொண்டு இங்கே வரக்கூடும் என்கிற அச்சமும் ஏற்புடையதல்ல. பா.ஜ.க.வின் முஸ் லிம் எதிர்ப்பு அரசியலின் விளை பொருளாகவே இந்தக் கருத்து முன் வைக்கப்படுகிறது. வங்கதேச முஸ் லிம்கள் இவ்வாறு அதிக அளவில் ஊடுருவி விட்டனர் என்று பிரசாரம் செய்வது அவர்களின் வழமையான அரசியல்களில் ஒன்று. இன்று வங்க தேச எல்லையில் இரட்டை முள் வேலிகள் இடப்பட்டும் இராணுவம் நிறுத்தி வைக்கப்பட்டும் தொலை தூரத்திற்கு வெளிச்சத்தைப் பீய்ச்சி அடிக்கும் விளக்குகளும் அமைக்கப் பட்டும் அத்தகைய நுழைவு முற்றிலு மாகத் தடுக்கப்பட்டுள்ளது. பிற இத்த கைய பகுதிகளிலும் இந்த நடை முறைகளைப் பயன்படுத்தலாம்.

இந்திய அரசு அகதிகள் தொடர் பான பன்னாட்டு உடன்பாடுகளை ஏற்க இயலாது எனச் சொல்வதற்கான காரணங்கள் எதுவும் ஏற்புடைய தல்ல.

2004இல் முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி பி.என். பகவதி அவர்கள் இந் தப்பன்னாட்டு ஒப்பந்தங்களின் அடிப்படையில் இந்தியாவுக்கென அகதிகள் நிலைக்கான ஒரு மாதிரி சட்ட வடிவை உருவாக்கினார். பின் 2006இல் அந்த அடிப்படையில் அக திகள் நிலைக்கான ஒரு சட்ட வரை வையும் இந்திய அரசு உருவாக்கி யது. எனினும் இன்றுவரை அதைப் பாராளுமன்றத்தில் வைத்து விவாதிக் கவில்லை. அப்போதைய தேசிய மனித உரிமை ஆணையத் தலைவர் நீதியரசர் ஏ.எஸ்.ஆனந்த் இந்தச் சட்ட வரைவை ஆய்வு செய்ய ஒரு குழு வையும் நியமித்தார். வேறு பலரும் இவ்வரைவு குறித்துக் கருத்துகளை முன்வைத்துள்ளனர்.

இவ்வரைவைப் பொது விவாதத்தி ற்கு உட்படுத்தித் தேவையான திருத் தங்களுடன் சட்டமாக்க வேண்டும். பிற நாடுகளில் வாழ இயலாமல் துன் புறுத்தப்பட்டு வெளியேறுபவர்கள் உரிய விசாரணைகளுக்குப் பின் அனுமதிக்கப்படுவது, அவர்கள் எவ் வகையிலும் திருப்பி அனுப்பப்படா மல் கண்ணியமான வாழ்வொன்றை அமைத்துக்கொள்ள அனைத்து வாய்ப்புகளையும் அளிப்பது என்கிற வகையில் இச்சட்டம் அமைய வேண் டும்.

இப்படி புலம் பெயர நேர்ந்தவர்க ளுக்கு உரிய முறையான, முறைசா ராத மற்றும் தொழிற் கல்விகளை அளிப்பது, அவர்களது (உடல்) நலத் தேவைகளைப்பூர்த்தி செய்வது, வேலை வாய்ப்புகளுக்கு வழி செய் வது, அவர்கள் அவர்களது சொந்தப் பண்பாடு, நம்பிக்கைகள், மதக் கடமைகள் ஆகியவற்றைத் தொடர்வ தற்கு வாய்ப்பளிப்பது, கொடும் பாதிப்பிற்குரிய வகையில் உளவியல் ரீதியில் தாக்கப்பட்டுள்ள அவர்களு க்கு உரிய வகையில் பாதுகாப்பு அளி ப்பது என்கிற வகையில் அது அமைய வேண்டும். அவர்களுக்கும் பிற குடிமக்களைப் போலவே இந்த நாட்டிற்குள் சுதந்திரமாக நடமாடு வது, எங்கு வேண்டுமானாலும் நிரந் தரத் தங்குமிடத்தை அமைத்துக் கொள்வது, பிற குடிமக்களைப் போலவே எந்தத்தொழிலையும் செய் வது, தம் நலனுக்கான அமைப்பு களை உருவாக்குவது, பத்திரிகைகள் உள்ளிட்ட கலாசார நடவடிக்கை களை மேற்கொள்வது முதலான உரி மைகள் வழங்கப்பட வேண்டும்.

1946ஆம் ஆண்டு வெளிநாட்டார் சட்டம் முதலியவை அதற்குரிய முறையில் திருத்தப்பட வேண்டும். சிறப்பு முகாம்கள் என்ற பெயரில் நிழற் சிறைகளை அமைக்கும் விதி முறைகளை நீக்க வேண்டும்.

கடந்த பத்தாண்டுகளாக நான் பல முறை தமிழகத்திலுள்ள ஈழ அகதி கள் முகாம்களுக்குச் சென்றுள்ளேன். எங்கள் அறிக்கைகள் இணையத் தளங்களில் உள்ளன. சமீபகாலமாக எல்லா முகாம்களிலும் மேலெழுந் துள்ள ஒரு பிரச்சினை இளைஞர்கள் இந்தியாவிலிருந்து பிற மேலை நாடு களுக்குச் செல்லும் முயற்சியில் இரு ப்பதுதான். ஈழ அகதி முகாம்களில் இருப்போர் நிறையப் பணம் கொடு த்து, உயிரைப் பணயம் வைத்து இதற் கான முகவர்களின் மூலம் வெளி நாடுகளுக்குச் செல்ல முயற்சிப்பதும் அம்முயற்சியில் பலர் உயிரிழப் பதும், கைதாவதும் தொடர்ந்து நடை பெற்று வருகின்றன. முப்பதாண்டுக ளுக்கும் மேலாக இங்கே ஈழ அகதி

**இலங்கை அகதிகளைப் பொறுத்தவரை சொந்த மண்ணின் வாசத்தை நுகராத ஒரு தலைமுறை இந்திய மண்ணில் பிறந்து வளர்ந்துள்ளது. குடிமக்களுக்குரிய அடிப்படை உரிமைகளும் அகதிகளுக்குரிய சட்ட பாதுகாப்புகளும் இன்றி அகதி பட்டத்தைச் சுமந்துகொண்டு என்னாலும் வாழ்வதை இவர்கள் வெறுக்கின்றனர். ஐரோப்பிய ஒன்றியம், கனடா, அவுஸ்திரேலியா முதலான நாடுகளுக்கு புலம்பெயர்ந்த ஈழத்தவர்களுக்கெல்லாம் அந்த நாடுகள் குடியுரிமை வழங்கியுள்ள போது தொப்புள் கொடி உறவு குறித்து முழங்கும் அரசியல்வாதிகள் மலிந்த இந்தியாவில் இவர்களுக்கு குடியுரிமை வழங்காதிருப்பது வருந்தத்தக்கது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் வாழ்ந்து கொண்டுள்ளனர். சொந்த மண்ணின் வாசத்தை நுகராத ஒரு தலைமுறை இந்த மண்ணில் பிறந்து வளர்ந்துள்ளது. குடிமக்களுக் குரிய அடிப்படை உரிமைகளும், அகதிகளுக்குரிய சட்டப் பாதுகாப்பு களுமின்றி ஆனாலும் அகதிப் பட்டத் தைச் சுமந்து கொண்டு எந்நாளும் அந்நியராக வாழ்வதை இவர்கள் வெறுக்கின்றனர். இதே நேரத்திலும், ஏன் அதற்குப் பின்னும் ஐரோப்பிய யூனியன், கனடா, அவுஸ்திரேலியா முதலான நாடுகளுக்குப் புலம் பெயர்ந்த ஈழத்தவர்களுக்கெல்லாம் அந்த நாடுகள் குடியுரிமை வழங்கி யுள்ளபோது தொப்புள் கொடி உறவு குறித்து முழங்கும் அரசியல்வாதிகள் மலிந்த நமது நாட்டில் இவர்களுக்குக் குடியுரிமை வழங்காதிருப்பது வருந் தத்தக்கது.

எனவே உருவாகும் சட்டத்தில் இப் படி நீண்ட ஆண்டுகளாக இங்கே அக திகளாக வாழ்வோருக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கும் வழிமுறைக ளையும் உள்ளடக்க வேண்டும்.

1951ஆம் ஆண்டு அகதிகள் உடன்பாட்டில் கையெழுத்திடவேண் டும் என்பதற்கும், உரிய வகையில் தேசிய அளவிலான ஏதிலியர் கொள்கை ஒன்றையும் சட்டமொன் றையும் உருவாக்குவதற்கும் இந்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண் டும். இங்கு வாழும் ஏதிலியர்களு க்கும் நம் மக்களுக்கும் இடையிலான இடைவெளிகளை நீக்கி இம்மக்கள் நம்மவர்களுடன், காந்தியடிகள் சொன்னதுபோல, பாலில் சக்கரை கலப்பதுபோல இரண்டறக் கலப்ப தற்கு ஏதிலியர் பிரச்சினையில் அக்க றையுள்ளோர் உதவ வேண்டும். காந் தியடிகளின் இந்த உதாரணம் கூட இங்கு முழுமையாகப் பொருந்தாது. பாலில் சர்க்கரை போலத் தம் அடை யாளங்களை ஏதிலியர் இழக்க வேண் டியதில்லை. தத்தம் அடையாளங்க ளுடன் அவர்கள் நம்மவர்களாக ஆகவேண்டும். ■

---

*(39ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

10 செக்கன்களுக்கு 4000 ரூபா வைக் கட்டணமாக அறவிடுகின்றன.

பிரதமர் அலுவலகம் சஞ்சய பாரு வைக் கடுமையாகக் கண்டனம் செய் தது. காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியினால் பிரதமர் மலினப்படுத் தப்பட்டார் என்று நூலில் கூறப்பட்டி ருப்பது ஒரு புனைகதைக்கு ஒத்ததாக இருக்கிறது என்றும் ஆவணங்கள் சக லதையும் திருமதி காந்தி பார்வையிட் டார் என்ற கூற்று எந்தவிதமான ஆதா ரமுமற்றது என்றும் பிரதமர் அலு வலகம் கூறியிருக்கிறது. உயர்ந்த பத வியின் மூலமாகக் கிடைக்கப்பெற்ற அந்தஸ்தையும் நம்பகத்தன்மையை யும் துஷ்பிரயோகம் செய்து வர்த்தக நோக்கங்களுக்காக இந்த நூல் எழு தப்பட்டிருக்கிறது என்றும் அலுவ லகம் குற்றஞ்சாட்டியிருக்கிறது.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நரேந்திரமோடி நூலில் குறிப்பிடப் பட்டிருக்கும் விடயங்களைச் சுட்டிக் காட்டி சோனியா காந்தியையும் ராகுல் காந்தியையும் கடுமையாகக் கண்டனம் செய்துகொண்டிருக்கிறார். திரைக்குப் பின்னால் இருந்து கொண்டு ஐக்கிய முற்போக்குக் கூட் டணி அரசாங்கத்தை இயக்கியமைக் கான 'விலையை' தாயாரும் புத்திர னும் செலுத்த வேண்டியிருக்கும் என் றும் 'யார் உண்மையான பிரதமர் என் பது இப்போது தெளிவாகத் தெரிகி றது. மன்மோகன்சிங் என்ன சொல்கிறார் என்பது முக்கியமில்லை' என்றும் மோடி கூறியிருக்கிறார். ■

---

*(45ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

வாக்காளர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தார் முதல்வர் ஜெயலலி தா. அக்கட்சியினர் எத்தனை பேர் தங்கள் டெபாஸிட்டை திரும்பப் பெறுகிறார்கள் என்பது சுவாரஸ்ய மான தகவலாக இருக்கும். இந்தக் களத்தில் குறிப்பிடத்தக்க வேட்பாளர் கள் என்றால் திருமாவளவன், டாக் டர் கிருஷ்ணசாமி, ப.சிதம்பரத்தின் மகன் கார்த்தி சிதம்பரம், டாக்டர் ராம தாஸின் மகன் அன்புமணி ராமதாஸ், ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ உள்ளிட்டோர்தான். இவர்க ளில் வைகோவின் தொகுதியில் சென்ற முறை அவர் போட்டியிட்ட போது விருதுநகர் நாடாளுமன்றத் தொகுதியில் 77.43 சதவீத வாக்கு கள் பதிவானது. ஆனால், இந்த முறை 75.48 சதவீத வாக்குகள்தான் பதிவாகியிருக்கிறது. இவர்களுடைய எதிர்காலமும் மே 16ஆம் திகதி யன்று தெரியவரும்.

பலமுனைப் போட்டி. இதில் காங்கி ரஸ் பிரிக்கும் வாக்குகள் தி.மு.க. வேட்பாளர்களுக்கு பாதகமாக முடி யும். பா.ஜ.க. வேட்பாளர்கள் பிரிக் கும் வாக்குகள் அ.தி.மு.க.விற்கு பாதகமாக முடியும். இது தவிர இரு கம்யூனிஸ்ட் கட்சிகளின் சார்பிலும் 18 நாடாளுமன்றத் தேர்தலில் போட் டியிடுகிறார்கள். அவர்கள் ஏற்க னவே அ.தி.மு.க. கூட்டணியில் இருந்தவர்கள். அதனால் அவர்கள் பிரிக்கும் வாக்கும் அ.தி.மு.க. கூட்ட ணிக்குத்தான் மைனஸாகப் போகும். இது தவிர ஆம் ஆத்மிக் கட்சி சார் பில் 20 தொகுதிகளில் போட்டியிடுகி றார்கள். அவர்கள் பிரிக்கும் வாக்குக ளும் பா.ஜ.க. மற்றும் அ.தி.மு.க. போன்ற கட்சிகளுக்கு ஆபத்தாக முடியும். தேர்தல் களத்தில் 'மோடி அலை' தேசிய ஜனநாயக முற்போக் குக் கூட்டணி முன்வைத்த அலை. 'மைனாரிட்டி அலை' என்பது தி.மு.க. கூட்டணி முன்வைத்த அலை. அ.தி. மு.க.வோ, 'அரசின் சாதனைகள்' என்ற அலை உருவாக பிரசாரத்தை மேற்கொண்டது. இதற்கு எல்லாம் மாற்றாக 'பண அலை' ஒன்றும் வீசி யிருக்கிறது. அதனால் பரபரப்பான தேர்தல் முடிவு காத்திருக்கிறது. எந் தக்கட்சியின் வேட்பாளர் ஜெயித்தா லும், அவருக்கும் தோல்வியடையும் வேட்பாளருக்கும் இடையே உள்ள வாக்கு வித்தியாசம் ஆயிரக்கணக் கில் மட்டுமே இருந்தால் ஆச்சரியப் படுவதற்கில்லை. அந்த அளவிற்கு சர்வேக்களால் கூட சரியாகக் கணிக்க முடியாத தேர்தல் தமிழக நாடாளு மன்றத் தேர்தல். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுப்பரவல்



ஆதிசேனன்

# முகம்மது சமீம்

## (1932 - 2014)

ஈழத்தின் மூத்த முற்போக்கு இடதுசாரி சிந்தனையாளர்களில் ஒருவராக முகம்மது சமீம் விளங்கிவந்தவர். இவர் கடந்த மாதம் 17ஆம் திகதி அமரராகிவிட்டார். சமீம் கல்வியாளர்,திறனாய்வாளர், ஆய்வாளர், தேர்ந்த வாசிப்பாளர், நூல் சேகரிப்பாளர் என பன்முக பரிமாணங்களில் இயங்கியவர். மட்டக்களப்பு பிரதேசத்தில் கல்வி அதிகாரியாகப் பணிபுரிந்த காலத்தில் பல்வேறு கஷ்டப்பிரதேசங்களுக்குச் சென்று கல்வி வளர்ச்சிக்காக உழைத்தவர். குறிப்பாக பின்தங்கிய மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு சிறப்பான திட்டங்களை வகுத்து இயங்கியவர். ஆசிரியர்களுடன் நட்பாக தோழமையுடன் பழகி அவர்கள் கல்வித்தர மேம்பாட்டிற்காக இயங்குவதைத் தூண்டியவர். எப்போதும் மனிதநேயத்துடன் சிந்திப்பதையும் இயங்குவதையும் வழமையாகக் கொண்டவர்.

சமீம் பதுளையில் (15.11.1932) பிறந்தவர். கொழும்பு சாஹிராக் கல்லூரியில் கல்விகற்று பேராதனை பல்கலைக்கழகத்தில் வரலாற்றை சிறப்புப் பாடமாகக் கற்றுக் கொண்டவர். பேராசிரியர்கள் க.கைலாசபதி, கா.சிவத்தம்பி ஆகியோருடன் இணைந்து பணியாற்றியவர். இந்த மூவரும் ஒரே காலகட்டத்தில் பல்கலைக்கழகத்தில் படித்தவர்கள். அதுபோல் முற்போக்கு இடதுசாரி இயக்கச் செயற்பாடுகளிலும் ஒன்றாக இணைந்து பணியாற்றியவர்கள்.

மாணவப் பருவத்தில் சமீம் சிவத்தம்பியுடன் இணைந்து தமிழ்நாடு சென்று தொ.மு.சி. ரகுநாதன், தி.க.சிவசங்கரன், ஜெயகாந்தன் உள்ளிட்ட இடதுசாரி எழுத்தாளர்களுடன் சந்திப்புகளை ஏற்படுத்தி உறவுகளை வளர்த்துக்கொண்டார். ஈழத்துக்கும் தமிழகத்திற்கும் இடையே வலுவான இணைப்புப்பாலம் உருவாகவும் காரணமாக சமீம் இருந்தவர். இவர் ஒரு தீவிர வாசிப்பு ஆர்வம் கொண்டவர். சமூக, வரலாறு, அரசியல் நூல்களை வாசிப்பதிலும் அவை பற்றி எழுதுவதிலும் கலந்துரையாடுவதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டவர். இதைவிட ஆங்கில இலக்கியத்திலும் ஆழமான ஈடுபாடு கொண்டவர். சேக்ஸ்பியரின் இலக்கியத்தைச்சுவைத்து உரைப்பதில் அலாதிப்பிரியம் கொண்டவர். சேக்ஸ்பியரின் இலக்கிய உருவாக்கத்திற்கும் வரலாற்றிற்கும் இடையிலான உறவு பற்றி அறிவுபூர்வமாக ஆய்வு ரீதியில் கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளார்.

> சமீம் மார்க்ஸிய ஆய்வு நெறியிலிருந்து பொருளாதாரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து தனது ஆய்வுகளை வளர்த்துச் சென்றிருந்தாலும் தேசிய இனப்பிரச்சினையை புரிந்து கொள்வதற்கு பொருளாதாரம் மட்டுமல்ல ஏனைய அம்சங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து விளக்க வேண்டும், புரிய வைக்க வேண்டும் என்பதையும் இனங்கண்டு செயற்பட்ட ஒரு புத்திஜீவி

சமீம் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஒரு திறனாய்வாளருக்குரிய சிறப்புகளுடன் இயங்கியுள்ளார். பண்டைய இலக்கியம், நவீன இலக்கியம் முதலானவற்றை வரலாறு, அர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியல் முதலான பிற துறைகளுடன் ஒன்றிணைத்தும் ஆய்வு செய்யும் பாங்கு கொண்ட ஒருவர். இது இவரது தனிச்சிறப்பு எனக் கூறலாம். 'இஸ்லாமியக் கலாசாரம்', 'இலங்கை முஸ்லிம்களின் திருமண சம்பிரதாயங்கள்' முதலான நூல்கள் இவருக்கு தனியான இடத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளன. இத்துறைசார் கற்கையில் இந்த இரு நூல்களும் பல்வேறு ஆய்வாளர்களால் எடுத்துப் பேசப்படுகின்றன.

மார்க்சிய சிந்தனையில் ஆழமான ஈடுபாடும் வாசிப்பும் கொண்டவராக வளர்ந்து வந்தார். இந்த மரபிற்குட்பட்ட போக்கையும் ஆய்வு செய்வதற்கான நெறிமுறைகளையும் உருவாக்கிக் கொண்டார். மேலும் வரலாற்று ஆய்வாளர்களுக்குரிய புலமையையும் தகுதியையும் வளர்த்துக் கொண்டார். மார்க்சிய வரலாற்று ஆய்வாளரான டி.கோசாம்பி, சர்மா முதலான மார்க்சிய ஆய்வாளர்களின் நூல்களுடன் ஆழமான பரிச்சயத்தை ஏற்படுத்திக்கொண்டார். இலங்கையின் வரலாற்றை மார்க்சிய நோக்கில் புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்கான அடிப்படையைத் தேடுவதும் அவற்றை தர்க்கத்திற்குட்படுத்தி ஆய்வு ரீதியில் புரிந்துகொள்வதற்கான விளக்கங்களை தொகுத்துக்கொள்வதிலும் தனிச்சிறப்புகளுடன் விளங்கி வந்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினை உச்சம் பெற்ற காலத்தில் தினகரன் இதழில் 'ஒரு சிறுபான்மைச் சமூகத்தின் பிரச்சினைகள்' என்ற தலைப்பில் தொடர் கட்டுரையை எழுதிவந்தார். முஸ்லிம் சமூகத்தையும் அதன் பிரச்சினைகளையும் தனித்தனியாகப் பிரிக்க முடியாதென்று உணர்ந்து பிரச்சினைகளின் பன்முகப்பரிமாணங்களை விளக்க ஆரம்பித்தார். முஸ்லிம்களுடைய பிரச்சினைகள் ஏனைய சிறுபான்மைச் சமூகத்தினருடன் பின்னிப்பிணைந்திருக்கின்றன. பின்னிப்பிணைந்திருக்கும் உண்மையை தெளிவாக இனம்கண்டு ஆய்வு ரீதியில் வெளிப்படுத்துவதற்கான களங்களை அறிமுகம் செய்தார். இவ்வாய்வை மேற்கொண்டுவரும் போது இலங்கைத் தமிழர்களுக்கும் மலைநாட்டு இந்திய வம்சாவளியினருக்கும் இழைக்கப்பட்ட அநீதிகளை மார்க்சிய கண்ணோட்டத்தில் புரிந்து கொள்வதற்கான அறிகை மரபை உருவாக்கிக் கொண்டார். மார்க்சிய கண்ணோட்டத்தில் ஒரு ஆய்வை மேற்கொள்ளும் போது வரலாற்றுச் சம்பவங்களுக்கும் சமூகத்தில் ஏற்படும் கொந்தளிப்பிற்கும் வன்செயல்களுக்கும் உரிய காரணங்களை நாம் கண்டுபிடிக்க வேண்டும். இன உணர்வினால் ஏற்படும் பாதகங்களுக்கும் சாதிவெறியினால் ஏற்படும் கலகங்களுக்கும் பின்னணியில் சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் இருப்பதைக் காண்கிறோம்.

சமுதாயத்தில் தோன்றும் கொந்தளிப்புகளுக்கும் புரட்சிகளுக்கும் அடித்தளத்தில் பொருளாதாரக் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. 1915ஆம் ஆண்டு முஸ்லிம்களுக்கு எதிராகத் தோன்றிய கலகத்திற்கு பொருளாதார வர்த்தகப் போட்டியே முக்கிய காரணம். இதனை எல்லோரும் ஏற்றுக்கொள்கின்றனர். தமிழர்களுக்கு எதிராக ஏற்பட்ட கலகங்களுக்கும் இப்பொருளாதாரக் காரணியே முக்கியம். இதனை யாரும் மறுக்க முடியாது. ஜே.வி.பி.என்ற புரட்சிகர இயக்கம் தோன்றுவதற்கும் பொருளாதாரமே காரணம். தமிழர்கள் தனிநாடு கேட்பதற்கும் அவர்கள் மத்தியில் ஆயுதம் தாங்கிய சுதந்திர இயக்கம் தோன்றுவதற்கும் அடிப்படைக் காரணம் பொருளாதாரமே.

எனவே ஒரு சமூகத்தை மட்டும் தனியாகப் பிரித்தெடுத்து ஆய்வை மேற்கொள்வோமானால் ஒரு குறுகிய வட்டத்திற்குள்ளேயே எமது ஆய்வு அமையும். சமுதாயத்தைப் பாதிக்கும் பொதுவான காரணிகளை நாம் காணத் தவறிவிடுவோம். மனிதன் ஒரு தீவு அல்ல. அவன் சமுதாயத்தின் ஓர் அங்கம். சமுதாயத்தில் ஏற்படும் மாற்றத்தினால் அவனும் பாதிக்கப்படுகிறான். அதேபோல முஸ்லிம்களும் இலங்கைச் சமுதாயத்தில் ஓர் அங்கம். பெரும்பான்மை இனத்தவரின் அடாவடிப்போக்கு எல்லா சிறுபான்மை இனங்களையும் பாதிக்கிறது. இதில் முக்கியமாகப் பாதிக்கப்பட்டவர்கள் இலங்கைத் தமிழர்களே. இவர்களுடைய பிரச்சினைகளை அலட்சியப்படுத்தி ஒரு குறிப்பிட்ட சிறுபான்மைச் சமூகத்தைப் பற்றிய பிரச்சினைகளை மட்டும் ஆராயும் போது அவ்வாய்வில் உண்மை மறைக்கப்படுகிறது. சுதந்திரத்திற்குப் பின் இலங்கையில் தோன்றிய பேரினவாத அரசாங்கங்கள் பொதுவாக எல்லா சிறுபான்மை இனங்களையும் பாதிக்கும் செயல்களையே நடைமுறைப்படுத்தி வந்திருக்கின்றன. ஆகவே இலங்கையில் முக்கிய சிறுபான்மையினமாகிய தமிழர்களுடைய பிரச்சினையை ஆராயாமல் விடுவது ஆராய்ச்சித் தத்துவத்திற்கு செய்யும் துரோகமாகும்.

இவ்வாறு ஒரு சிறுபான்மைச் சமூகத்தின் பிரச்சினைகளை ஆராயப் புகுந்த சமீம் தனது புலமை நியாயப்பாட்டை, ஆய்வு நேர்மையை வெளிப்படுத்துகின்றார். ஆரம்பத்தில் முஸ்லிம்களின் பிரச்சினைகளை ஆராயத்தொடங்கி படிப்படியாக இலங்கையின் பல்லின கலாசாரத்திற்கு எதிராக வெளிப்பட்ட சிங்கள - பௌத்த பேரினவாதம் ஒரு கருத்தியலாக ஏனைய சமூகங்களுக்கு எதிராக மாறிவரும் அபாயத்தை மிகநுட்பமாக பல்வேறு ஆய்வு மூலங்களுக்கூடாக வெளிப்படுத்தினார். இதனால் தான் அந்தத் தொடர் அப்போது நீண்டு சென்றது. பின்னர் அவை நூலாக நான்கு பாகங்களில் தொகுக்கப்பட்டது. இந்த நூலாக்க முயற்சியில் சமீம் பயன்படுத்திய உசாத்துணை நூல்களின் பட்டியலைப்பார்க்கும் போது இதற்காக அவர் எவ்வளவு தூரம் தேடல்களிலும் வாசிப்பிலும் ஆழமாக ஈடுபட்டுள்ளார் என்பது நமக்குத் தெளிவாகிறது.

சமீம் மார்க்சிய ஆய்வு நெறியில் இருந்து பொருளாதாரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து தனது ஆய்வினை வளர்த்துச் சென்றிருந்தாலும் தேசிய இனப்பிரச்சினையை புரிந்துகொள்வதற்கு பொருளாதாரம் மட்டுமல்ல, ஏனைய அம்சங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து விள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்க வேண்டும், புரியவைக்க வேண்டும் என்பதையும் இனங்கண்டு இயங்கியுள்ளார். வரலாற்றிற்கும் பண்பாட்டிற்கும் இடையிலான உறவை பன்முகப் பரிமாணத்தில் விளங்கிக் கொள்வதற்கான ஆற்றலையும் வளர்த்துக்கொண்டார். முற்போக்கு பண்பாட்டு இயக்கத்தின் உருவாக்க காலகட்டத்தில் தொழிற்பட்ட கருத்தாக்க வகையினங்கள் அன்றைய கால கட்டத்தில் நிலவிய சமூக அரசியல் நிலைமையில் தாக்கம் பெற்றவை. இதன் பணிக்கடமையின் இயல்பிற்கு ஏற்பவே அவை உருவாக்கப்பட்டன. இந்தக் கட்டத்தையும் கடந்து இனத்துவ அரசியலின் மேலாண்மை இலங்கை வரலாற்றை மீள்வாசிப்பிற்கு உட்படுத்தும் தர்க்க விளைவின் ஆதாரமாகவும் சமீம் இயங்கியுள்ளார். இதற்குச் சாட்சியாகவே ஒரு சிறுபான்மைச் சமூகத்தின் பிரச்சினைகள் எனும் நூற்தொகுதிகள் அமைந்துள்ளன. பண்பாட்டு குறுக்கிடலில் சாதியம், இனத்துவம் முதலானவற்றின் பாத்திரங்களை புறநிலையாக ஆய்வு செய்யும் மனப்பாங்கைத் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்துள்ளார்.

மார்க்சிய இயங்கியல் நெறியை அடியொற்றி வரன்முறையான ஆய்வுகளை முன்னெடுத்ததுடன் வரலாறு, அரசியல், பண்பாடு, இனத்துவம் இவற்றிற்கிடையிலான ஊடாட்டத்தின் தர்க்கவியலை வளர்த்தெடுத்தலுடன் புதிய ஆய்வு முடிவுகளையும் கண்டெடுத்தார். சமூக வரலாற்று தொடர்ச்சியில் இனத்துவ அரசியலின் ஒவ்வொரு பக்கத்தையும் நுண்ணாய்வுக்குட்படுத்தியுள்ளார். காலனித்துவ ஆட்சிக் காலத்தில் அரசியல் அதிகாரம் பிரித்தானியாவிடம் இருந்தது. பின்னர் இந்த அதிகாரம் இலங்கையின் மேட்டுக்குடி படித்த உயர் மத்திய தர வர்க்கத்திற்கு கையளிக்கப்பட்டது. இந்த அதிகாரம் பின்னர் தனிச் சிங்கள வர்க்கத்திடம் எவ்வாறு சென்றடைந்தது? அது எவ்வாறான அரசியல் நெருக்கடிகளை, இன அழிவுகளை ஏற்படுத்தியது பற்றியெல்லாம் மிகத் தெளிவாக, நுட்பமாக ஆய்வு ரீதியாக வெளிப்படுத்துகின்றார்.

பொதுவாக பல்கலைக்கழக புலமைசார் மட்டத்தில் இருந்து வெளிவர வேண்டிய ஆக்க முயற்சிகளையொத்த ஆய்வு முயற்சிகளை பல்கலைக்கழகத்திற்கு வெளியே இருந்து மேற்கொண்டவர்களில் முகம்மது சமீம் முக்கியமானவர். இவரது புலமையும் ஆளுமையும் சமூகம் சார்ந்த நோக்கிலும் மார்க்சிய சிந்தனையிலும் அதன் இயங்கியலிலும் வெளிப்பட்டுள்ளது. இவரது மறைவு மார்க்சிய செயற்பாட்டாளர்களுக்கும் சிந்தனையாளர்களுக்கும் பெரும் இழப்பு. சமீம் விட்டுச் சென்றுள்ள ஆய்வுமரபு மார்க்சிய நோக்கில் தேசிய இனப்பிரச்சினையை விளக்குவதற்கான மார்க்சிய குறுக்கீட்டை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என்பதை நமக்கு உணர்த்துகின்றது. ■

---

*(62ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

தளிராயிருந்தவள் தூங்காமல் விழித்திருந்த மருத்துவமனை நாட்கள் அவளுக்கு அப்பா வாங்கித்தந்த பொம்மைகள், காமிக்ஸ், ஜானி, நீரோ, டார்ஜன் கதைப்பெட்டி இப்போதும் உப்பு விடுதிக்குள் கட்டில் கீழே திறந்த ஒவ்வொன்றாய்க் கார்ட்டூன் விளையாட்டில், அப்பாவின் ஆஸ்த்மா நீர் கோர்த்த மூச்சரவம் சிலோன் போட்மெயில் ஜன்னலோரம் சாய்ந்த எல்லாளன் கொதிகலத்தில் இரைச்சலிடும் கரி எஞ்சின் ஏதோ கறுப்பு ரயில் புகைவிடும்...' மேற்போந்த பகுதி இராமாயணத்தின் சூர்ப்பனகை சமகால அரசியல் பின்புலத்தில் எவ்விதம் சூர்ப்பதனுவாகக் கோணங்கியால் படிமமாக்கப் பட்டுள் ளாள் என்பதைத் தெளிவாக உணர்த்துகிறது. தவிரவும் சமகால அரசியலில் நன்கு பரிச்சயமுடையவருக்கு சூர்ப்பதனு எனும் படிமம் மூலமாக எந்தச் சம்பவம் இங்கே விபரிக்கப்படுகிறது என்பதை உணர்ந்து கொள்வதில் தடையேதுமிருக்காதென நம்பு கிறேன்.

இந்த 'த' புதினத்தைக் கோணங்கி அண்மையில் தனுஷ்கோடியில் தன்னந்தனியாக வெளியிட்டு ஒரு சுருட்டின் மீது கள்ளை ஊற்றி அந்தச் சுருட்டைப் பற்றவைத்துக் கடலுக்குப் படையல் செய்து 'த' புதினத்தின் 36 பக்கங்களைக் கடலுக்கு வாசித்தும் காட்டியிருக்கிறார். மேலும் இராமேஸ்வரத்தைப் புரட்டிப்போட்ட தனுஷ்கோடிப் புயலால் கடலில் மூழ்கிய புகையிரதத்திற்குக் கடைசியாகப் பச்சைக்கொடிகாட்டிய புகையிரத நிலைய ஊழியரின் கைகளைப் பார்க்கவெனத் தனுஷ்கோடிக்குச் சென்று அவ்வூழியரைத் தேடிக்கண்டு பிடித்து அவரது கைகளைத் தடவிப் பார்த்துவிட்டு தமது சொந்த ஊரான கோவில் பட்டிக்குத் திரும்பிவந்திருக்கிறார் கோணங்கி. 'தனுஷ்கோடியில் திரிகிற ஒவ்வொரு நாயும் எனக்குப் பழக்கம். எச்சில் ஒழுகிற அதன் நாவில் நான் இருக்கிறேன்' எனத் தொலைபேசி உரையாடலில் கோணங்கி எனக்குச் சொல்லியிருக்கிறார். இதையெல்லாம் நோக்கும் போது அபத்தமாகத்தோன்றலாம். ஆனால் படைப்பு நிலையில் அநுபூதியடைந்துவிட்ட ஒருவரால் மட்டுமே இது சாத்தியமாகும். இதை விளங்கிக்கொள்ளவும் எமக்குப் படைப்பாக்க மனநிலை மேலோங்கியிருக்க வேண்டும்.

நவீனத்தமிழ் இலக்கியத்தில் பின் நவீனத்துவக் கோட்பாடு காலாவதியாகிவிட்டதெனப் பலரும் கருதிக் கொண்டிருக்கும் இத்தருணத்தில் அதைக் கடந்த நிலைப்புதினமாக 'த' வந்திருக்கிறதென்பதைக் குறிப்பிட்டேயாக வேண்டுமெனக் கருதுகிறேன்.

நூலின் பெயர் : த (நாவல்)

எழுதியவர் : கோணங்கி

முதற்பதிப்பு : 2012

பக்கங்கள் :816

வெளியீடு: அடையாளம், 1205/1 கருப்பூர்சாலை, புத்தா நத்தம் 621310, திருச்சிமாவட்டம், இந்தியா. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னவாயிற்று இவர்களுக்கு?



வைத்தியக் கலாநிதி
எம்.கே. முருகானந்தன்

காதல், காமம், புணர்வு, மகப்பேறு - இவை இல்லையேல் உயிரினத்தின் நீட்சி தடைப்பட்டுப் போகும். ஆனால் பாலுறவானது மகப்பேற்றிற்கானது மாத்திரமல்ல, அதற்கப்பாலும் அதன் மகத்துவம் தொடர்கிறது. மனமகிழ்ச்சியைக் கொடுக்கிறது. சுயமதிப்பை மேம்படுத்துகிறது, பிறர் மீதான அன்பிற்கும் காதலுக்கும் வலுவூட்டுகிறது, மிக மகிழ்ச்சியான ஆரோக்கியமான பொழுது போக்காகவும் இருக்கிறது.

. நெறி தவறி பாலியல் நோய்களைத் தேடி வாங்கும் உறவு பற்றி இங்கு நான் பேசவில்லை.


ஆனால், அண்மைய அறிக்கை ஒன்று பாலுறவு விடயத்தில் மனித சமுதாயத்திற்கு சிகப்பு சமிக்ஞை காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவியல் களரி

# செக்ஸ் வேண்டாத இளைய தலை முறை



## செயற்பாட்டில் தளர்வு

இன்றைய இளைய சமுதாயத்தினர் பாலுறவில் ஈடுபடுவது படிப்படியாகக் குறைந்து வருகிறதாம். முந்தைய தலைமுறையினரோடு ஒப்பிடும் போது இன்றைய தலைமுறையினர் ஒப்பீட்டளவில் குறைந்த அளவிலேயே செயலில் இறங்குகிறார்களாம். பார்க்கிறார்கள், பேசுகிறார்கள், ஆபாசமாகக் கிண்டலும் அடிக்கிறார்கள். வெளிப்படையாகக் கிலேசமின்றி அது பற்றிக் கலந்துரையாடவும் செய்கிறார்கள்.

## ஆனால் அதற்கு அப்பால்..?

பிரித்தானியாவில் செய்யப்பட்ட 'வாழ்க்கைமுறை மற்றும் பாலியல் மனப்பான்மை தொடர்பான கருத்து' ஆய்வில் இது கண்டறியப்பட்டது. ஆய்வைச் செய்தவர்கள் University College London ஐச் சேர்ந்தவர்கள்.

16 முதல் 44 வயதுள்ளோர் உடலுறவில் ஈடுபடுவது கடந்த இரு தசாப்தங்களாகக் குறைந்து வருகிறதாம். இப்பொழுது பெண்கள் சராசரியாக மாதத்தில் 4.8 தடவையும் ஆண்கள் சராசரியாக 4.9 தடவைகளும் ஈடுபடுகிறார்களாம். பத்து வருடங்களுக்கு முன் இது முறைப்படி 6.3 ம், 6.2 ம் ஆக இருந்ததாம். அதற்கு பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இதுவே முறையே 6.1ம் 6.4 ஆக இருந்திருக்கிறது.

சரி முதியவர்கள் என்ன செய்கிறார்கள்? முதியவர்கள் எனும்போது 65 முதல் 74 வயதானவர்களை இங்கு குறிக்கிறது. 'தேவாரம்' திருவாசகம், ஜபம், தியானம், ஸ்தோத்திரம் என முக்திக்கு வழி தேடிக்கொண்டிருப்பார்கள் என நினைக்கிறீர்களா?

இல்லை. அவர்களும் பாலுறவு வைக்கிறார்கள். வயதான பெண்கள் சராசரியாக மாதத்தில் 1.4 தடவையும் ஆண்கள் சராசரியாக 2.3 தடவைகளும் ஈடுபடுகிறார்களாம். அவர்கள் வயதிற்கு அது போதுமானதாக இருக்கலாம். முந்தைய தசாப்தங்களில் அவர்களது செயற்பாடு பற்றிய தகவல்கள் கிடைக்கவில்லை.

## காரணங்கள் என்ன?

இன்றைய இளைய சமுதாயத்தினர் பாலுறவில் ஈடுபடும் எண்ணிக்கை குறைந்து செல்வதற்கு காரணம் என்ன?

நவயுகத்தின் அவசரமும், நேரமின்மையும் பன்முகமான சமூக ஈடுபாடுகளும் காரணமாக இருக்கலாம் என்கிறார்கள். தொழிலைத் தக்கவைத்திருக்க வேண்டியுள்ளது. பணத்தின் தேவைக்கு எல்லையே அற்றுப் போய்விட்டது. இதனால் ஏனையவற்றில் ஈடுபடுதல் குறைந்திருக்கலாம்.

அடுத்த காரணம், நவீன தொழில்நுட்ப வசதிகளாகும்.

ஒருவரில் ஒருவர் ஈடுபாடுள்ள இளைஞனையும் யுவதியையும் ஒரு அறையில் அடைத்து வைத்தால் என்ன நடக்கும்? கட்டிப் பிடித்து முத்தம் கொடுத்து . எல்லாம் நடக்கும்.

ஆனால் அந்த அறையிலேயே இணைய வசதியுடன் ஐபாட் அல்லது டப்லட் கிடைத்தால் நிலைமை தலைகீழாக மாறிவிடும். டக் எனக் கிளிக் பண்ணி ஈ மெயிலை அல்லது மெசேஜைப் பார்ப்பார்கள். தனிப்பட்ட செய்திகள் முதல் உலக நிலைவரங்கள் வரை எதையும் தான் தப்பவிட்டு விடக்கூடாது என்ற ஆழ்மன உந்துதல் காரணமாகும். ஆம் கம்பியில்லாமலே எங்கணும் கிடைக்கும் இணைய வசதி மனிதர்களின் வாழ்க்கை முறையையே மாற்றிவிட்டது.

இப்பொழுது பாலுறவு கொண்டால் எவற்றையெல்லாம் இணையத்தில் இழக்க நேரிடும். தப்பவிடக் கூடாதவற்றைக் கவனித்துவிட்டு சற்று நேரம் தள்ளி உறவு கொள்ளலாமா என்று பலர் யோசிக்கும் அளவிற்கு நவீன தொடர்பு சாதன வசதிகள் மனித வாழ்விற்குள் ஆழ ஊடுருவிவிட்டன.

பேஸ்புக், வட்ஸ்அப், ருவீட்டர் போன்றவை எங்கெங்கோ சிதறிக் கிடக்கும் மனித உறவுகளை உள்ளங்கையிற்குள் நெருங்கிக் கொண்டு வருவது உண்மைதான். ஆனால், தத்தமது கணினிகளுக்குள்ளும் ஐபாட்களிலும் மூழ்கிக் கிடப்பதால் அருகில் இருக்கும் சகமனிதர்களுடனான உறவுகளில் பாரிய விரிசலை ஏற்படுத்தி விடுகின்றன.

இன்னுமொரு விடயத்தையும் சுட்டிக்காட்டலாம். பாலியல் இன்று மறைபொருளாக இல்லை. வெளிப்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டையாகப் பேசப்படுகிறது. மேலை நாட்டு ரி.வி. சனல்களில் (Girls, This is England) மட்டுமன்றி நீயா நானா போன்ற தமிழக தொலைக் காட்சி நிகழ்ச்சிகளில் கூட பேசப்படு கிறது. ஒரு காலத்தில் பேசக் கூசப் பட்ட விடயங்களான (LGBT - lesbian, gay, bisexual, and transgender) இப்பொழுது அலசி ஆராயப்படுகின்றன. கள்ளத் தொடுப்புகள் வெளிப்படையாக விவாதிக்கப்படுகின்றன.

## உணர்ச்சியை முந்தும் அறிவியல்

பாலுறவு விடயத்தில் முற்காலத் தில் இருந்த ஒளிவு மறைவு, இரகசி யத்தன்மை, பரஸ்பர அந்நியோன்யம் போன்றவை இன்று இல்லாமல் போய்விட்டன. அதிலிருந்த கள்ள நாட்டம் காணாதொழிந்துவிட்டது. மறுவார்த்தையில் சொல்வதானால் பாலுறவு என்பது உணர்வு சார்ந்த தாக இருந்தமை குறைந்து அதில் அறிவியல் அம்சம் மேலோங்கி வரு கிறது என்று சொல்லலாம். இவையும் பாலுறவில் நாட்டம் குறைவதற்கு காரணமாகலாம்.

மிகையான எதிர்பார்ப்புகளும், அதீத சிந்தனைகளும் முன்பு வெளிப் படையாகப் பேசத் தயங்கிய விட யத்தை கூறுபோட்டு பகுத்தறிய விளையும் அறிவியல் தேடல்களும், செயலூக்கத்தைப்பின்தள்ளிவிட்டது.

'காமம், பாலுணர்வு, புணர்தல் போன்ற செயற்பாடுகள் உயிரினத் தின் அடிப்படையான மிருக இயல்பு. மனிதன் கூர்ப்பில் மிகவும் மூத்த உயி ரினம். தனது மூளைத்திறனில் தங்கி யிருப்பவன் கீழே மறைந்து கிடக்கும் அசிங்கத்தை நாடுவது அவனது அறி வாற்றலுக்கு இழுக்கு' போன்றதான மறைமுக உணர்வும் இளைய சமுதா யத்தில் மேலோங்கி வருகிறது. இவையும் அவர்களது பாலியல் செயற்பாட்டை பின்தள்ளுவதாகக் கொள்ளலாம்.

காலையில் நல்லதா, கும்மிருட்டில் நல்லதா, மேலேயா கீழேயா உச்சம் கிடைக்கும், கண்களை மூடியிருப் பதா, விழித்திருப்பதா, கால்களை அகட்டி வைப்பதா, ஒடுக்குவதா? இவை போன்ற கேள்விகளுக்கான விடைகளை இணையத்தில் தேடுவ தும், டம்ளரிலும் ருவீட்டரிலும் நண் பர்களிடம் விவாதிப்பதுமாக இருப் பார்கள்.

பாலுறவுச் செயற்பாடு பற்றிய மனப்பதற்றத்தை இவை கிளறிவிடு கின்றன. எல்லாவற்றையும் சரிசெய் துகொண்டு 100 சதவீத பெறுபேறு கிட்டக்கூடிய நிலையில்தான் உட லால் சுகிக்க வேண்டும் என எண்ணி னால் அது நடக்கக்கூடிய காரியமா?

எனவேதான் மனிதனின் இயல் பான உயிரியல் செயற்பாடுகளை அறிவியல் ரீதியாக நுணுகி ஆராயப் புகுவது தோல்வியிலேயே முடிகி றது. இன்னொரு சகமனிதரிலிருந்து பெறக்கூடிய இன்பங்கள் எவை என் பதையும், அவற்றின் பலாபலன்க ளையும், அதை எப்படிச் செய்தால் தனக்கும் மற்றவருக்கும் பூரண திருப்தி கிட்டும் என்பதை இணையங் களில் தேடிக்கொண்டிருந்தால் கணி னியோடும் ஐபாட்டோடும் புணருவ தில்தான் முடியும்.

மொத்தத்தில் பார்த்தால் இன்றைய இளைய தலைமுறையினர் செக்ஸ் பற்றி அதிகமாகவே சிந்திக்கின்றனர். ஆனால், வேலையால் வீடு திரும்பி யதும் ரி.வி. பார்க்கிறார்கள், இணை யத்தில் மூழ்குகிறார்கள். எல்லாம் முடிய கண்கள் சுழல சோர்ந்து படுத் துவிடுகிறார்கள். நேரமிருந்தால் மட் டுமே செக்ஸ் உறவு என்றாகிவிடுகி றது.

## ஆய்வு தெளிவுறுத்தும் வேறு விடயங்கள்

பிரித்தானியாவில் செய்யப்பட்ட ஆய்வானது இளைஞர்களது பாலி யல் நாட்டம் பற்றி மட்டுமன்றி, ஒட்டு மொத்த சமூகத்தின் பாலியல் சம்பந்தமான வேறு பல விடயங்க ளையும் சுட்டிக்காட்டுகிறது.

'மிக இளவயதிலேயே ஆரம்பித்து விடும் செக்ஸ் உறவுகள் முதுமையி லும் (74வயது) தொடர்கிறது.

'தன்னினச் சேர்க்கையை ஏற்றுக் கொள்ளும் தன்மை அதிகரித்து வரு கிறது. அதேநேரம் திருமணத்திற்கு அப்பாலான பாலுறவை ஏற்கும் தன்மை குறைந்துவருகிறது.

'பாலியல் உறவுப் பிரச்சினைகள் இருபாலாரிலும் 10 இல் 4 பேருக்கு இருக்கிறதாம். இருந்தபோதும், 10 இல் ஒருவரே அதனால் கவலைப்படு வதாகவோ மனஉழைச்சலுக்கு ஆளாவதாகவோ கூறினார்கள். பாலு றவில் நாட்டமின்மையையே 15 சதவீதமானவர்களின் முக்கிய பிரச்சி னையாக இருந்திருக்கிறது. அதிலும் பெண்கள் ஆண்களை விட இரு மடங்காக பாலுறவு நாட்டமற்றுக் காணப்பட்டார்கள்.


'விருப்பத்திற்கு மாறாக உடலுறவு வைக்க வேண்டிய நிலை பலருக்கு ஏற்பட்டு இருந்திருக்கிறது. பெண்கள் அதிக பாதிப்பிற்கு ஆளான போதும் ஆண்களும் தப்பவில்லை. 10 பெண் களில் ஒருவர் இஷ்டமின்றி உடலு றவு வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்த அதேநேரம், 70 ஆண்களில் ஒருவருக்கு அத்தகைய நிலை ஏற் பட்டதாம். எந்தப் பெண்ணைக் கண் டாலும் புணரும் வேட்கையோடு திரி யும் எமது சமூகச் சுழலோடு ஒப்பிடும்போது இத்தகவல் ஆச்சரி யம் அளிக்கிறது.

'பிரித்தானியாவில் ஏற்படும் கருத் தங்கல்களில் ஆறில் ஒரு பங்கு எதிர் பாராததாக (திட்டமிடப்படாததாக) இருக்கிறது. மற்றொரு விதத்தில் பார்த்தால் 60 பெண்களில் ஒருவர் எதிர்பாராதவிதமாக கருத்தங்கலுக்கு ஆளாகிறார். கருக்கலைப்பு சட்டபூர் வமாக இருக்கும் பிரித்தானியாவில் இது பாரிய சிக்கலை ஏற்படுத்தாது.

ஆனால் மதம், புனிதத்துவம், கண் ணியம் என மேடைக்குமேடை பேசி க்கொண்டு இருளில் பெண்களைக் குதறி எடுக்கும் நம்நாட்டில் சட்டவி ரோத கருக்கலைப்புகளால் பலியா கும் பெண்களின் எண்ணிக்கை தூய் மைவாதிகளின் கண்ணில் படுவ தில்லை. சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வன்புணர்வு போன்றவற் றால் கர்ப்பமுறும் பெண்களின் துய ரம் கவனத்தில் கொள்ளப்படாத ஒரே புனித பூமி சிறிலங்காவாகத்தான் இருக்கும்.

என்ன சொல்ல என்ன சொல்ல இன் னும் சொல்லி நீங்கள் அழ.. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ச.இராகவன்

## பனுவல் பார்வை

# 'த' எனும் திரவ நிலைப்புதினம்

நவீன தமிழ்ப்புனைகதை வெளியில் 'மதினிமார்களின் கதை' தொடங்கி அண்மைய 'த' வரை உருவ அடிப்படையிலும் உள்ளடக்க அடிப்படையிலும் கோணங்கியின் படைப்புகள் தனித்துவமானவை என்பதைக் குறிப்பிட்டேயாக வேண்டும். கோணங்கி ஒரு வகை மாதிரிக் கதை சொல்லியல்ல. அவர் கதைப்புனையின் எந்தவொரு கட்டத்திலும் தேங்கிவிடாமல் தவளைப் பாய்ச்சலை நிகழ்த்திக் கொண்டேயிருப்பவர். தேர்ந்த வாசகனை எளிதில் மயக்கிவிடக்கூடிய படிமமொழி கோணங்கியுடையது. இதனால் மேலோட்டமான வாசிப்பிலிருந்து கோணங்கியின் புனைகதைகள் எப்போதுமே நீண்டதூரம் விலகியிருப்பவை. பொதுவாகக் கோணங்கியின் புனைகதைகள் இரு ண்மையானவை என்றொரு விமர்சனம் 'பட்டுப்பூச்சிகள் உறங்கும் மூன்றாம் ஜாமம்' வெளிவந்ததிலிருந்து முன்வைக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. கோணங்கியொன்றும் விளங்காத மொழியில் எழுதிவிடவில்லை. தமிழில்தான் எழுதுகிறார். அது சாதாரண வாசிப்பிற்கு கண்ணாமூச்சிகாட்டும் மொழி. அவ்வளவுதான். வேறொன்றுமில்லை. அதற்காக இருண்மை என்ற ஒற்றை வாக்கியத்துடன் நொண்டிச் சமாதானம் சொல்லிவிட்டு நரித்துறவு கொள்வது ஒரு போதும் தீர்வாக அமைத்துவிடாது. ஆழ்ந்த வாசிப்பு மட்டுமே இதற்குத் தீர்வாக அமையும்.

ஒருவகையில் கோணங்கியின் புனைகதைகள் வாசிப்பில் அநுபூதி நிலைக்கு இட்டுச் செல்லக்கூடியவை. இவை விளங்கிக் கொள்வதற்குப் பதிலாக உணர்ந்து கொள்வதையே மையப்படுத்துபவை. ஓர் எளிமையான எடுத்துக்காட்டை இங்கே தர வேண்டியுள்ளது. ஒரு தனித்த இசைக் கோர்வையை வரிகளால் இட்டு நிரப்பிய பின் பாடலாகக் கேட்கலாம். சங்கீதத்தில் ஆழ்ந்த ஞானமில்லாதவர்களுக்கும் பாடல் விளங்கும். ஆனால், வரிகளால் இட்டு நிரப்பப்படாத இசைக்கோர்வையைக் கேட்கும் போது சங்கீதத்தில் ஆழ்ந்த ஞானமுள்ளவர்களால் மட்டுமே அதிலிருந்து பொங்கும் இசைப்பிரவாகத்தை உணரமுடியும். கோணங்கியின் புனைகதைகளும் ஓர் இசைக்கோர்வையிலிருந்து பொங்கும் இசைப்பிரவாகத்தை ஒத்ததுதான். வாசிப்பில் ஒருவித மயக்கத்தை ஏற்படுத்தி ஒரு மாய யதார்த்த உலகினைப் பரிச்சயமாக்கி வாசகனை அநுபூதிநிலைக்கு இட்டுச்செல்லக்கூடியவை கோணங்கியின் புனைகதைகள் எனலாம். ஆழ்ந்து நோக்கினால் சமகால நவீனப்புனைகதை வெளியில் கோணங்கி உச்சத்தைத் தொட்டுவிட்ட ஒரு கதை சொல்லி. அநேகர் புனைகதைகளை எல்லைக்குட்படுத்த முனைகின்றனர். இந்த எல்லைப்படுத்தல்தான் இருண்மை என்பதைத் தோற்றுவிக்கிறது. இதனால் மாற்றுக் கதை வெளிக்குச் சாத்தியமிருப்பதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடிவதில்லை. ஆனால், புனைகதைகளை எப்போதுமே வரையறுத்துக் கூறிவிட முடியாது. அவை எல்லையற்று விரிவடையக் கூடியவை. அந்த எல்லையற்ற விரிவின் ஒருபகுதிதான் கோணங்கியின் புனைகதைகள். அவர் எப்போதுமே புனைகதைகளைத் தற்புதுமையுடன் சிந்திக்கிறார்.




கோணங்கியின் படைப்புலகம் குறித்து அவரது சக பயணியான லக்ஷ்மி மணிவண்ணன் 'எண்பதுகள் வரையிலான நவீன இலக்கியத்திற்குப் பின்னர் நிகழ்ந்த படைப்புச்சவால் நிறைந்த பிரமிப்பூட்டும் மொழி கோணங்கியுடையது. அறிவு, விஞ்ஞானம், காலனிய அடிமைத்தனம் ஆகியவற்றில் மயங்கிக் கிடந்த தமிழ் மொழிக்குக் கோணங்கியின் எழுத்துவகை புதிய அர்த்தங்களை உருவாக்கியது. உரை இலக்கியத்தில் தமிழில் இதுவரை அறிய இயலாத, அறிமுகமில்லாத, பிறமொழிகளிலும் காணக் கிடைக்காத நடையை உருவாக்கியவர் கோணங்கி. இன்றைய கவிஞர்கள், உரைநடை ஆசிரியர்கள், அறிஞர்கள் எனப் பல தரப்பினருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணங்கியின் எழுத்து பெரும் விந்தையை ஏற்படுத்துகின்றது. (புரிதல் தொடர்பான அடிப்படைச்சர்ச்சைகளுக்கு அப்பாலும்) அகத்தின் பாதையை நேர்கோடாகப் புரிந்து கொண்டதற்கு மாறாக அது பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே தொடங்கி மயக்கமடைந்த ஸ்தாபனமாகத் துயரம், எதிர்ப்பு, பழி, குருதி, உயிர், நினைவு மற்றும் பலவாக எப்படியுள்ளது என்பதை அறிவதில் கோணங்கியின் படைப்புகள் ஆர்வங்கொள்பவை. எதிர்காலத்தில் தொன்மத்தைத் திரட்டும் வரலாறு, சமூகவியல், உளவியல், அறிவியல் சாதனங்கள் போன்றவை கோணங்கியின் கோணங்களில் படைப்புகளில் கலக்கமடையக்கூடியவை. கேள்விக்கு உள்ளாக்கப்படுபவை. இன்று உருவாகியிருக்கும் 'பெருமனிதனின்' ஒற்றைத் தன்மைக்குக் கோணங்கியின் படைப்புகளில் இடமில்லை. சாதாரண மனிதர்களின் மரணம், துயரம், பிரபஞ்சம் ஆகியவற்றிலேயே தொடர்ந்து கோணங்கியின் படைப்புகள் நிலை கொள்கின்றன. அறிவு என அறியப்பட்டிருக்கும் அக ஸ்தாபனத்துக்கு எதிரான படிமமொழியையும் புனைவு மொழியையும் கோணங்கியின் படைப்புகள் தேர்வு செய்து கொள்கின்றன. இறந்துவரும் வார்த்தைகளை அர்த்தமுள்ளதாக்கும் இவருடைய படைப்புகள் மனிதனின் கண்டுபிடிப்பான அனைத்துவகை ஸ்தாபனர்களுக்கும் எதிரானவை. ஒழுங்கு, சட்டம் மேலும் மதம் என இயங்கும் அகத்தினுள்ளே காலக் குழப்பத்தையும் துரயத்தையும் சாட்சியாக்குபவை, எனக்குறிப்பிட்டுள்ளமை மனங்கொள்ளத்தக்கது.


இந்த அம்சங்களைக் கொண்டு தான் நாங்கள் கோணங்கியின் 'த' என்ற புதினத்தைப் பின்தொடர்வது பொருத்தப்பாடானதாயமையும். இப்புதினத்தின் 816 பக்கங்கள் வழியாகவும் ஒரு கட்டற்ற புனைகதை வெளி நமக்கு அறிமுகமாகிறது. இதை மிதக்கவிடப்பட்ட கதை வெளியென்றோ திரவமாக்கப்பட்ட கதை வெளியென்றோ குறிப்பிடுவதில் தவறில்லை. அதாவது இதுவரை திண்மமாக்கப்பட்ட கதைவெளிக்குப் பரிச்சயமடைந்திருந்த வாசகனைக் கோணங்கி திரவமாக்கிய கதைவெளிக்கு அழைத்துச் செல்கிறார். எளிமையாகச் சொன்னால் திண்மக்கதை வெளியென்பது ஏதோவொரு குறிப்பிட்ட வடிவத்திற்கு எல்லைப்படுத்தப்பட்டிருக்கும். ஆனால், திரவக் கதை வெளிக்கு குறிப்பான வடிவம் எதுவுமில்லை. வாசகன் எதைக்கருதுகிறானோ அதுதான் வடிவமாக இருக்கும். 'த' வெளிப்படுத்தும் இன்னொரு பரிமாணம் மகாவம்சம் மீதான மறுவாசிப்பென்பது பிரதானமாகக் கவனத்தில் கொள்ளத்தக்கது. இக்கதைவெளியில் ஈழத்தின் ஆதிக்குடியான நாகர் இனத்தைத் தமிழினமாகப் படிமப்படுத்தும் அழகியல் முக்கியமானது. இதிலும் நாகா இளவரசி இரண்டாங்கிளிமாத்தாள் மற்றும் இராவணம் சூதுப்பலகை போன்று பல்வேறு வலுவான படிமங்களைக் கதைவெளியெங்கும் மிதக்கச் செய்து கோணங்கி மாயம் நிகழ்த்துகிறார்.

சமகாலம் வரையான ஈழத் தமிழினத்தின் துயரும் அவலமும் 'த' வில் கவிந்துகொண்டேயிருக்கின்றன. இப்புதினத்தில் தனுஷ்கோடி துயர் கவியும் ஒரு பெரும் படிமமாக உருக்கொள்கிறது. ஈழத்திலிருந்து படகுகளில் தப்பிவந்து இறங்கும் அகதிகளின் அனல் மூச்சினால் நிறைந்திருக்கிறது தனுஷ்கோடி 'த' வில் கூட்டிணைவாகவே ஈழத்தமிழரின் துயரங்கள், நெருக்கடிகள், அழுத்தங்கள் மிதந்து கொண்டிருக்கின்றன. 'மணிமேகலை ஆடையுலர்த்திய பாறை', 'இராவணம் சூதுப்பலகை', 'தனுஷ்கோடிக்குப் படகுகளில் வந்துசேரும் ஈழ அகதிகளின் அனல் மூச்சு, கண்ணீர்', 'ஆர்யா கபாலநூலகத்தில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் கபாலங்கள்' எனச் சகலதுமே ஈழத் தமிழர்களின் கூட்டிணைவான துயர வரலாற்றைத்தான் படிமப்படுத்துகின்றன. 'த' என்பது குறிப்பதென்ன? தமிழர் (ஈழத் தமிழர்). தமிழர் என்றால் துயரம் என அர்த்தப்படுத்திக் கொள்ளலாம். வகை மாதிரிக்காக 'த' புதினத்திலிருந்து ஒரு பகுதியை இங்கே தருகிறேன். '...மருத்துவர் குறிப்பேட்டில் நகரும் நாடியின் வரைபடச்சுருளுக்குள் விழிபிதுங்கித் தூக்கமற்றவளின் பால்யம். ஆஸ்பத்திரி ரொட்டி எலிசுவைத்த மிச்சத்தில் கறுப்பு எறும்புக் கீறலில் புகுந்த வழி சாவு மெல்ல மெல்ல நுழைவதற்கு முன் மாலுமியர் விடுதிவாசத்தைச் சொல்லி விட இருக்கும் மணலாகிவிட்ட ஒரு 'த'. நகரம் நூற்றாண்டுகளாய் உதிர்ந்த மணல் நூலகத்தில் தனுவும் எல்லாளரும் தனுஷ்கோடி விநாசங்களினூடே கடல் தாண்டிக் காலக் கணக்கிற்கப்பால் இங்குவரும் சம்பவங்களும் பல இருக்கின்றதென்று பறைவளையங்களும் கனாநிலையங்களும் சந்திர ஓரையில் இருக்கின்றனவே. தாபதக்கோடியர் இருட்டுப்புத்தகத்தில் முகந்தெரியாத துருப்புகள் இரும்புத் தொப்பிக்கு அடியில் உள்ள நரியின் கண்களுக்கு நேராகப் படைவரிசையில் சுட்டுத் தள்ளப்படும் நிராயுத பாணிகள் எதிராக நடக்கப்புறப்பட்டான்மைப் பிரதியில் இருந்து. கண்களை வில்லாகத் தீட்டுகிறாள். ஒப்பனை மேஜையில் மறைவுமையிட்டுக் கண்ணாடியில் விடைபெறுகிறாள். மரண தண்டனைக்குப் பேர்போன மகாவம்ச ஜாதகப் பேய்களின் நிழல் பின்தொடர்கிறது. சிவப்புக் கம்பளத்தில் உருளும் ரோஸ்! ஆயினும் தீ முளைத்த நூலகத்தை அறிவீர்களா? கடல்புத்தகம் -அஃப்ரில் 1919. குருதிப்புத்தகம் நிலவு நாழிகை ஏடுதாங்கி அந்த இளவரசி சூர்ப்பதனு பாங்குடன் இங்கு வந்தாள், இலக்குவன் மூக்கு முலை அரிந்த அலட்சியத்தால் கடல் தாண்டி அழுகிறாள் அண்ணலே...., இராவணம் நூலில் பங்கப்பட்ட முலை ஒழுகும் பாலினைப் பூசித்தன் உதிரம் நிலம் மெழுகித் தாய்ப்பால் கசிந்த ஈர்க்கில் சிசுக் குணங்கல் கீறல் விழுந்த ஈழப்புத்தகத்தில் எல்லாளன் குமாரத்தி சூர்ப்பதனு தென்மராட்சியில் தாலாட்டிய ஏணைவிட்டுத் தவழும்பிள்ளை தத்தி நடைபயின்று இராஜ இரட்டணம் ஆஸ்த்மா அவஸ்தைகளில் மூழ்கிய தந்தை மார்மேல் சிறுமிபாத தூளி முத்தம்பட்ட

(57ஆம் பக்கம் பார்க்க...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தயானி



## பனுவல் பார்வை

# ஒரு குடையின் கீழ் உலகத் தமிழினம்

ஈழத்து தமிழ்ச் சூழலில் தமிழ், தமிழர் தொடர்பில் வெளி வரும் பதிவுகளை ஆவணமாக்குவ தில் தனது வாழ்க்கையின் பெரும் பகுதியை செலவிட்டவர் குரும்ப சிட்டி இரா.கனகரத்தினம். இவர் கடந்த காலங்களில் ஏற்பட்ட அரசி யல் நெருக்கடிகள் மத்தியிலும் பல் வேறு துயர்களுக்கும் நெருக்கீடுக ளுக்கும் மத்தியிலும் இந்த அரிய




முயற்சியில் ஈடுபட்டு வந்தவர். இத னால் பல்வேறு சொல்லொணாத் துய ரங்களையும் இழப்புகளையும் சந்தித் தவர். இவர் தற்போது புலம்பெயர்ந்து தமிழ் நாட்டில் வாழ்ந்து வருபவர். அங்கேயும் ஆவணமாக்கும் முயற்சி யில் தீவிரமாக ஈடுபட்டு வருபவர். இதனைத் தனது தமிழ்ப் பணியாகக் கருதியே செயற்படுபவர்.

உலகத் தமிழர்களை ஒரு அமைப் பின் கீழ் கொண்டுவரவேண்டும். அவர்களின் தாய்மொழியான தமி ழை, தமிழ்ப் பண்பாட்டை அவர்கள் வாழும் நாடுகளில் காப்பாற்றிக் கொண்டு அவர்களை தமிழர்களாக வாழவைக்க வேண்டும். உலகத் தமி ழரிடையே ஓர் இணைப்பை ஏற்ப டுத்தி வலுவும் திறமையும் கொண்ட இனமாக உலகம்பரப்பி தலைநிமிர வேண்டுமென்ற கொள்கைகளை முன்னிறுத்தி 'ஒரு குடையின் கீழ் உலகத் தமிழினம்' என்னும் நூலை குரும்ப சிட்டி கனகரத்தினம் நமக்கு ஆக்கித் தந்துள்ளார்.


இந்த நூலில் சிங்கப்பூர், மலேசி யா, மியன்மார் (பர்மா), அந்தமான், நிக்கோபார், ரினிடாட் மற்றும் டுபாக்கோ, மார்த்தினிக், குவாட் லோப், சிசெல்ஸ், பிஜித் தீவுகள், தென்னாபிரிக்கா, இலங்கை, மொறீசி யஸ், றீயூனியன், இந்தோனேசியா முதலான நாடுகளில் வாழும் தமிழர் கள் பற்றிய தகவல்களையும் தொகுத் துத் தருகின்றது. மேலும் இந்த நூலில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தின் தோற்றம், 1974 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற உல கத் தமிழாராய்ச்சி மகாநாடு பற்றிய மனப்பதிவுகள் முதலானவற்றையும் தொகுத்துள்ளது.


கண்டியில் இருந்து 'செய்தி' என்ற ஒரு வார இதழ் வெளிவந்துகொண்டி ருந்தது. அந்த இதழில் உலகத் தமிழி னத்தைக் காப்பாற்ற ஓர் இயக்கம் தேவை என்பதற்காக கருத்தாடல் இடம்பெற்றது. 30.01.1972 செய்தி இதழில் 'உலகத் தமிழினத்தைக் காப் பாற்ற ஓர் இயக்கம் தேவை' என்ற கனகரத்தினத்தின் கட்டுரை இடம் பெற்றது. அதைத் தொடர்ந்து வண பிதா தனிநாயகம் அடிகளாரின் கரு த்து, பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களின் கருத்து இடம்பெற்றன. தமிழாராய்ச்சி மகாநாட்டை ஒட்டி இவ்வாறான இயக்கம் தோன்றுவதற் கான நியாயங்கள் வெளிப்பட்டன. இதுபற்றிய செய்திகளோ இந்த நூலில் இடம்பெற்றுள்ளன. தமிழா ராய்ச்சி மகாநாடு கொழும்பிலா? யாழ்ப்பாணத்திலா? என்ற பிரச் சினை உருவான பின்புலத்தையும் ஒரு கட்டுரையில் முன்வைக்கப்பட் டுள்ளது. இதைவிட உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க முதலாவது மகா நாடு சென்னை, மொறீசியஸ் தீவில் நடந்த உலகத் தமிழ்ப் பண்பாடு மகா நாடு 1980 தொடர்பிலான செய்தி களும் இடம்பெற்றுள்ளன.

தமிழர்கள் எங்கெங்கெல்லாம் பர ந்து சிதறி வாழுகிறார்கள் என்பது பற் றிய தகவல்கள் தொகுக்கப்பட்டுள் ளன. தமிழ், தமிழர்பற்றி இயக்க ரீதி யில் சிந்திப்பதற்கும் செயற்படுவ தற்கும் உந்துதலைக்கொடுக்கும் வகையில் இந்நூல் உருவாக்கம் பெற்றுள்ளது. தமிழில் ஆவணப்ப டுத்தல் பண்பாட்டின் சிறப்புகளைப் புரிந்துகொள்வதற்கும் குரும்ப சிட்டி இரா.கனகரத்தினம் என்ற பெரிய வரை அறிந்துகொள்வதற்கும் இந் நூல் துணை செய்கிறது.

ஒரு நூற்றாண்டு (1890- 2011) இலங்கைத் தமிழர் வரலாறு என்ற பெரும் நோக்கை மைக்ரோ பிலிம்க ளில் (நுண்படச் சுருள்களில்) பதிவு செய்வதற்கான அவசியத்தை வலியு றுத்தும் வகையில் ஒரு சிறு பதிவு-ம லர் ஒன்றையும் வெளியிட்டுள்ளார். இந்த முயற்சியில் தொடர்ந்தும் ஈடு பட்டு வருகின்றார். நம்மிடையே தொடர்ந்து இந்த வரலாற்றுப் பதி விற்கான அறிவார்ந்த முயற்சிகளில் ஈடுபடுவதற்கான தேவைப்பாட் டையும் வலியுறுத்துகிறது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# தெனாலிராமன்

மயூரா

சமீப காலங்களில் தமிழ் சினிமாவில் புதிய இளம் கலைஞர்களின் வருகை பல்வேறு புத்தாக்கமான மாற்றங்களுக்கு காரணமாகியுள்ளது. நட்சத்திர அந்தஸ்து பெற்ற பெரும் நடிகர்களின் / இயக்குநர்களின் சமீபத்திய படங்களை விட சிறுமுதலீட்டில் கதையை நம்பி புதியவர்களை வைத்து உருவாக்கப்படும் படங்கள் பெரும் வரவேற்பைப் பெறும் சூழல் உருவாகியுள்ளது.

தமிழ் சினிமாவில் வடிவேலுவின் வருகை வித்தியாசமான கதைக்களங்களுக்கு காரணமாயிற்று. நகைச்சுவையின் மூலமும் குணச்சித்திர நடிப்பின் மூலமும் தனியிடத்தை குறுகிய காலத்தில் உருவாக்கியிருக்கிறார். கடந்த தமிழக சட்டசபைத் தேர்தலில் தி.மு.க.விற்கு ஆதரவாக வடிவேலு களமிறங்கி பிரசாரத்தில் ஈடுபட்டார். இதனால் சினிமாவில் இருந்து ஓரங்கட்டப்பட்டார். மீண்டும் ஒருவாறு திரைக்களத்திற்கு வந்துள்ளார்.

வடிவேலுவின் மறுபிரவேசமாக அமைந்திருக்கும் தெனாலிராமனின் புதிய இயக்குநர் யுவராஜ் தயாளன் பாதுகாப்பான பாதையைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். நகைச்சுவை கலந்த அறிவு, சாகசம் என்பதை வைத்து வடிவேலுவின் பாத்திரத்தை வடிவமைத்துள்ளார். அவர் அதற்குத் தோதாக தெனாலிராமன் பாத்திரத்தைத் தேர்வுசெய்திருக்கிறார்.

வெகுளித்தனம் கொண்ட ஒரு அரசன். அந்த வெகுளித்தனத்தைச் சாதகமாக்கி நாட்டைச் சீரழிக்கும் நயவஞ்சக அமைச்சர்கள். இவர்களுக்கு இடையில் இன்னொரு அமைச்சராக வரும் தெனாலிராமன் தன் சமயோசித புத்தியால் நாட்டையும் மக்களையும் எவ்வாறு மீட்கிறான் என்பதை நகைச்சுவையாகச் சொல்லும் படம்தான் 'தெனாலிராமன்'. அரசனாகவும் தெனாலிராமனாகவும் வடிவேலு நடித்திருக்கிறார்.




அரசனின் ஒன்பது அமைச்சர்களில் எட்டுப் பேர் சீன அரசின் கைக்கூலிகள். கையூட்டு பெற்றுக்கொண்டு நாட்டைச் சீன வியாபாரத்துக்குத் திறந்துவிட ஒப்புக்கொள்கிறார்கள். அமைச்சர்களில் ஒருவர் மட்டும் நாட்டின் நலன் கருதி இதை எதிர்க்கிறார். அவரைச் சீன ஆட்கள் கொன்றுவிட, அந்த இடத்திற்கு வருகிறான் அகடவிகட தெனாலிராமன்.

மக்கள் விரோத ஆட்சி நடத்திவருவதாக மன்னன் மேல் கோபம் கொண்டு அவனைக் கொல்லும் நோக்குடன் செயல்படும் தலைமறைவுக் கூட்டத்தைச் சேர்ந்தவன் தெனாலிராமன். இவன் கொஞ்சம் கொஞ்சமாக மன்னனின் நன்மதிப்பைப் பெறுகிறான். மன்னன் மோசமானவன் அல்ல என்பதையும் அமைச்சர்களே விலக்கப்பட வேண்டியவர்கள் என்பதையும் தெரிந்து கொள்கிறான். கூடவே மன்னன் மகளையும் காதலிக்கிறான்.

சீனர்களின் வியாபாரத்திற்கு அனுமதி வழங்கப்படுகிறது. அதனால் உள்ளூர் வியாபாரிகள் பாதிக்கப்படுகிறார்கள். நாடெங்கும் பட்டினி பெருகுகிறது. ஆனால் அப்பாவியான அரசன், நாடும் மக்களும் நலமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதாக நம்புகிறான். தன் 36 மனைவிகள், 52 குழந்தைகளுடன் சந்தோஷமாக இருக்கிறான்.

நாட்டின் நிலையை அரசனுக்குப் புரிய வைத்து நாட்டைச் சீராக்க தெனாலிராமன் முயல்கிறான். தெனாலிராமனின் முயற்சிகளை முறியடிக்க அமைச்சர்கள் சதித் திட்டம் தீட்டுகிறார்கள். தெனாலிராமன் எப்படி அந் தச்சதியை முறியடித்து நாட்டைக் காப்பாற்றுகிறான் என்பதே மீதிக் கதை.

நமக்குத் தெரிந்த சரித்திரத் தெனாலிராமன் கிருஷ்ண தேவராயர் கதை அல்ல இது. இருந்தாலும் புகழ் பெற்ற தெனாலிராமன் பாணியை வைத்து ஹீரோ தெனாலிராமனின் திறமையைச் சொல்லியிருக்கிறார்கள். காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் துணைக் கதைகள் நமக்குத் தெரிந்தவை (உதாரணமாக பானைக்குள் யானை வரும் கதை) என்பதால் அவை அதிக சுவாரஸ்யம் தரவில்லை. அதுபோல பிரதான திரைக்கதையினூடே செருகப்படும் தெனாலிராமன் கதைகளும் தடைக் கற்களாகின்றன. தெரிந்த கதையை படமாக்கும் போது ஏற்படும் சவாலை முன்கூட்டியே தெரிந்துவைத்திருக்க வேண்டும். இந்த வகையில் இயக்குநரின் கற்பனையும் அறிவும் மற்றும் திட்டமிடலும் போதாமையாக உள்ளது.

அப்பாவி மன்னன், அந்நிய வாணிபத்தின் தாக்குதல் என்பவை 23ஆம் புலிகேசியிலேயே கையாளப் பட்டவைதான். மன்னனுக்கு எதிரான புரட்சி, அதில் மன்னனே பங்கு பெறுவது என்பவை எம்.ஜி.ஆரின் அரச கட்டளையில் வந்த விடயங்கள். அவற்றை வடிவேலுவுக்கு ஏற்ற விதத்தில் மாற்ற யுவராஜ் முயற்சி செய்திருக்கிறார். அந்த வகையில் பாராட்டலாம்.

பெரும் இடைவெளிக்குப் பின் வந்திருக்கும் இந்தப் படத்தில் தன்னை நிரூபித்துக்கொள்ள வடிவேலு ரொம்பவே மெனக்கெட்டிருக்கிறார். நவரசங்களையும் வெளிப்படுத்த வேண்டிய பாத்திரம். மற்ற விடயங்கள் பரவாயில்லை. கதைகளை நிகழ்த்துவதில் வடிவேலுவின் திறமை பளிச்சிடுகிறது. 'பானைக்குள் யானையைப் போடு' என்று கேட்கும் காட்சியில் குழந்தைகள் குதூகலம் அடைவார்கள். சீரியஸாக முகத்தை வைத்துக் கொண்டு அறிவுரை சொல்லுவது அவருக்கு ஒத்துவரவில்லை. சமகால அரசியல் நெடி சற்றுத் தூக்கலாகவே இருக்கிறது.



மீனாட்சி தீட்சித்துக்குப் பெரிய பாத்திரம் இல்லை என்றாலும், தான் வரும் காட்சிகளைத் தன் அழகால் பிரகாசமாக்கிவிடுகிறார். தேவதர்ஷினி, மனோபாலா உள்ளிட்ட பிற நடிகர்கள் தேவையானதை நிறைவாகச் செய்திருக்கிறார்கள். ஆரூர்தாஸின் வசனங்கள் சில இடங்களில் தெறிக்கின்றன. வண்ணமயமான செட் கண்களுக்குக் குளிர்மை தருகிறது. அதை ராம்நாத் ஷெட்டி சிறப்பாக ஒளிப்பதிவு செய்துள்ளார். டி. இமானின் ஓரிரு பாடல்கள் பரவாயில்லை.

தெனாலிராமன் படம் பெரிய இடைவெளிக்குப் பிறகு வடிவேலு நடித்திருக்கும் படம் என்பதால் உருவான பெரும் எதிர்பார்ப்பை இப் படம் ஓரளவு பூர்த்திசெய்கிறது. வடிவேலுவின் முன்னைய திரைப்படங்களில் ஒன்றான இம்சை அரசனுடன் ஒப்பிடும் போது இப்படம் சுமாராகத் தான் உள்ளது.

ஆரம்பத்தில் தமிழில் முழுநீள சரித்திர நகைச்சுவைப் படங்கள் வந்திருக்கின்றன. பம்மல் சம்பந்த முதலியாரின் சந்திரஹரி (1947) ஒரு முழு நீள நகைச்சுவைப்படம் வெளிவந்தது. இப்படத்தில் என்.எஸ். கிருஷ்ணன், டி.ஏ.மதுரம் போன்றோர் நடித்திருந்தனர். கே.எஸ்.மணி இப்படத்தை இயக்கி இருந்தார். இப்படம் உண்மையையே பேசும் ஹரிச்சந்திரனின் தலைகீழ் பாத்திரமாக பொய்யே பேசும் சந்திரஹரி என்னும் பாத்திரத்தை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்டிருந்தது. அதேவருடத்தில் வெளியான அலிபாபாவும் 40 திருடர்களும் ஒரு வரலாற்று நகைச்சுவைப்படம். இப்படத்திலும் என்.எஸ்.கிருஷ்ணனும் டி.ஏ.மதுரமும் நடித்திருந்தார்கள். பின்னர் 1971இல் வெளியான சோவின் முகம்மது பின் துக்ளக் ஒரு அரசியல் வரலாற்று நகைச்சுவைத் திரைப்படம். இப்படத்திற்குப் பின்னர் வடிவேலு நடித்த இம்சை அரசன் குறிப்பிடத்தக்கது. தமிழில் அன்று தொடக்கம் இன்று வரை எத்தனையோ வரலாற்று நகைச்சுவைப்படங்கள் வெளிவந்திருந்தாலும் என்.எஸ்.கிருஷ்ணன் தொடக்கி விட்ட அந்த நகைச்சுவை கலந்த வரலாற்று படங்களின் வரிசையில் வடிவேலுவின் படங்களும் வந்து இணைகின்றன.

தற்போது நடித்துக்கொண்டிருக்கும் நகைச்சுவை நடிகர்களுக்கு இல்லாத தனிச்சிறப்பு வித்தியாசமான நடிப்பாற்றலை வெளிப்படுத்துவதான களம் வடிவேலுவிற்கு கிடைத்து வருகின்றது. இதனை ஓரளவு திருப்தியாக நிறைவுசெய்துள்ளார் என்றே கூறலாம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசிப் பக்கம்

## இஸ்லாமிய இலக்கியம் பற்றி...

தமிழ் மொழியில் எழுதப்பட்டவை யாவும் 'தமிழ் இலக்கியம்' என்று அழைக்கப்பட்ட அடையாளத்தினுள்ளிருந்து விலகி அதனுள் ஒருபிரிவாக இஸ்லாமிய மதம்சார் இலக்கியங்களுக்கு ஒரு தனித்துவ அடையாளத்தை அளித்ததில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தின் உருவாக்கமும் அதன் வளர்ச்சியும் வரலாற்றுத் தேவையாக அக்காலத்தை முக்கியத்துவப்படுத்தியது.

இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் என்பதற்கு அதன் ஆரம்பக் கர்த்தாவான மர்ஹூம்.எம்.எம்.உவைஸ் அவர்கள் குறிப்பிட்டிருந்த விளக்கம் 'இஸ்லாமியக் கொள்கைகளைக் கருப்பொருளாகக் கொண்டு படைக்கப்பட்ட தமிழ் நூல்களே இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் என வழங்கப்படுகிறது' என்பதாகும். இதன்படி ஆரம்பகாலத்திலிருந்து இதன் உள்ளடக்கமானது இஸ்லாமிய கொள்கை சார்ந்த படைப்புகளை ஆய்வு செய்து அடையாளப் படுத்திக்கொண்டும் வந்தது.



நவாஸ் சௌபி

ஆனால், இனிவருகின்ற எதிர்கால சந்ததியினருக்கு இஸ்லாமியத் தமிழ் இலக்கிய அடையாளத்தைக் கையளிப்பதிலும் அதன் தொடர்ச்சியைப் பாதுகாப்பதிலும் நவீன இலக்கியங்களை இதனுள் உள்ளடக்குவதிலும் நாம் சில மாற்றுக்கருத்துகளை முன்வைக்க வேண்டிய காலத் தேவை இன்று எழுந்துள்ளது.

இன்றுள்ள முஸ்லிம் படைப்பிலக்கியங்களுக்கு இஸ்லாமியத் தமிழ் இலக்கிய அங்கீகாரத்தினை வழங்க முடியாதிருப்பதுதான் இன்று நாம் எதிர்நோக்குகின்ற மிக முக்கியமான ஒரு பிரச்சினையாகும். ஏனெனில், இன்று எழுதுகின்ற படைப்பிலக்கியங்கள் எதுவும் இஸ்லாமிய இலக்கியத்தின் வரையறைக்குள் வைத்து மதிப்பிடக் கூடியவை அல்ல என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுகின்ற ஒரு விடயம்.

இஸ்லாத்தை தமிழில் எழுதுகின்ற போது பெறப்படுவதே இஸ்லாமியத் தமிழ் இலக்கியம் என்ற வரையறையுடன் வைத்துப் பார்க்கும்போது எழுதுகின்றவரின் அடையாளத்தைவிடவும் அவர் எழுதியதிலுள்ள பொருள்தான் இங்கு முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. இதனால் இஸ்லாமிய அறநெறிகளுக்குட்பட்டு எழுதாத சமூக வாழ்வியல் இலக்கியங்களை நாம் எங்கு சென்று அடையாளப்படுத்துவது என்கின்ற கேள்வி பிறக்கின்றது.

இன்று எழுதுகின்ற நவீன படைப்பிலக்கியங்களை இஸ்லாமியத் தமிழ் இலக்கியமாக வரையறுப்பதில் எம்மிடம் எந்த அளவுகோல்களுமில்லை. இதனால் முற்கால புலவர் பாடல்களையே இன்றும் நாம் இஸ்லாமிய இலக்கியங்களாக அரைத்த மாவை அரைப்பது போன்று அரைத்துக்கொண்டிருக்கின்றோம். கடந்துபோன 50 வருடங்களுக்கு முந்திய இலக்கியங்களைத்தான் நாம் இன்றும் இஸ்லாமிய இலக்கியமாகப் பேசுகின்றோம். இனிவருகின்ற 50 வருடத்திற்கான நமது இலக்கிய அடையாளம் கருத்தியல் ரீதியாக எந்த அடையாளத்தைப் பெற்றிருக்கிறது.

எனவே எழுதுகின்ற பொருளின் அடிப்படையில் மதம், பக்தி இலக்கியம் என்ற வரையறைக்குள் சுருங்கிய இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தை எழுதுகின்ற நபரை முக்கியப்படுத்தி முஸ்லிம்களால் எழுதப்படுகின்ற முழு எழுத்து வடிவங்களையும் உள்ளடக்கும் வகையில் விரிந்த ஒரு இலக்கிய அடையாளத்தை உருவாக்க முனைவதே 'முஸ்லிம் இலக்கியப்' பிரகடனமாகும்.

இது இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தை அழித்துவிடுகின்ற ஒன்றல்ல. அதன் தொடர்ச்சியைப் பதிவு செய்கின்ற மற்றொரு வடிவம். முஸ்லிம் இலக்கிய அடையாளத்தினுள் பிரதானமான ஒரு பிரிவாக இஸ்லாமிய இலக்கியத்தை வைத்துக்கொண்டு முஸ்லிம்களால் எழுதப்படும் ஏனைய எல்லா இலக்கிய வகைகளையும் அதன் உள்ளடக்கங்களையும் வரையறுத்து வடிவமைத்து முஸ்லிம் இலக்கியப் பிரகடனத்தை முன்மொழிகின்றோம்.

ஒரு வரலாற்றுத் தேவை உருவாக வேண்டுமானால் அதை யாரைக் கொண்டேனும் ஒரு வரலாறு உருவாக்கிக்கொள்ளும் என்ற அடிப்படையில் முஸ்லிம் இலக்கியம் என்பது இன்று ஒரு வரலாற்றுத் தேவையாக எழுந்துள்ளது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் அபிமான சமகாலம் இப்பொழுது உங்கள்

Tablet மற்றும் Android phone களில்




இப்பொழுதே Download செய்யுங்கள்!

Available on play.google.com

Available on www.magzter.com

Feedback and comments : samakalam@expressnewspapers.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Printed and published by Express Newspapers (Ceylon) (Pvt) Ltd, at No.185,Grandpass Road,Colombo -14, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org